
கோகுலம்

GOKULAM

ஜூலை '86 ரூ 2.





செய்குத்தம்பி பாவலர்

தோற்றம் : 31-7-1872 மறைவு: 1950



புகைப்படம்: கோவை சீதாராம்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்

— பாரதியார்

1986 ஜூலை இதழ்
மலர் 4 இதழ் 6
தனிப்பிரதி ரூ 2/—
ஆண்டுச் சந்தா ரூ 24/—

கௌரவ ஆசிரியர் :
அழ. வள்ளியப்பா

அருமைச் சிறுவர் சிறுமியரே,


பள்ளிக்கூடங்கள் திறந்து மேல் வகுப்புகளுக்குச் சென்றிருக்கும் அனைவருக்கும் எங்களின் நல்வாழ்த்து. ஒரு சிலர் தேர்ச்சி பெறும் வாய்ப்பினை இழந்திருக்கலாம். அதற்காக அவர்கள் மனம் தளரக் கூடாது. ஊக்கமுடன் உழைத்து இனிவரும் தேர்வுகளிலெல்லாம் நிறைய நிறைய மதிப்பெண்கள் பெற்று, வெற்றிமேல் வெற்றி அடைவார்கள் என்று நம்புகிறோம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் அறிவித்த கோடை விடுமுறைக்கான பரிசுப் போட்டிக்குத் தினமும் வந்து சேர்ந்துள்ள விஷயங்களைப் பார்க்கும்போது, இத்தகைய போட்டிகளில் உங்களுக்குள்ள ஆர்வத்தையும், ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளிடம் நீங்கள் கொண்டுள்ள பெருமதிப்பையும் நன்கு உணர முடிகிறது. இதன் மூலம், நீங்கள் நம் இதிகாசங்களை, ஆழ்வார்களை, நாயன்மார்களை, தேச பக்தர்களை, புண்ணிய க்ஷேத்திரங்களை அறிந்து கொள்ளும் நல்ல வாய்ப்பும் இந்த இளம் வயதிலே ஏற்படுகிறதல்லவா? உண்மையிலே நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்தான்!

கேரளத்தில் ஜவஹர் பாலபவனம் (திருவனந்தபுரம்), ஆந்திராவில் ஆந்திர பாலால அகாடமி, (ஹைதராபாத்), கர்நாடகத்தில் மக்கள் சாகிதி அகாடமி (பெங்களூர்) என்னும் நிறுவனங்கள் சிறுவர் நலனில் அக்கறை கொண்டு பணிபுரிந்து வருகின்றன. இந்த இதழில் கேரளத்தில் ஜவகர் பால பவனம் பற்றிய கட்டுரையைப் படிக்கும்போது, இப்படி நம் தமிழகத்திலும் ஒரு நிறுவனம் என்று அமையுமோ என்ற ஏக்கம் உண்டாவது இயற்கையே. விரைவிலே அந்த ஏக்கத்தை நம் தமிழக அரசு நீக்குமென நம்புகிறோம்.

— அழ. வள்ளியப்பா.

இந்த இதழ் எழுத்தாளர்கள்



இரா. வசந்தராசன்

பிருந்தாவன கதாசிரியர்





தா. இராஜ்குமார் எம். நிர்மலா


பிருந்தாவனக் கவிஞர்கள்



வி.எம். பாரதி



எம்.ஜி. இராமச்சந்திரன்



சி. சிவஜோதி

சாரீதபால்

* சுபாஷ் சந்திரபோஸின் கதையைப் படித்தேன். ஒரு வெள்ளைக்கார ஆசிரியர் சுபாஷை அடிக்கும்போது எனக்கே ஆவேசமும் கோபமும் வந்துவிட்டன! அந்த அளவுக்கு உணர்ச்சி ஊட்டும் கதை இது.

— சி. எல். சரவணன் (706), மதுரை

* கண்ணதாசன் எழுதிய 'சேரன் மா தேவி' என்ற நூலுக்கு சாகித்ய அகாதமி பரிசு கிடைத்ததாகக் குறிப்பிட்டிருப்பது தவறு. 'சேரமான் காதலி' என்பதுதான் அதன் சரியான பெயர். அது கல்கியிலே தொடர் கதையாக வந்திருக்கிறதே!

— க.ப. சிவா (3450), திருநெல்வேலி—7

* தமிழகத்தின் கவிக்குயில் சௌந்தரா கைலாசம் அவர்களின் 'குழந்தைப் பருவம்' மிக நன்றாக இருந்தது. அவரைப் பற்றியும் அவர் குடும்பத்தினரைப் பற்றியும் நாங்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்கள் அக்கட்டுரையில் இருக்கின்றன.

— கே. ஸ்ரீதேவி, சென்னை—17.

* 'அக்கினி பூதம்' படிக்கப் படிக்கத் திகிலாக இருக்க, கட்டை விரல் டாம் கதை அந்தத் திகிலை விரட்டி சமப்படுத்திவிட்டது.

— ஆர். செந்தில்நாதன்,
ஆர். சந்திர கலா
கே. பத்மா, கோவை.

* என்ன இது, வரவர 'கேளுங்கள்; சொல்கிறோம்' இரண்டு பக்கங்களாக குறைந்துவிட்டது? நான்கு பக்கங்களாவது வெளியிடுங்கள்.

— சி. ராமநாதன், திருச்சி—14.

* ஆர். பரிமளா ராஜேந்திரனின் 'நல்ல மனம் வேண்டும்' கதை, பணத் திமிர் பிடித்த சிறுவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுகிறது. ஆனால், படங்கள்தான் பொருத்தமாயில்லை.

— சி. சரோஜா, செங்கற்பட்டு.


* வளரும்குழந்தைகளுக்கு ஊட்டம்மிகுந்த டானிக் கோகுலம்.

— அ. சரவணராசன், திட்டக்குடி—6.

மின்மினிக் கதைகள்

அண்ணா சொன்னவை

இரயிலும் சுண்டலும்



ஒரு சமயம் இரயிலில் பயணம் செய்த ஒரு வயோதிகர் இரயிலிலே உட்கார்ந்து கொண்டு பிளாட்பாரத்திலே விற்கும் கடலைச் சுண்டலை வாங்க விரும்பினார். ஒரு கையிலே வாங்கினால், கீழே விழுந்துவிடும் என்று, மிகுந்த கவனமாக இரண்டு கைகளையும் நீட்டி வாங்கினார். சன்னல் கம்பியின் நடுவே இருந்த கட்டையைக் கவனிக்காமல், கட்டைக்கு இந்தப் பக்கமாக ஒரு கையையும், அந்தப் பக்கமாக ஒரு கையையும் வெளியே நீட்டி இரண்டு கைகளையும் ஒன்றாக வைத்துக் கொண்டு சுண்டலை வாங்கினார்.

சுண்டல் கொடுத்தாகிவிட்டது. சுண்டல் கீழே கொட்டிவிடுமே என்ற பாதுகாப்பு உணர்ச்சியுடன் இரண்டு கைகளையும் நீட்டிய வரையில் அவர் அறிவாளிதான்! ஆனால் வாங்கின பிறகு கையை எடுக்க வேண்டுமே! எடுத்தால் — கைகளை நீக்கினால், சுண்டல் கீழே விழுந்துவிடும்; கைகளை நீக்காவிட்டால், அவை உள்ளே வராதல்லவா?

வேறு வழியின்றி தனித்தனியே இரண்டு கைகளிலும் சுண்டலைப் பிடித்துக் கொண்டு கைகளை உள்ளே இழுத்துக் கொண்டார். பாதிக்குப் பாதி சுண்டலை ஓடும் இரயிலில் பறி கொடுத்தார்.

திருடனின் உபதேசம்

''வாருங்கோ! நமஸ்காரங்கோ! நேற்றுத்தான் ஜெயிலிலிருந்து வந்தேனுங்க.''

''என்னப்பா பிரமாதமா தோத்திரம் செய்யறே?''



"என்னமோ போங்க, நீங்கதான் நம்மைத் தண்டிச்சுட்டீங்க. இருந்தாலும் என் மனத்திலே குறையில்லே. என்னாலே உங்களுக்கு வந்த நன்மையைத்தான் நீங்க மறந்தே போய்விட்டீங்க!"

"என்ன! என்ன! நீ எனக்கு நன்மை செய்தாயா? என் வீட்டிலே புகுந்து திருடினவன் நீ. நாக்குக் கூசாது எனக்கு நன்மை செய்ததாகச் சொல்கிறாயே, என்ன துணிச்சலடா உனக்கு?"

"அவசரப்படாதீங்க. நான் உங்க வீட்டிலே புகுந்து திருடினது உண்மைதான். ஆனால் நான் அப்படிச் செய்ததால்தானே, உங்க வீட்டிலே அதற்குப் பிறகு, அஜாக்கிரதை என்ற கெட்ட வழக்கமே போச்சு? இரவிலே கதவு சரியாகத் தாளிடப்பட்டதா இல்லையா என்று ஒரு தடவைக்கு நூறு தடவை பார்க்கிற வழக்கம், கொஞ்சம் சப்தம் கேட்டாலும் திடுக்கிட்டு எழுந்திருக்கிற வாடிக்கை — இப்படி எவ்வளவோ நல்ல குணங்கள் உங்க வீட்டுக்கு ஏற்பட்டுள்ளன. நான் திருடினதாலே இவ்வளவு திருத்தம் உங்க வீட்டுக்கு ஏற்பட்டது. இது யாரால்? என்னால்தானே!"

திருடன், தான் திருடிய வீட்டுக்குச் சொந்தக்காரரிடம், இது போலத் திரு உபதேசம் செய்தான். வீட்டுக்காரருக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தார்.

விசித்திர விருந்து!

"நண்பர்களே! என் அழைப்பிற்கு இணங்க நீங்கள் இந்த விருந்திற்கு வந்து என்னை, கௌரவப்படுத்தியதற்காக என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வாருங்கள். விருந்து மண்டபம் செல்வோம்" என்று அந்த அம்மையார் விருந்தினரை அன்புடன் அழைத்தார். (ஐரோப்பாவில் மும்முரமாகப் போர் நடந்தபோது இது நிகழ்ந்தது.)

மகிழ்ச்சியுடன் எல்லாரும் விருந்து மண்டபம் புகுந்தனர். பெரிய




மேஜை, எதிரிலே வரிசையாக நாற்காலிகள், காலத்திற்கேற்ற தட்டுகள், கோப்பைகள் யாவும் ஒழுங்காக இருந்தன.

விருந்தினர் அமர்ந்தனர். அக மகிழ்வுடன் விருந்து உண்ணத் தயாராயினர். ஆனால் தட்டுகள் யாவும் காலியாகக் கிடந்தன! பண்டம் இல்லை! பானம் இல்லை! பரிமாறுபவர்களும் இல்லை!

விருந்துக்கு அழைத்த அம்மையார், "நண்பரீர், இவ்விருந்தின் நோக்கம் யாதெனில், போரிலே சிக்கி அவதிப்படும் ஐரோப்பாவிலே, இப்போது பெரும்பாலான இல்லங்களிலே, இப்படித்தான் சாப்பாட்டு நேரத்திலே வெறும் தட்டுகளைக் கண்டு கலங்கும் நிலை இருக்கிறது. அந்தப் பட்டினியை உணர்த்தவே இந்த மாதிரி ஏற்பாடு செய்தேன். நாம் விருந்துக்கு வந்தோம். ஆனால், உண்ணவில்லை, ஒன்றும் இல்லாததால். இதுபோல் இலட்சக்கணக்கான மக்கள் உணவின்றித் தவிக்கின்றனர். இந்தக் கஷ்டத்தைப் போக்க நம்மால் ஆன உதவி செய்ய வேண்டும் என்று உங்களைத் தூண்டவே இப்படி ஏற்பாடு செய்தேன்" என்றாராம்.

எமலோகத்தில்



ஒருவன் — ஒரு பெரிய பாவி, மேல் உலகத்தில் எமன் முன் நிறுத்தப்பட்டானும். சித்ரகுப்தன், "இவன் ஒரு பெரிய பாவி. பஞ்சமா பாதகம் அத்தனையும் புரிந்தவன்" என்று கணக்குக் கூறினாராம்.

"அப்படியானால் இவனை நரகத்தில் தள்ளுங்கள்" என்றானாம் எமன்!

உடனே சித்திரகுப்தன், "இவன் இத்தனை பாவங்களைச் செய்திருந்தாலும் ஒரே ஒரு புண்ணியம் மட்டும் செய்திருக்கிறான்" என்றாராம்.

"என்ன அது?" என்று எமன் கேட்டபோது, சித்திரகுப்தன், "இந்த மனிதனை ஒருநாள் ஒரு கிழவி, கோவிலுக்குப் போக வழி கேட்டபோது, 'அதோ, அந்தப் பக்கமாகப் போ' என்று விரலைக் காட்டிக் கூறினான். இந்த ஒரு புண்ணியம் மட்டும் செய்திருக்கிறான்" என்றாராம்.

"அப்படியானால் இவனது அந்த விரலுக்கு மட்டும் பன்னீர் தெளித்து, சந்தனம் பூசி, சொர்க்கத்துக்கு அனுப்பு. இவனை நரகத்தில் தள்ளு" என்றானாம் எமன்.

— 'அறிஞர் அண்ணா சொன்ன குட்டிக் கதைகள் 100'
என்ற நூலிலிருந்து-தொகுத்தவர்: புகழேந்தி.
வெளியிட்டவர்: பொதுமேடைப் பதிப்பகம், மயிலாப்பூர்,
சென்னை—4.



செய்குத் தம்பிப் பாவலர்

இவர் நாகர்கோயிலை அடுத்த இலங்கடை என்ற ஊரில் பிறந்தவர். 16 வது வயதிற்குள் செய்யுள் இயற்றுவதில் திறமையுடையவர் என்ற பெயரைப் பெற்றார். அந்த வயதிலே 'பாவலர்' என்ற பட்டத்தையும் பெற்றார். மேடைப்பேச்சிலும் இவர் வல்லவராக விளங்கினார்.

பத்தொன்பதாம் வயதிலே சென்னைக்கு வந்தார். உமறுப் புலவர் இயற்றிய 'சீறாப் புராணம்' போன்ற பல புத்தகங்களைப் பிழையில்லாமல் பதிப்பித்தார். கம்பராமாயணத்தில் இவருக்கு ஆழமான பயிற்சி உண்டு. மிகவும் சுவையாகக் கம்பராமாயணப் பாடல்களை எடுத்துக் கூறுவார். பல செய்யுள் நூல்களையும் இவர் இயற்றித் தந்திருக்கிறார்.

சதாவதானம் செய்வதிலும் இவர் சிறந்து விளங்கிப் பல்லாயிரக்கணக்கான மக்களை வியப்படையச் செய்தார். இதனால், இவரை 'சதாவதானி' என்று போற்றினர்.

ஒருவர் ஒரு பாட்டின் ஆரம்ப அடி அல்லது கடைசி அடியைக் கூறி, பாட்டு முழுவதையும் சொல்லுங்கள் என்பார். மற்றொருவர், ஒரு கணக்கைக் கொடுத்து விடை கேட்பார். இன்னொருவர், பின்புறமிருந்து முதுகில் பூக்களை எறிவார். எத்தனை பூக்களை எறிந்தோம் என்று கேட்பார். அதேசமயம் மணியைப் பலமுறை அடித்து, எத்தனை தடவை அடித்தேன் என்பார் வேறு ஒருவர். இப்படி ஒரே சமயத்தில் பலர் கேட்க, எல்லாவற்றுக்கும் சரியாக விடைகள் கூறுவதை 'அவதானம்' என்பார்கள். ஒரே சமயத்தில் நூறு செயல்களுக்கு விடை கூறுபவர்தான் சதாவதானி.



நாவலர் சோமசுந்தர பாரதியார்

சோமசுந்தர பாரதியாரும், சுப்பிரமணிய பாரதியாரும் எட்டையபுரத்தில் பிறந்தவர்கள்.

ஒரு சமயம் திருநெல்வேலிக்கு வந்திருந்த யாழ்ப்பாணப் புலவர் ஒருவர் செய்யுள் போட்டி வைத்தார். அப்போட்டியில் கலந்து கொண்ட புலவர்களது செய்யுட்களை விட, சுப்பிரமணிய பாரதியார் எழுதிய செய்யுளே மிகச் சிறப்பாக இருந்தது. அதை அடுத்து சோமசுந்தர பாரதி எழுதிய செய்யுள் இருந்தது. எனவே, யாழ்ப்பாணப் புலவர் இந்த இருவருக்கும் 'பாரதி' என்ற பட்டத்தை அந்தப் புலவர் சபையிலே வழங்கினார்.

சுப்பிரமணிய பாரதியாரைப் போலவே இவரும் நாட்டுப் பற்றும் தமிழ்ப் பற்றும் கொண்டிருந்தார்.

வழக்கறிஞராயிருந்து மாதந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் பெற்று வந்த இவரை, அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தமிழ்த் துறைத் தலைவராயிருக்குமாறு ராஜா அண்ணாமலை செட்டியார் கேட்டுக் கொண்டார். தமிழ்மொழிக்குத் தொண்டாற்ற, இது நல்ல வாய்ப்பு என்று கருதி, உடனே ஒப்புக் கொண்டார். சிறந்த பல தமிழ் அறிஞர்களை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு.

இலங்கையிலிருந்த ஈழ நாட்டுப் புலவர் மன்றம் இவருக்கு 'நாவலர்' பட்டத்தையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனது வெள்ளி விழாவில் 'டாக்டர்' பட்டத்தையும் வழங்கின. சென்னை, தமிழ் எழுத்தாளர் சங்கம் இவரது எழுத்துப் பணியைப் பாராட்டி, கேடயம் வழங்கிக் கௌரவித்தது.

என் குழந்தைப் பருவம்



சரோஜினி வரதப்பன்

ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் அவர்கள், தமது 20வது வயதிலிருந்து சமூக சேவை செய்து வருபவர். பல சமூக சேவைக்கழகங்களின் தலைவியாக இருந்து அருந்தொண்டாற்றி வருபவர். 1973 ஆம் ஆண்டு இவரது சேவையைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கியது. சென்னை நகர ஷெரீப் பதவியையும் வகித்தவர் இவர். பல அயல் நாடுகளுக்கும் சென்று மாதர் சங்கங்களின் பணிகளைக் கண்டறிந்தவர். இவரது செஞ்சிலுவைச் சங்க சேவைக்காக 1980ம் ஆண்டில் பாரத ராஷ்டிரபதி தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தார். இவர் தமிழகத்தின் முதலமைச்சராயிருந்த உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்களின் அருமை மகள்.

நான் பிறந்தது மயிலாப்பூரில். பிரபல வக்கீலாக இருந்த என் பாட்டனார் திரு. கோபாலசாமி முதலியார் வீட்டில்தான் பிறந்தேன். கச்சேரி ரோட்டில் உள்ள அந்த வீட்டில், தற்போது தபால் ஆபீஸ் இருக்கிறது.

என் பாட்டனாரின் குடும்பத்தில் நான் முதல் பேத்தி. என் பெற்றோருக்கும் நான் முதல் பெண். எனவே, சீரும்சிறப்புமாக வளர்க்கப்பட்டேன்.

என் தகப்பனாரும் வக்கீலாக இருந்தார். கபாலீஸ்வரர் கோவிலுக்கு எதிரே சன்னதித் தெருவில் எங்கள் வீடு.

என் பாட்டனாரும், என் தகப்பனாரும் பழுத்த தேசியவாதிகளாக இருந்ததால், தேசியப் போராட்டங்கள், சுதந்திர இயக்கங்கள் இவற்றில் மிகுந்த ஈடுபாடு எனக்கு இளமையிலே ஏற்பட்டது.

கான்வென்ட் படிப்பை நாடாது என் தகப்பனார் என்னை மயிலாப்பூரிலுள்ள தேசியப் பெண்கள் பள்ளியில சேர்த்தார். அதற்குமுன் என் அட்சராப்பியாசம் அப்பொழுது பிரபலமாயிருந்த தாடி வாத்தியார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஆரம்பமாயிற்று. அவர் போட்ட அஸ்திவாரம் இன்னும்எனக்கு உதவியாயிருக்கிறது. அரை வாய்ப்பாடு, கால் வாய்ப்பாடு, சுலோகங்கள் சொல்லுவது நல்ல ஞாபக சக்தியை வளர்க்க உதவியது. முதல் வகுப்பிலிருந்து, 9 வது வகுப்பு முடிய தேசியப் பெண்கள் பள்ளியில் தான் படித்தேன். தியாசாபிகல் சொஸைடியின் நிர்வாகத்தில் நடந்த பள்ளியில் ஓர் அமெரிக்க சகோதரி மிஸ் வீல் (Miss Wheel) என்பவர் முதல்வராக இருந்தார். அவருடைய சகோதரி எங்களுக்கு நீதி போதனை வகுப்புகளை நடத்துவார். அவரது போதனைகள் எங்களுக்கு நல்லொழுக்கத்தை ஏற்படுத்தின என்பதை மறுக்க முடியாது. அதே போல சமஸ்கிருதம் மேலும் பலப்படுத்தியது. என் தகப்பனார் என்னையும் என்னுடன் படித்த என் சித்தி பட்டம்மா அளகேசனையும்சம்ஸ்கிருதத்தை இரண்டாவது மொழியாக எடுக்கச் சொன்னார்.

எங்கள் சம்ஸ்கிருத ஆசிரியர் கண்டிப்பானவர். நெற்றியில் பொட்டு இல்லாமல் வகுப்பிற்கு வரவிட மாட்டார். உச்சரிப்பு சரியாக இருக்கவேண்





டும். சப்தங்களை அழகாக எடுத்துச் சொல்லுவார்.

வெங்கடராம சாஸ்திரியின் பேத்தி சகுந்தலா, நான், ருக்மிணி என்ற எங்கள் மூவருக்கும் எப்பொழுதுமே கடும் போட்டி இருக்கும். நாங்கள் மூவரும்தான் வகுப்பில் முதல் மாணவிகளாக வருவோம். ஆயினும், எங்களுக்குள் நெருங்கிய நட்பு வளர்ந்ததே தவிர, துவேஷம் கிடையாது.

நாங்கள் படித்த போது கீழ் வகுப்புகள் ஓலைக் கொட்டகைகளிலே நடந்து வந்தன. எட்டாவது வகுப்பு கட்டிடத்தின் மாடியில். எனவே, எங்களுக்கு மேல் வகுப்பிற்குச் சென்ற போது ஒரு பெருமிதம் ஏற்பட்டது.

பள்ளியில் விளையாடுவதற்கு வேண்டிய வசதிகள் இருந்தன. பாஸ்கட் பால், ரவுண்ட் ரேஸ், டென்னிகாய்ட் என்று பல விளையாட்டுகள். ஆனாலும், எனக்கு வெயிலில் வேர்த்து விளையாடப் பிடிக்காது. சற்று ஒதுங்கியே இருப்பேன். அந்த நேரத்தில் புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருப்பேன்.

மாலை நேரங்களில் சிறிது நேரம் பாண்டி ஆடுவேன். இதன் இடையே எங்களுக்குக் கட்டாய வகுப்பு ஒன்று உண்டு. அதுதான் தோட்டக் கலை. ஒவ்வொருவருக்கும் ஒரு பாத்தி கொடுக்கப்படும். நாங்கள் மண்ணை வெட்டி, பாத்தி கட்டி, தண்ணீர் பாய்ச்சி, கறிகாய், கீரை போடப் பழகினோம். ஆரம்பத்தில் மண்வெட்டியால் காலை வெட்டிக் கொண்டதும் உண்டு.

தோட்டக் கலையைப் போலவே மற்றொரு வகுப்பு, கைக்கு வேலை தருவது. களிமண்ணால் பொம்மைகள் பண்ணுவது, தையல் வேலை செய்வது, பிரம்புத்தட்டுப்போடுவது என்று பயனுள்ள பல கைவேலைகள் கற்க நல்ல வசதி இருந்தது. எனக்கு ஊசி வேலையிலும் ஓவியம் வரைவதிலும் அதிக சிரத்தை கிடையாது. இந்த இரண்டைத் தவிர, மற்றவற்றில் முதன்மையாக வருவேன்.

நான் ஐந்தாம் வகுப்புத் தேர்வு எழுதியபோது மிக நன்றாக எழுதியிருப்பதாகச் சொல்லி, ஏழாம் வகுப்புக்குச் செல்ல அனுமதித்தார்கள். அதாவது Double Promotion கொடுத்தார்கள். ஆனால், என் தகப்பனார், இடையிலே ஒரு வகுப்பைத் தாண்டிக் கொண்டு நான் செல்வதை விரும்பவில்லை. முதல் ஃபாரத்திலேயே (ஆறுவதில்) படித்து முதன்மையாக வா' என்று சொல்லிவிட்டார்.

முதல் ஃபாரத்திலே ஆங்கில போதனை முறை. அன்றைய கல்வித் தரம் மிக உயர்வாகவே இருந்தது. பூகோளம், சரித்திரம், விஞ்ஞானம் என்று தனித்தனியாக உயர்ந்த வகையில் படித்ததன் பயன் இன்றும் நன்கு தெரிகிறது. அப்போதிருந்த ஆசிரியர்களும் முதல் தரமானவர்களாக அமைந்து எங்களுக்கு நல்ல முறையில் போதித்தார்கள்.

மீனம்பாள் என்ற ஆங்கில ஆசிரியையின் ஆங்கில நடை கல்லூரியில் கூட இன்று காண முடியாது. அவர்

எங்களுக்குத் தெய்வமாக இருந்தார். மிகவும் கண்டிப்பானவர். சிரிக்கவே மாட்டார். ஆனால், நன்றாகப் படிக்கும் குழந்தைகளை ஊக்குவிப்பார். இன்று எனக்கு ஓரளவு ஆங்கிலம் சரளமாகப் பேச வருவது அவரால்தான். அதேபோல் விசாலாட்சி நாராயணசாமி (சித்ரா நாராயணசாமி) பூகோள ஆசிரியை. அவரும், குஞ்சிதம்குருசாமியும் சிறந்த ஆசிரியைகளாக விளங்கினர். இவர்கள் எல்லாரும் எங்களுக்குச் சிறந்த கல்வியையும், பண்பையும் நல்லொழுக்கத்தையும் ஊட்டினார்கள்.

என் பெற்றோர் கல்வி அறிவுடன், சங்கீதத்திலும் எனக்கு நல்ல பயிற்சி அளித்தார்கள். எனக்கு நெருங்கிய பள்ளிச் சிநேகிதி ஜெயா என்பவள் ரொம்பநன்றாகப்பாடுவாள். எனவே, அவளது சங்கீத ஆசிரியரான சுப்பய்யர் என்ற பிரபல பிடில் வித்துவானையே பெரும்பாடுபட்டு என் ஆசிரியராக அமர்த்திக் கொண்டேன். ஜெயாவின் பெண் இன்று பூந்தமல்லியில் உள்ள என் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிகிறாள்.

மாலையில் பள்ளியிலிருந்து வந்தவுடன் பள்ளி உடைகளை மாற்றிக் கொண்டு கை கால் அலம்பி, பாட்டு வாத்தியாரிடம் சங்கீதம் பயில வேண்டும். ஏறக்குறைய ஐந்நூறு கீர்த்தனைகளை எனக்குப் பயில்வித்த பெருமை சுப்பய்யரையே சாரும். பின்னால், பரூர் சுந்தரமய்யரிடமும் பிடில் கற்றுக் கொண்டேன். மயிலாப்பூர் கௌரி அவர்கள் பதங்கள் கற்பித்தார். இதன் நடுவே, என் தகப்பனார் தேசியவாதியானதால், சனி, ஞாயிறுகளில் எங்களை கிழக்கு மாட வீதியிலிருந்த ஈ. கிருஷ்ணய்யரிடம் காலை நேரங்களில் பாரதியார் பாடல்கள் கற்றுக் கொள்ளவும், மாலை நேரங்களில் வட சென்னைப் பகுதியிலிருந்தவிலை விசாலாட்சி அவர்களிடம் ஹிந்தி பஜனை கற்றுக் கொள்ளவும் ஏற்பாடு செய்துவிட்டார். எனவே, எங்களுக்கு விடுமுறை நாட்களில்கூட ஓய்வு கிடையாது. ஆரம்பத்தில் எனக்குப் படிப்பில் இருந்த அக்கறை சங்கீதத்தில் இல்லை. என் சித்திக்கு நல்ல சாரீரம். நன்றாகப் பாடுவாள். அவளுடன் சேர்ந்து பாடுவேன். அவள் நிறுத்தினால் நானும் நிறுத்திவிடுவேன். பின்னர்தான் எனக்குச் சங்கீதத்தில் அக்கறை ஏற்பட்டது.

பாரதி பாட்டுப் போட்டிகளில் நாங்க்ள் கலந்து கொண்டு வெள்ளிக் கோப்பைகளும் வாங்கியிருக்கிறோம். என் தம்பியும் ஐந்து வயதிலேயே பாரதியார் பாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றிருக்கிறான்.

அக்காலத்தில் எங்கு பொதுக் கூட்டம், காங்கிரஸ் நிகழ்ச்சிகள் நடந்தாலும், நானும் என் சித்தியும் பிரார்த்தனை கீதம், கொடி வணக்கப் பாட்டு ஆகியவற்றைத் தயக்கமின்றித் தைரியமாகப் பாடுவோம். தேசியப் போராட்டத்தையொட்டி, விடியற்காலம் மாட வீதி முழுவதும் அம்புஜம்மா, கோதை நாயகி அம்மா, மஞ்சு பாஷிணி, அம்மு





அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்



பெ. தூரன்

சுவாமிநாதன் இவர்களுடன் என் தாயாருடன் நானும் பாடிக் கொண்டு சென்றது எனக்குப் பசுமையாக நினைவில் நிற்கிறது.

ஊர்வலங்கள், தேசியக் கூட்டங்கள் முதலியவற்றுக்கு நாங்கள் தவறாமல் செல்வோம். எனவே, சிறு வயது முதலே தேசத் தலைவர்கள் அறிமுகம் ஏற்பட்டு, தேசப் பற்று வளர்ந்தது. முரட்டுக் கதர் பாவாடையைக் கட்டிக் கொண்டுதான் போக வேண்டும். என் தாயாரும் ஒரு சிறந்த தேசியவாதி. காந்தீயத்தில் பக்தி உள்ளவர். எனவே, எங்களுக்கு எளிமை, உயர்ந்த பண்புகளை அவர் ஊட்டி வளர்த்தார்.'

வீட்டில் 'டியூஷன்' வைப்பது அப்பாவிற்குப் பிடிக்காது. படிப்பிலும், சங்கீதத்திலும் எங்களுக்கு 'டியூஷன் வாத்தியார்' எங்கள் தாயார் தான். என் தாயார் கண்டிப்பான பேர் வழி. நேரம் தவறி எதையும் செய்ய முடியாது. பிறகு, நாங்கள் வடக்குமாட வீதியில் குடியேறின பின்பும், பள்ளிக்கு நடந்துதான் போக வேண்டும். காலையில், அவசரம் அவசரமாகச் சாப்பிட்டு, கையில் தயிர் சாதம் தான் கொண்டு போவோம். மாலை வீட்டிற்கு வந்தவுடன் கோகோ சாப்பிடுவோம். அம்மாவுக்கு சங்கீதத்திலே மிகுந்த ஈடுபாடு உண்டு. நன்ருக பிடில் வாசிப்பார்கள். அம்மாவுடன் ரசிக ரஞ்சனி சபை கலைநிகழ்ச்சிகளுக்குத் தவருது போவோம். ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், சடகோபாச்சாரி இவர்களின் கதாகாலட்சேபங்களை ஆர்வமுடன் கேட்போம். அபூர்வமாக ராகவாச்சாரி நாடகம் நடக்கும். அப்பாவிடம் மன்ருடி சனி, ஞாயிறுகளில் வடசென்னையில் நடக்கும் எஸ்.ஜி. கிட்டப்பா — சுந்தராம்பாள் மற்றும் பல பிரபல நாடகங்களும் பார்ப்பதுண்டு. சினிமா அதிகமாகப் பார்த்ததே கிடையாது.

சுதந்திர இயக்கம் தீவிரமான சமயம். தேசத்தில் ஒரே கொந்தளிப்பு. ஒருநாள், நாங்கள் பள்ளியிலிருந்து வடக்கு மாடவீதியில் உள்ள எங்கள் வீட்டிற்கு மாலை திரும்பும்போது, எங்கள் வீட்டிற்கு முன் ஒரே போலீஸ் கூட்டம்!

பயந்து கொண்டு உள்ளே சென்ருல், எங்கள் தாயார் போலீஸ் அதிகாரிகளுக்கு வீட்டைச் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்தார். திடீர் சோதனை போட்டு, அரசுக்கு விரோதமான தஸ்தாவேஜுகளை எடுக்குமாறு அவர்களுக்கு உத்தரவாம்!

அப்பாவின் ஆபீஸ். மேஜைகளை அலசினுர்கள். ஒன்றும் கிடைக்கவில்லை. அவர் அறையில் மாட்டியிருந்த பகதூர் பகத்சிங் படத்தை அரசிற்கு விரோதமானது என்று கழற்றி எடுத்துச் சென்று விட்டார்கள். மாடவீதியே திரண்டுவிட்டது. இம்மாதிரியான இக்கட்டுகளை எங்கள் தாயார் வெகு சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவார்.

ஒருநாள் என் அப்பாவையும் என் பாட்டனுர் முத்துரங்க முதலியாரையும் சென்னை பூக்கடை அருகே தடியால் அடித்துச் சிறைப்படுத்தி விட்டார்கள். வேலூர் சிறையில் அவர்களை வைத்தார்கள். இத்தகைய சூழ்நிலையில்தான் என் பள்ளி வாழ்க்கை தொடர்ந்தது. வாரத்திற்கு ஒரு முறை தான் சிறையில் சென்று அரை மணி நேரம் அவர்களைப் பார்க்கலாம். அப்பா எழுதும் கடிதங்கள் யாவும் சோதனை செய்யப்பட்ட பிறகே எங்களுக்குக் கிடைக்கும். இவ்வாறு நாட்கள் சென்றன.

என்னுடைய தகப்பனுரின் குடும்பம் சற்று பிற்போக்கான, பழைமையான பழக்கவழக்கங்களில்

ஊறிய ஜமீன்தார் குடும்பம். எங்கள் ஜாதியில் அப்பொழுது பெண்களை வயது வந்தபின் பள்ளிக்கு அனுப்புவதே பெரிய குற்றம். எனவே, என் பள்ளிப் படிப்பும் ஒன்பதாவதுடன் நின்று விட்டது. முதன்மையாக வகுப்பில் வரும் மாணவியை நிறுத்தக் கூடாது என்று நண்பர்கள் அப்பாவிடம் எவ்வளவோ எடுத்துக் கூறினார்கள். நாங்கள் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்ததால், வீட்டிலிருந்த வயதானவர்களை எதிர்க்க அப்பாவிற்குத் தைரியம் இல்லை. நானும் எவ்வளவோ அழுது அமர்க்களம் பண்ணினேன். ஒன்றும் நடக்கவில்லை.

என்னைச் சமாதானப்படுத்த ஹிந்தி ஆசிரியர் ஒருவரை அப்பா ஏற்பாடு செய்து, படிக்கச் சொன்னார்.

பரீட்சைகளில் வெற்றி பெற்று விஷாரத் பட்டமும் பெற்றேன். இவ்வாறு மூன்று ஆண்டுகள் வெளியில் எங்குமே போகாமல் வீட்டிற்குள் இருந்த போதிலும் 'ஹிந்து' பத்திரிகையைத் தவறாமல் படிப்பதன் மூலம் என் ஆங்கில அறிவை ஓரளவு வளர்த்துக் கொண்டேன். திருமணம் ஆன பிறகுதான் எனக்கு விடுதலை கிடைத்தது!

நவராத்திரி கொலு வைப்பதில் சிறு வயதிலே இருந்த ஆவல் இப்பொழுதும் தொடர்ந்து உள்ளது. சிறு வயதில், பத்து நாட்களும் ஆடை அலங்காரம் செய்துகொண்டு, அம்மாவின் நண்பர்கள் வீட்டிற்குச் செல்வது, அங்கு பாட்டுப் பாடுவது, பிறகு எங்கள் வீட்டிற்கு அழைப்பது என்று நல்ல முறையில் பொழுதுபோகும்.

ஒரு சமயம் நூற்றுக்கணக்கான ஸெலுலாயிட் பொம்மைகளை வாங்கி நானும் என் தாயாருமாக அத்தனைக்கும் கதர் உடை தயார் செய்தோம். எங்கள் கிராமத்தில் உள்ள தச்சரிடம் சொல்லி, மரத்திலே சின்னச் சின்ன நாற்காலிகள், மேஜைகள், பெஞ்சுகளைச் செய்து வாங்கினோம். அவற்றை வைத்து ஒரு 'குட்டிச் சட்டமன்ற'த்தைக் கொலுவில் உருவாக்கினோம்., அதை எல்லாரும் கண்டு வியந்தார்கள்.

மது விலக்கு, அந்நியத் துணி எரிப்பு, போன்றவைகளையும் பின்னால் சமுதாய நல வளர்ச்சி, கிராம வளர்ச்சி போன்றவைகளையும், என் தகப்பனார் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோது 'ராம பாதசாகர்' போன்றவைகளையும் சித்திரித்துக் காட்டுவதில் நான் திருப்தி அடைந்துள்ளேன். என் தாயாருடைய நண்பர்களில் சிலர் எங்கள் வீட்டுக் கொலுவைப் பார்த்துவிட்டு, 'இது அரசியல் கொலுவாக இருக்கிறதே!' என்று கூட வர்ணிப்பது வழக்கம்.

என் தகப்பனார் தேசத் தொண்டிலும், சிறையிலும் நாட்களைக் கழித்து வந்ததால், என் தாயாரின் மேற்பார்வையிலே பல ஆண்டுகள் இருக்க நேரிட்டது. என் சகோதரி பிறந்த போது, என் தகப்பனார் வேலூர் சிறையில் இருந்தார். அதே சமயம், என் தகப்பனாரின் பாட்டி இறந்துவிட்டார். இவ்வாறு குடும்பத்தில் பல இடுக்கண்களைச் சமாளிக்க நேர்ந்ததால், எனக்குச் சிறு வயதிலேயே முதிர்ந்த அனுபவமும், மனப்பக்குவமும் ஏற்பட்டன என்று கூறலாம்.

என் தங்கை பிறந்த சமயம், என் தாயாரின் சகோதரியின் கணவர் சர். பி. டி. ராஜன், ஜஸ்டிஸ் கட்சியில் அமைச்சராக இருந்தார். ஆனால், எங்கள் குடும்பம் ஒற்றுமையான ஐக்கியக் குடும்பமாதலால், கட்சி வித்தியாசம் பாராட்டாது, நாங்கள் சுமுகமாக ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளாகவே பழகி வந்தோம்.

கோடை விடுமுறைக்கு அம்மாவுடன் திருவாரூரிலிருக்கும் அவர்களின் தாயார் வீட்டுக்குப் போவோம். சில சமயம், அமைச்சராக இருந்த என் சித்தப்பா பி. டி. ராஜன் அவர்களுடன் ஊட்டிக்குச் செல்வோம். பாவாடை, சட்டை, அணிந்து தலையில் தொப்பி போட்டுக் கொண்டு நடப்போம். எங்கள் கொள்ளுப்பாட்டி எங்களுக்குத் துணையாக இருந்து அருமையாகத் தேவார, திருவாசகங்களைச் சொல்லிக் கொடுப்பார். அது இன்றும் நெஞ்சை விட்டு நீங்காமல் நிற்கிறது.

சிட்டுக் குருவியும் நட்சத்திரமும்



-பார்வதி விஸ்வநாதன்

செட்டியார் வீட்டுத் தாழ்வாரத்தில், ஓட்டுச் சட்டத்தின் இடுக்கில் ஒரு குருவிக் கூடு இருந்தது. அங்கு சென்ற வாரம் இரண்டு குஞ்சுகள் பிறந்தன.

தாய்க்குருவி இங்கும் அங்கும் பறந்து சென்று இரை தேடியது. குஞ்சுகளுக்கு ஊட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தது. குஞ்சுகளுக்குச் சிறகு முளைக்கத் தொடங்கியது. கீச் கீச்சென்று கத்திக் கொண்டு அவை கூட்டுக்கு வெளியே எட்டி எட்டிப் பார்த்தன.

அண்ணக் குருவியைவிட, தம்பிக் குருவிக்கு அவசரம் அதிகம். அண்ணனைத் தள்ளிக் கொண்டு மூக்கை நீட்டி எட்டிப் பார்த்தது. வீட்டில் நடமாடும் மனிதர்களைப் பார்த்தது.

மாட்டுத் தொழுவத்தைப் பார்த்தது. தெருவில் போகும் மாட்டு வண்டியைப் பார்த்தது. பூங்கொடியைப் பார்த்தது. எதிர் வீட்டுப் பாப்பா குதித்துக் குதித்து ஆடுவதைப் பார்த்தது.

''ஹய்யா....''

''என்ன ஹய்யா....?'' அண்ணன் குருவி கோபமாய்க் கேட்டது.

''அங்கே பார், அந்தப் பாப்பா குதித்துக் குதித்து விளையாடுகிறாள். நானும் எனக்குச் சிறகு முளைத்ததும், அங்கே போய் ஆடப் போகிறேன்'' என்றது தம்பிக் குருவி.

''அழகுதான்! நீ கீழே சென்று அங்கு விளையாடினால், அதோ, அங்கே தூங்குகிறது பார், கறுப்புப் பூனை, அது உன்னை ஒரே வாயில் விழுங்கி விடும்.''

தம்பிக் குருவிக்குச சப்பென்று ஆர்வம் அடங்கிப் போனது.

''சின்னவனே! பேசாமல் உன் சிறகுகளை மடக்கிக் கொண்டு உறங்கு பறக்கும் காலம் வந்ததும் எங்கே பறந்து செல்ல வேண்டும் என்று அம்மா சொல்லுவாள்'' என்று சொல்லிவிட்டு உறங்கச் சென்றது அண்ணன் குருவி.

தம்பிக் குருவிக்கோ உறக்கமே வரவில்லை. கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது.

'கீழே பறந்து சென்றால் பூனை பிடித்துக் கொள்ளும். அப்படியானால், எங்கே பறந்து சென்று விளையாடலாம்?' என்று யோசித்துக் கொண்டே இருந்தது.

மாலைப் பொழுது மறைந்து இரவு வந்தது. சின்னக் குருவி பார்த்துக்

கொண்டிருக்கும்போதே ஆரஞ்சு நிற வானம் மறைந்து கருமை வந்தது. மெல்ல அதில் கண் சிமிட்டியது ஒரு நட்சத்திரம்.

சின்னக் குருவி நன்றாக எழுந்து உட்கார்ந்து கொண்டது. தலையைச் சிலிர்த்து. கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டிப் பார்த்தது.

'ஆஹா.... என்ன அற்புதம்! என்ன அழகு.....!'

"அம்மா! அம்மா!" வியந்துபோன குருவி அம்மாவை அழைத்தது.

"என்னடா சின்னவனே? உறங்கவில்லையா நீ.....?"

"உறக்கம் வரவில்லையம்மா. அதோ வானத்தில் தெரிகிறதே. அது என்ன அம்மா?"

"அது நட்சத்திரம்."

"நட்சத்திரம் என்றால்?"

"நட்சத்திரம் என்றால் நட்சத்திரம் தான்! நீ படுத்துக் கொள்."

"அம்மா, எனக்குச் சிறகு முளைத்ததும் முதல் முதலாய் நான் அந்த நட்சத்திரத்திடம் பறந்து செல்வேன்" என்றது.

அதன் அறியாமையை அறிந்து அம்மாக் குருவி சிரித்துக் கொண்டது.

'கீழே போனால் பூனை பிடித்துக் கொள்ளும் என்று அண்ணன் சொன்னான். அதனால் நான் மேலே மேலே பறந்து சென்று அந்த நட்சத்திரத்தைக் கொத்திக் கொண்டு.வருவேன்" என்றது.

"நீ சின்னக் குழந்தை. படுத்துக் கொள்" என்று பேச்சை மாற்றியது அம்மாக் குருவி.

"அப்படிச் சொல்லாதே அம்மா. நான் கண்டிப்பாய்ப் பறந்து சென்று நட்சத்திரத்தைக் கொண்டு வருவேன்" என்றது.

"நன்றாகப் பறக்கும்போது அதைப் பற்றி நினைக்கலாம். இப்போது தூங்கு" என்றது அம்மா.

தம்பிக் குருவிக்கு நீண்ட நேரம் உறக்கமே வரவில்லை. கண் சிமிட்டும் நட்சத்திரத்தையே கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது.

தினமும் பொழுது போனதும் நட்

திருச்சி வானொலி அண்ணாவுக்குப் பாராட்டு

குன்றக்குடி ஆதீனத்தில் 23.5.86 ல் நடைபெற்ற விசாகத் திருவிழாவில், திருச்சி வானொலி அண்ணா இளசை. எஸ். சுந்தரத்தின் இலக்கியப் பணியைப் பாராட்டி, தவத்திரு குன்றக்குடி அடிகளார் 'கலைச் செல்வர்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கியதோடு, பொன்னாடை போர்த்திப் பொற்பதக்கமும் அளித்தார்.



சத்திரத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தது சின்னக் குருவி.

சில நாட்களில் குருவிகள் வளர்ந்து சிறகுகளும் வளர்ந்துவிட்டன. இறக்கைகளை விரித்துப் படபட வென்று அடித்துக் கொண்டன. அவற்றின் ஆர்வத்தை அறிந்த அம்மாக் குருவி அவைகளுக்குப் பறப்பதற்குக் கற்றுக் கொடுத்தது.

மரக் கிளைகளுக்கு இடையே அழைத்துச் சென்று பறக்கக் கற்றுக் கொடுத்தது. இரை எடுத்து உண்ணக் கற்றுக் கொடுத்தது. அவைகளுக்குத் துணையாய் இருந்து, காக்கை, கழுகு கொத்திவிடாமல் பாதுகாத்தது.

அன்று மாலை கூடு திரும்பியதும் சின்னக் குருவி அம்மாவிடம் சொன்னது:

''அம்மா! அந்த நட்சத்திரத்தைப் பிடிக்க எப்போது போகட்டும்! இப்போது போகலாம் அல்லவா! என் இறக்கைகள் எப்படி வளர்ந்துவிட்டன பார்!''

அம்மாக் குருவி திடுக்கிட்டது.

''பைத்தியம் மாதிரி உளறாதே! நட்சத்திரத்தைப் பிடிப்பதாவது. அவ்வளவு தூரம் பறக்க முடியுமா நம்மால்?'' என்றுகேலிசெய்தது அண்ணா குருவி.

''உன்னால் முடியாது. நீசோம்பேறி. கூட்டிலேயே தூங்கு. நான் வீரன். நான் பிடித்து விடுவேன்!'' என்று உடலை நிமிர்த்தி, இறக்கைகளை விரித்துக் காட்டியது தம்பிக் குருவி.

''சின்னவனே! ஆகாத காரியத்தைப் பேசக்கூடாது. நட்சத்திரத்தைப் பிடிக்க முடியாது. போய்ப் படு'' என்றது அம்மாக் குருவி கோபமாக.

''நன்றாகப்பறக்கக்கற்றுக்கொண்டதும் போகலாம் என்று முன்பு சொன்னாயே! இப்போது இப்படிச் சொல்கிறாயே!''

''ஆமாம். நீ அப்போது சிறு குழந்தை. உன்னைச் சமாதானப்படுத்தத்தான் அப்படிச் சொன்னேன். இப்போது சொல்கிறேன் கேள். நட்சத்திரங்கள் ஒளி சிந்தும் விண் மீன்கள். அவை பல லட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளவை. அவ்வளவு தூரம் நம்மால் பறக்கவும் முடியாது. அப்படிச் சென்றாலும், விழுந்து மடியத்தான் நேரும்'' என்று கூறியது அம்மாக் குருவி.

''சின்னவனே! புரிந்ததா? பைத்தியம் மாதிரி உளறாமல் நட்சத்திரத்தை மறந்து தொலை'' என்றது அண்ணன் குருவி.

சின்னக் குருவி விட்டத்தின் மூலையில் போய் உட்கார்ந்து கொண்டது. அழுகை அழுகையாய் வந்தது. ஒரே ஏமாற்றமாய் இருந்தது. நட்சத்திரத்தைப் பார்த்துப் பார்த்து ஏங்கியது. தன் சிறகுகளை விரித்து விரித்து மூடியது. சற்று நேரம் கழித்து அம்மாவைத் திரும்பிப் பார்த்தது. அம்மாவும், அண்ணாவும் நல்ல உறக்கத்தில் இருந்தார்கள்.

மினுக் மினுக்கென்று ஒளி விடும் நட்சத்திரத்தைப் பார்த்தது. சட்டென்று தன் இறக்கைகளை விரித்து விருட்டென்று பறந்தது.

நட்சத்திரத்தைப் பிடிக்கும் ஆர்வத்தில் சின்னக் குருவி மேலே மேலே பறந்தது. வெகு நேரம் பறந்து பறந்து அதன் சிறகுகள் வலித்தன. மிக உயரம் வந்துவிட்டதால் மூச்சுத் திணறியது. கால்களும் உடலும் ஓய்ந்து போயின.

அம்மாவின் வார்த்தைகளை மீறி வந்ததை நினைத்து வருந்தியது. அம்மா சொல்லைக் கேட்காததால் அநியாயமாய்ச் சாகத்தான் போகிறோம் என்று இறுக்கமாகக் கண்களை மூடிக் கொண்டது.

அப்பா: டேய்என்னடா படிக்கிறே?

மகன்: தாவர இயல்.

அப்பா: டேய், அதெல்லாம் படிக்காதேடா. நீதான் ஏற்கெனவே ரொம்பத் தாவுறியே!

— ஜி. அருண் (12661),
பாண்டிச்சேரி—11.





வானத்தில் நட்சத்திரம் சிரித்தது. 'ஒரு சிட்டுக் குருவி நம்மை அடைய வருகிறதா?' என்று நினைத்துத்தான் சிரித்தது. ஆனால், சற்று நேரத்தில் குருவி பறக்க முடியாமல் தடுமாறுவதைக் கண்டு வருந்தியது.

சட்டென்று வெள்ளை உடையில் தேவதையாக மாறி, தன் வெள்ளிச் சிறகுகளை விரித்துக் கீழ் நோக்கிப் பறந்தது. விழப் போன குருவியைத் தன் உள்ளங்கைகளில் ஏந்திக் கொண்டது.

மயக்கம் தீர்ந்த குருவி தேவதையை பார்த்து மகிழ்ச்சி அடைந்தது.

''நீ யார்?''

''நட்சத்திர தேவதை.''

''உன்னை நெருங்கவே முடியாது என்றாளே என் அம்மா? உன்னை நெருங்கினால் சாம்பலாய்ப் போய் விடுவேன் என்றானே என் அண்ணன்? நீ நட்சத்திரம்தானா?'' சந்தேகமாய்க் கேட்டது குருவி.

''நீ தேடி வந்த நட்சத்திரம் நானே தான். உனக்காக என் வெப்பத்தைக் குறைத்துக் கொண்டு, குளுகுளு வென்று தேவதையாய் வந்தேன். நீ செத்துவிடக் கூடாது என்பதற்காக, இரக்கப்பட்டு, நானே என் இடத்தை விட்டுப் பறந்து வந்தேன்'' என்றாள் நட்சத்திர தேவதை.

''ஓ...கோ.... என்னால் பறக்க முடியாது' என்று நினைத்தாயா?''

''நான் உன்னைப் பிடிக்கவில்லையானால், நீ மயங்கி விழுந்து செத்துப் போயிருப்பாய். அம்மாவின் பேச்சைக் கேட்காமல், நீ மீறி வந்தது தப்புத் தான். இருந்தாலும் உன் அன்பையும், ஆர்வத்தையும் எண்ணி நானே உன்னைத் தேடி இறங்கி வந்தேன்'' என்றாள் தேவதை.

சிட்டுக் குருவி இறகுகளை விரித்து சந்தோஷித்தது. தேவதையின் வெள்ளை உடையும் வெள்ளி இறக்கைகளும் மிகவும் பிடித்தது. வைரக் கிரீடத்தைச் சுற்றிச் சுற்றிப் பறந்தது.

''அக்கா, அக்கா, உன்னை எனக்கு ரொம்பப் பிடித்துவிட்டது! நீ எத்தனை அழகாய் இருக்கிறாய்! உன் பாவாடையும் கிரீடமும் என்னமாய் ஜொலிக்கின்றன!''

''உன் அன்பையும்விடா முயற்சியையும் மெச்சினேன். இதோ என் பரிசு!'' மெல்லச்சிரித்தபடி நட்சத்திர தேவதை தன் விரலில் இருந்த வைர மோதிரத்தைக் கழற்றி சிட்டுக் குருவிக்கு அளித்தாள்.

''மகிழ்ச்சிதானே! இனி அம்மா சொற்படிதான் நீ நடக்க வேண்டும். மீறவே கூடாது. நேரமாகிறது. நான் என் இடத்திற்குப் போக வேண்டும். நீ உன் கூட்டிற்குப் பறந்து சென்று அம்மாவுடனும் அண்ணனுடனும் சந்தோஷமாய் இரு!'' என்று வாழ்த்தினாள்.

சிட்டுக் குருவி தன் இருப்பிடம் திரும்பியது. வைர மோதிரத்தை அம்மாவிடமும் அண்ணனிடமும் காட்டி மகிழ்ந்தது!

பந்தயம் வேண்டாம்; வீடுதான் வேண்டும்!

— குண்டுமணி



மெக்ஸிகோவில் செப்டம்பர் 19, 20 தேதிகளில் பூகம்பம் ஏற்பட்டு, எட்டாயிரம் மெக்ஸிகோக்காரர்கள் பலியாயினர். லட்சம் பேர் வீடு இழந்தனர். மே மாதம் 31ம் தேதி மெக்ஸிகோ நகரத்தின் அஸ்டெக் ஸ்டேடியத்தில் உலகக் கோப்பை கால் பந்தாட்டம் தொடங்கியபோது, மெக்ஸிகோ நகரில் நாலாயிரம் பேர் ஊர்வலம் நடத்தி, "எங்களுக்கு உலகக் கோப்பைப் பந்தயம் வேண்டாம்! எங்களுக்குத் தேவை வீடுகள்!" என்று கோஷமிட்டார்கள்.

* அர்ஜென்டைனா உலகக் கோப்பையைப் பெறுவதற்குக் கடுமையாகப் போராடும். அர்ஜென்டைனா குழுவில் மாராடோனா என்ற முதல் தர உலக ஆட்டக்காரர் ஆடுகிறார். இருபத்தைந்து வயதான காப்டன் மாராடோனாவின் மீது அர்ஜென்டைனா நம்பிக்கை வைத்திருக்கிறது.

* பிரேஜிலின் புகழைப் பரப்பக் கூடிய ஆட்டக்காரர் ஜிக்கோ. இவர் இத்தாலிக்காக ஆடச் சென்றதை வெளிப்படையாகத் தவறு என்று

ஒப்புக் கொண்டவர். ஜிக்கோ பிரேஜி லில் ஆர்ட்டர் ஆன்டுனஸில் கால்பந்தாட்டக் குடும்பத்தில் பிறந்த வர். இவரது தந்தையும் இரு சகோதரர் களும் கால் பந்தாட்ட புரொபஷனல் ஆட்டக்காரர்கள். ஜிக்கோவும் சின்னஞ் சிறு வயதில் தெருக்களில் கால் பந்தாட்டம் ஆடி முன்னேறி வந்தவர்தான். 1983ம் வருஷம் தேசிய லீக் பந்தய வெற்றிக்குப் பிறகு ஜிக்கோ வின் வருமானம் மாதம் 14,000 டாலர் களை எட்டியது. முப்பத்தி மூன்று வயதில் மெக்ஸிகோவில் ஜிக்கோ வுக்குத் தம் புகழை பிரேஜில் நாட்டுக் காக நிலைநாட்ட வாய்ப்பிருக்கிறது.

* 1986 உலகக் கோப்பை கால் பந்தாட்டப் பந்தயத்தில் இருபத்து நான்கு நாடுகள் அந்த உன்னதக் கோப்பையைப் பெறப் போராடுகின் றன. 52 பந்தயங்களுக்காக அடிடாஸ் நிறுவனம் புதிய கஸடெக்கா மெக் ஸிகோ பந்தை அறிமுகப்படுத்தியுள் ளது. மெக்ஸிகோவின் தட்ப வெப்பச் சூழ்நிலைகளுக்கேற்பத் தயாரிக்கப் பட்டுள்ள இந்தப் பந்தை உருவாக் கக் காரணமானவர் ரிபேச்சா மார்ட் டினீஸ்.

* 1978ம் வருஷம் நடைபெற்ற உலகக் கோப்பையின்போது பிரேஜி லின் கால் பந்தாட்ட ஹீரோ பீலி பத்திரிகையாளர்களுக்கான இடத்தில் அமர்ந்து உலகப் பந்தயத்தைப் பார்த் தார். பிரேஜில் நாடு சோபிக்காதது கண்டு பீலிக்கு உள்ளத் துடிப்பு மிகுந் தது. 'இந்த வயதிலும் நான் மைதானத் தில் இறங்கி ஆடியிருக்கலாம்!' என்று வருத்தப்பட்டார் பீலி. 1978 உலகக் கோப்பைப் பந்தயத்தில் அர்ஜென் டைனாவும் ஹாலந்தும் மோதின. இந்த இறுதி ஆட்டத்துத் தேர்வுக்கு எத்தனை வெற்றிகள் கிடைத்தன என்பதைவிட எத்தனை கோல்கள் போடப்பட்டன என்று கணக்கிடப்பட்டதாம்!

* அர்ஜென்டைனாவின் நட்சத்திர மான பாஸரெல் லாவுக்குப், பந்தயத் தின் தொடக்கத்தில் உடல் கோளாறி னால் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல் லப்பட்டார். இதனால் பாஸரெல்லா தென் கொரியாவுக்கு எதிராக ஆட முடியவில்லை! இவர்தான் பெருவுக் கெதிராகக் கோல் போட்டு மெக்ஸிகோ உலகக் கோப்பைப் பந் தயத்தில் அர்ஜென்டைனா கலந்து கொள்ள வழி வகுத்தவர்.

மெக்ஸிகோ நகரத்திலுள்ள அஸ்டெக் ஸ்டேடியத்தில் இத்தாலிக் கும் பல்கேரியாவுக்கும் நடை பெற்ற பந்தயத்தை உலகில் பாதி மக்கள் டெலிவிஷனில் பார்த்துக் களித்த தாகச் செய்திகள் வந்திருக்கின்றன. உலகக் கோப்பை கால் பந்தாட்டத் துக்கு அத்தனை மவுசு என்பது தெரி கிறதல்லவா?

* மெக்ஸிகோவில் நடைபெறும் உலகக் கோப்பைப் பந்தயத்தில் தம் கனடா நாட்டு ஆட்டக்காரர்களின் ஆட்டத்தைக் காண இரு சைக்கிள் ஓட்டிகள் 8000 கிலோ மீட்டர் தூரம் சைக்கிள் ஓட்டிச் சென்று அடைந் திருக்கிறார்கள். கனடா முதல் தடவை யாக உலகக் கால் பந்தாட்டப் பந் தயத்தில் பங்கேற்கிறது என்பது அதி சயம்!

புகைப்படம்: நன்றி இந்தியன் எக்ஸ்பிரஸ்

முன்னேறத் துடிக்கும் நித்யா

அட்டைப் படத்தில் இருக்கும் நித்யா லக்ஷ்மணன் திருச்சி புனித ஜோசப் பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கிறாள்.

அவளுக்கு டேபிள் டென்னிஸ் என்றால் உயிராம். ஒரு பயிற்சியாள ரிடம் முறையாக டேபிள் டென்னிஸ் அவள் பயின்று வருகிறாள்.

நித்யாவின் சகோதரிகளான ஷோபா, தீபா, ஜூனியர் பெண்கள் பிரிவில் தேசிய அளவில் முன்னணி நட்சத்திரங்களாகத் திகழ்ந்து வரு கின்றனர். அவர்களையும் மிஞ்ச வேண் டும் என்பது நித்யாவின் ஆசையாம்.

வளர்ந்து வரும் தமிழ்நாட்டின் டேபிள் டென்னிஸுக்கு முன்னேறத் துடிக்கும் நித்யாவைப் போல் இன்ன மும் பலர் தேவை.

— ஏ. எஸ். திவாகர்.

வண்ணப்படம்: ஏ.வி. பாஸ்கர்


(வி) சித்திரச் செய்திகள்

குரங்குகளுக்கு 85 லட்சம்!

பிரிட்டனில் டெவான் நகரில் ஒரு விதவை இருந்தார். பெயர் மாரி லிபெவர். சமீபத்தில் அவர் தனது 84 வது வயதில் காலமானார். அவர் உயிரோடிருக்கும்போது வாரந்தோறும் அங்குள்ள மிருகக் காட்சி சாலைக்குச் சென்று அங்குள்ள குரங்குகளைப் பார்த்து மகிழ்வாராம். குரங்குகளிடமுள்ள அன்பினால், இறப்பதற்கு முன்பு, அவர் தனது சொத்து முழுவதையும் அந்தக் குரங்குகளுக்கே உயில் எழுதிவிட்டாராம். சொத்தின் மதிப்பு சுமார் 85 லட்ச ரூபாய்!



வெயிலில் இறந்த சிங்கக் குட்டிகள்



திருச்சியில் சர்க்கஸ் நடத்திய ஒரு கம்பெனியில் இருந்த சிங்கம் மூன்று குட்டிகளை ஈன்றது. அந்த மூன்றில் இரண்டு குட்டிகள் வெயிலின் கொடுமை தாங்காமல் இறந்துவிட்டன. மீதம் இருந்த ஒரு குட்டியையாவது காப்பாற்ற வேண்டுமே என்ற கவலையில், அந்தக் குட்டியைத் திருச்சூரிலுள்ள கால்நடைக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு அது நலமாக இருக்கிறது.

நாய் கடித்ததற்கு நஷ்ட ஈடு

லண்டனில் நாய்க் கண்காட்சி நடந்தது. அதைப் பார்க்கச் சென்ற பானி டிக்காஸன் என்ற 9 வயதுச் சிறுவனின் முகத்தில் அங்கிருந்த ஒரு நாய் கடித்துவிட்டது! காயத்தைச் சரிப்படுத்த பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியதாயிற்று. அதற்காக நஷ்ட ஈடு தர வேண்டும் என்று அச்சிறுவன் சார்பில் வழக்குத் தொடுக்கப்பட்டது. ரூபாய் 65,000 நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது!



அப்பாவே சிறந்த அம்மா!




அமெரிக்காவில் 'அன்னை தினம்' ஒரு முக்கியமான நாளாகும். இந்த நாளில் குழந்தைகள், தங்கள் தாய்மார்களுக்குப் பரிசுகள் வழங்கி, மரியாதை செலுத்துவார்கள். இந்த நாளில் மிகச் சிறந்த ஓர் அன்னையைத் தேர்ந்தெடுப்பதற்காக, ஒரு பிரபல ஓட்டல் ஒரு கட்டுரைப் போட்டியை நடத்தியது. போட்டிக்கு வந்த 750 கட்டுரைகளில் ஸ்டாஸில் வாக்கர் என்ற 11 வயதுச் சிறுமி எழுதிய கட்டுரையில் "என் அப்பாதான் எனக்குச் சிறந்த அன்னையாக இருந்து என்னைக் கண்ணைப் போலக் காப்பாற்றி வருகிறார்" என்று கூறி, மிக அழகாக அக்கட்டுரையை எழுதியிருந்தாள். அவளுடைய தந்தையே சிறந்த அன்னையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்!

பெங்களூரில் பறக்கும் தட்டு!

பெங்களூரில் சென்ற மாதம் ஒருநாள் இரவு, வானத்தில் அடையாளம் தெரியாத ஒரு பொருள் சில விநாடிகள் பறந்தது. பளபளவென்று மிகவும் பிரகாசமாகத் தெரிந்த அது, வட்ட வடிவமாக இருந்ததால், அதைப் 'பறக்கும் தட்டு' என்றே பார்த்தவர்கள் கருதினார்கள். இரண்டு உயரமான கட்டிடங்களுக்கு இடையே அது 15 விநாடிகளே பறந்து மறைந்ததாம்! பெங்களூர் விமான நிலையத்தில் உள்ள விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவில் உள்ளவர்களும் அதைப் பார்த்ததாகத் தெரிவித்தனர்.



சம்பளம் வாங்கும் பூனைகள்



200 ஆண்டுகளுக்கு முன்பு லண்டன் தபால் நிலையங்களில் எலிகளின் அட்டகாசம் அதிகமாக இருந்ததாம். இரவிலே சேர்த்து வைக்கும் கடிதங்களை அவைகள் கடித்துக் கிழித்து நாசமாக்கி வந்தனவாம். எலிப் பொறி வைத்தனர்; விஷம் வைத்தனர். ஆனாலும் எலிகளின் எண்ணிக்கை குறையவில்லை. கடைசியாக, பூனைகளை அவற்றின் சொந்தக்காரர்களிடமிருந்து வாடகைக்கு எடுத்து வந்து காவல் போட்டனர். எலிகளின் எண்ணிக்கை மளமளவென்று குறைந்தது. இன்று கூட பல பூனைகள் லண்டன் நகரத் தபால் நிலையங்களில் சம்பள வேலைக்காரர்களாக இருக்கின்றன! அவற்றின் சொந்தக்காரர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கொடுக்கப்படுகிறது!

உலகமே சொர்க்கம்



படிப் படியாய் வானில் நிலாப்
    பிறை வளரும் — பின்
பௌர்ணமிப் பொன் தாம ரையாய்
    அது மலரும் — அதைப்
பார்க்கப் பார்க்க மனத்துக் குள்ளே
    தேன் சுரக்கும் — தெய்வப்
பாட லுக்கே இசை யமைத்த
    சுகம் பிறக்கும்!

நல்ல வரின் நட்பும் அதே
    போல் இனிக்கும் — அது
நாளுக்கு நாள் வளர்ந்து பெரும்
    பயன் கொடுக்கும் — நம்
உள்ளத் தையே நல்ல நட்பு
    உயர வைக்கும் — இந்த
உலகத் தையே சொர்க்கம் என்று
    உணர வைக்கும்.



ரா. பொன்ராசன்

அறிவியல் அறிஞரை இழந்தோம்



சென்ற இதழ் கேளுங்கள்; சொல்லுகிறோம் பகுதியில் குழந்தைகளுக்காக எழுதுவோரில் மிகவும் வயதானவர் யார் என்ற கேள்விக்கு, இன்னும் ஐந்து ஆண்டுகளில் நூற்றாண்டுவிழாக் கொண்டாடவிருக்கும் பெ.நா. அப்புஸ்வாமி அவர்கள்தான் என்று குறிப்பிட்டிருந்தோம். அந்த இதழ் வெளி வருவதற்கு முன்பே, அவர் நம்மை விட்டுப் பிரிந்த துக்கச் செய்தி வந்து நம்மை மிகுந்த வேதனைக்கு உள்ளாக்கியது.

அப்புஸ்வாமி அவர்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக விஞ்ஞானக் கட்டுரைகளையும் புத்தகங்களையும் தமிழிலே எழுதிப் பலருக்கு முன்னோடியாக விளங்கியவர். விஞ்ஞானத்தைப் போலவே குழந்தைகளுக்கு எழுதுவதிலும் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். சித்திரக் கதைப் பாடல்கள், விஞ்ஞானக் கதைகள், வானத்தைப் பார்ப்போம். விஞ்ஞானம் பேசுகிறார் முதலிய பல நூல்களை குழந்தைகளுக்காக எழுதித் தந்தார். 'வானத்தைப் பார்ப்போம்' யுனெஸ்கோ பரிசு பெற்றுள்ளது. இவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி தமிழ் எழுத்தாளர் சங்கமும், குழந்தை எழுத்தாளர் சங்கமும் கேடயங்கள் வழங்கி கௌரவித்துள்ளன. மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 'தமிழ்ச் செம்மல்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கியுள்ளது.

கேளுங்கள் சொல்லுகிறோம்

* சங்க காலத்தில் தாய்மார்கள் குழந்தைகளுக்குச் சோறு ஊட்டும்போது, வீரத்தையும் தேசப்பற்றையும் ஊட்டியதாகக் கேள்விப் படுகிறோம். ஆனால், இப்பொழுது, 'நீ சாப்பிடாத போனால் நாய்க்குப் போட்டிருவேன்' என்று சொல்லுவதும் 'பூச்சாண்டி வர்ரான் பாரு, சீக்கிரம் சாப்பிடு' என்று பயமுறுத்துவதும் தேவைதானா?

— கே.வி.எஸ். மணியன், குடியாத்தம்—2.

பயமுறுத்திச் சோறு ஊட்டுவது குழந்தைகளைக் கோழைகளாக்கிவிடும். சோறூட்ட எத்தனையோ வழிகள் உள்ளன. நிலவைக் காட்டி பொம்மைகளைக் காட்டி, நெய்யும் சோறும் ஊட்டலாம்.

'குருவிக்கு ஒருவாய்; கொக்குக்கு ஒருவாய்;
காக்கைக்கு ஒருவாய்; என் கண்ணுக்கு
ஒருவாய்'

என்று பாட்டுப்பாடியும், சுற்றுப்புறத்திலுள்ள பொருள்களை வேடிக்கைக் காட்டியும் சோறூட்டலாம். இவையே சிறந்த வழிகள்.

* அன்றைக்கு என் அம்மாவுக்கு நல்ல காய்ச்சல். என் அப்பா என்னிடம் ஒரு ஆட்டோ ரிக்ஷா எடுத்து வரச் சொன்னார். உடனே நான் ஆட்டோ ரிக்ஷா பிடித்து வர ஓடினேன். வழியிலே மூன்று ஆட்டோ ரிக்ஷாக்கள் நின்றன. நான் ஒரு டிரைவரிடம் சென்று, 'என் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. ராயப்பேட்டையிலுள்ள டாக்டர் வீடு போக வேண்டும்' என்றேன். '8 ரூபாய் தந்தால் வருவேன்' என்றார். மயிலாப்பூரிலிருந்து ராயப்பேட்டை செல்ல 3 அல்லது 4 ரூபாய் வரும். மீட்டர் சார்ஜ் தருவதாகச் சொன்னேன். '8 ரூபாய்க்குக் குறைந்து வர முடியாது' என்று கூறிவிட்டார். மற்ற டிரைவர்களைக் கேட்டேன். 'அதுதான் அவர் சொல்லிட்டாரே!' என்று அலட்சியமாகப் பதில் சொன்னார்கள். ஆபத்தான நிலையிலும் இப்படி நடந்து கொள்கிறார்களே, இவர்களைத் திருத்த வழியே இல்லையா?

— க. மனோகரன், சென்னை—4.

காவல் துறையினரும் என்ன என்னவோ செய்துதான் பார்க்கிறார்கள். சிலர் சரியாக நடந்து கொண்டாலும், பலர் இப்படிப் பணத்தாசையால் ஈவு இரக்கமின்றி நியாயமாக நடக்கமாட்டேன் என்கிறார்கள். இது சமயம் ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. புனா நகரத்திலுள்ள உயர் நீதிமன்றத்தில் நடந்த ஒரு வழக்கில் நான் சாட்சி சொல்லச் சென்றிருந்தேன். ஆட்டோவில் சென்று நீதிமன்றத்தின் முன்பாக இறங்கினேன். மீட்டரைப் பார்த்தேன். ரூ 2.40 காட்டியது. நான் 3 ரூபாயை டிரைவரிடம் கொடுத்துவிட்டு, நீதிமன்றம் மாடியிலிருந்ததால், படிகள் வழியாக வேகமாகச் சென்று கொண்டிருந்தேன். அப்போது அந்த டிரைவர் நான் கொடுத்த ரூபாயைக் கையில் பிடித்தபடி என்னைப் பின் தொடர்ந்து வந்து ஏதோ கோபமாக மராத்தி மொழியில் பேசினார். எனக்கு அது புரியவில்லை. அப்போது மேலிருந்து இறங்கி வந்த ஒரு வக்கீலிடம், 'இந்த டிரைவர் என்ன சொல்லுகிறார்? இன்னும் அதிகம் வேண்டும் என்கிறாரா?' என்று ஆங்கிலத்தில் கேட்டேன். அவர் அந்த டிரைவர் என்ன சொன்னார் என்பதை விளக்கிக் கூறியதும் எனக்கு ஒரே வியப்பாக இருந்தது.

டிரைவர் சொன்னது: 'மீட்டர்படி ரூ 2.40 தானே! ஏன் அதிகமாக 60 காசு தருகிறாய். நியாயமாக ஒரு தொழில் செய்து பிழைக்க நான் நினைக்கிறேன். 60 காசைச் சும்மா கொடுத்து என்னைப் பிச்சைக்காரனுக்கப் பார்க்கிறாயே, சே!'



— இப்படிக் கூறியதோடு அந்த டிரைவர் நிற்கவில்லை. கையிலிருந்த ஒரு டப்பாவிலிருந்து 60 காசு எடுத்து என்னிடம் கொடுத்துவிட்டு வேகமாகத் திரும்பிச் சென்றார்.

* சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டத்தைப் பார்த்துப் பிரமித்துவிட்டேன். அங்கிருக்கும் பிரம்மாண்டமான மண்டபத்தில் எத்தனை பேர் உட்காரலாம்?

— கி. பூபதி, கோபிசெட்டிபாளையம்.

நீளத்தில் 220 அடியும் அகலத்தில் 100 அடியும் உள்ள அந்த மண்டபத்தில் 4000 பேர் உட்காரலாம்.

* புதிதாக வாகனம் ஓட்டுகிறவர்கள் L என்ற எழுத்துக் கொண்ட போர்டை வண்டியில் அணிந்து செல்கிறார்களே, அதன் விளக்கம் என்ன?

— ஜி. மோகனசுந்தரம், திருவொற்றியூர்.

L என்பது learner என்பதன் சுருக்கமே. அதாவது, வண்டியை ஓட்டுபவர் புதிதாகக் கற்றுக் கொள்ளுகிறார் என்பதை அறிவிக்கவே அந்த போர்டு. இப்படி L போர்டு போட்டுக் கொண்டு ஓட்டுபவர்கள் கட்டணம் செலுத்தி தற்காலிகமாக ஒரு Learner's Licence பிராந்தியப் போக்குவரத்து அலுவலரிடம் பெற வேண்டும்.

* அணுகுண்டு, ஹைடிரஜன் குண்டு—இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

— என். சோமசுந்தரம், பெரியகுளம்.

அணுகுண்டைப் போல் 100 மடங்கு முதல் 1000 மடங்கு வரை ஆற்றலுள்ளது ஹைடிரஜன் குண்டு என்கிறார்கள்.

* தேனில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன?

— வி. புவனேஸ்வரன், செட்டிகாடு.

தேனில் புரோட்டீன் 80.4, சர்க்கரை 1.2, உப்புக்கள் 0.2, நீர் 18.2 சதவிகிதத்தில் இருக்கின்றன.

* அணிலின் முதுகில் மூன்று பட்டைகள் இருக்கின்றனவே, அவை இராமர் தடவிக் கொடுத்ததால் ஏற்பட்டவை என்று கூறுகிறார்களே, இது உண்மையா?

— சிவ. விஜயலட்சுமி, ஒசூர்.

உண்மையிலே நடந்ததா என்று தெரியவில்லை. ஆனாலும், இராமபிரான் அணை கட்டும்போது அணிலும் தன்னால் முடிந்த உதவியைச் செய்தது கண்டு இராமர் அதை மிகவும் பாராட்டி அதன் முதுகிலே தடவிக் கொடுத்ததாகவும், அப்படித் தடவிக் கொடுத்ததால் ஏற்பட்டவைதான் அந்த மூன்று பட்டைகள் என்றும் ஒரு கதை நீண்ட காலமாகக் கூறப்பட்டு வருகிறது.

* நெல் முதல் முதலில் எங்கு பயிரிடப்பட்டது?

— ம. நாகராஜன், பண்ருட்டி.

நெல் முதல் முதலாகப் பயிரிடப்பட்டது இந்தியாவிலா இந்தோ சீனாவிலா என்பதை நிச்சயமாகக் கூற முடியவில்லை. இந்தியாவில் கூட தமிழகத்திலும், ஒரிசாவிலுமே முதல் முதலாகப் பயிரிடப்பட்டது என்று தெரிகிறது.

* பறவை இனங்களில் அன்னம் இறந்து விட்டதாமே?

— நாகை பொன்னி, நாகப்பட்டினம்.

யார் சொன்னது? இன்னும் அன்னப் பறவைகளைப் பலர் வீடுகளில் வளர்க்கிறார்கள். உயிர்க் காட்சி சாலையிலும் காண்கிறோமே!

* சிருங்கேரி மடம் என்கிறார்களே, அது எங்கு இருக்கிறது?

— வே. ஹேமா, புத்தூர்.

ஆதிசங்கரர் நம் நாட்டின் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை நிறுவினார். அவற்றில் ஒன்றுதான் சிருங்கேரி மடம். மைசூர் மாநிலத்தில் துங்கா நதியின் கரையிலுள்ள சிருங்கேரியில் இது இருக்கிறது.

* கலைமாமணி திருச்சி பாரதன் அவர்களின் முகவரியைத் தயவு செய்து கூறுங்கள்.

— கே. ஆர். ரவீந்திரன், சென்னை—1.

136, பெருமாள் எடத் தெரு, பாலக்கரை, திருச்சி — 1.

* காந்திஜிக்கு எத்தனை பிள்ளைகள்?

— கி. கனிமொழி, கருங்காலிக் குப்பம்.



நான்கு பிள்ளைகள். ஹரிலால், மணிலால், ராமதாஸ், தேவதாஸ் இவர்களில் தேவதாஸ், ராஜாஜியின் மாப்பிள்ளை.

* 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!' என்கிறார்களே, அப்படியானால்...?

— ஆர். சரவணன், பட்டாபிராம்.

பதினாறும் பெற்று என்பதைப் பதினாறு பிள்ளைகள் என்று சிலர் தவறாக நினைக்கிறார்கள். பதினாறு வகைப்பட்ட செல்வங்களைப் பெற்று வாழ்க!' என்றுதான் வாழ்த்துகிறார்கள். அந்தச் செல்வங்கள்: புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு,

பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

* குறிஞ்சிப் பூக்கள் இந்தியாவில் எந்த இடத்தில் மலர்கின்றன?

— பா. கிருஷ்ணதாஸ், பம்பாய் — 31.

பெரும்பாலும் தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில்தான் குறிஞ்சிப் பூக்கள் மலர்கின்றன.

* கொன்றை வேந்தனில், 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்று வருகிறதே. அதற்குச் சரியான அர்த்தம் கூற முடியுமா?

— வி. கமலவல்லி, திருப்போரூர்.

தங்கள் பெற்றோர்கள், 'இதைச் செய், அதைச் செய்' என்று ஏவுவதற்கு முன்பே, குறிப்பறிந்து, செயல் புரியும் பிள்ளைகள், பெற்றோரின் முதுமையைத் தவிர்க்கும் மருந்தைப் போன்றவர்கள்.

* கோழி முட்டையிலிருந்து குஞ்சு வெளிவர 21 நாட்களாகிறது என்று படித்தேன். குருவி முட்டையிலிருந்தும் குஞ்சு வெளிவர அதே 21 நாட்கள்தான் ஆகுமா?

— பெ. சுந்தர், விழுப்புரம்.



இல்லை. குருவி 12 நாட்களில் குஞ்சு பொரிக்கும். நெருப்புக் கோழி குஞ்சு பொரிக்க 6 வாரங்களாகும்.

* கைரேகையை வைத்துத் திருடர்களைக் கண்டுபிடிக்கிறார்களே, ஒருவர் கைரேகை போல், மற்றவருக்கு இருந்தால்...?

— ஆர். கோபாலன், திருச்சி — 8.

ஒருவருடைய கைரேகைபோல் உலகிலே வேறு ஒருவரின் கைரேகை இருக்கவே இருக்காது! ஒவ்வொரு விரலிலும் ஒவ்வொரு விதமான வளைந்த ரேகைகள் இருக்கும். வயதானவர்களின் தோல் சுருங்கிப்போயிருந்தால்கூட, ரேகைகள் அப்படியே இருக்கும். மாறாது. இதனால், எத்தனை நாட்களானாலும் கண்டுபிடித்து விடலாம்.

* நீங்கள் 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியில் சொன்னபடி நிறையப்பேர் நிறைய இடங்களிலிருந்து தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார்களே. இதனால் ஏதாவது பலன் ஏற்படுமா?

— சி. வேதாசலம், செங்கற்பட்டு.

150 க்கு மேற்பட்ட வேண்டுகோள்களில் 8500 க்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர் மிகவும் ஆசையாகக் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார்களே. அவர்களின் இளம் உள்ளங்கள் ஏமாற்றமடைய விடுவாரா நம் தமிழக முதல்வர்? நிச்சயம் பலன் ஏற்படும் என்றுதான் நம்புகிறோம்.

* என் உடம்பில் மூன்று இடங்களில் மச்சங்கள் இருக்கின்றன. அவற்றை நீக்கி விட முடியாதா?

— சி. ராமசாமி, சென்னை — 17.

ஏன் நீக்க வேண்டும்? ஒருவருடைய உடலில் 15 முதல் 20 மச்சங்கள் கூட இருக்கலாம். அவற்றால் எவ்விதக் கெடுதியும் இல்லை.

* வயிற்றுப் போக்கை நிறுத்த மோர் உதவும் என்கிறார்களே, அப்படி அதில் என்னதான் இருக்கிறது?

— ஜெ. மேரி, வந்தவாசி.

தேவையான கால்சியத்தைத் தயிரும் மோரும் தருவதால், வயிற்றுப்போக்கு நின்று விடும்.


* மனிதர்கள், ஆடு, மாடு, பறவைகள் எல்லாவற்றின் இரத்தமும் சிவப்பாகத்தான் இருக்குமா?

— பெ. சௌந்தர், வந்தவாசி.

ஆமாம். ஆனால் வெட்டுக்கிளியைத் தவிர. அதன் இரத்தம் மட்டும் வெள்ளையாக இருக்கும்.

* மயிலாப்பூர் திருவிழாவில் ஒரு சிறுவன் சிவப்புக் கயிறு ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு, 'அண்ணாக் கயிறு,' 'அண்ணாக் கயிறு' என்று கூவி விற்பதைப் பார்த்தேன். கயிற்றுக்குக் கூட இப்படி அண்ணா பெயரை வைக்கிறார்களே. இது நியாயமா?

— ஆர். ரமேஷ், சென்னை — 28.



அடடே, நீ தவறாகப் புரிந்து கொண்டு விட்டாய். அவன் விற்ற சிகப்புக் கயிறு அரையில் (இடுப்பில்) கட்டும் கயிறு. அதை அரைஞாண் கயிறு என்பார்கள். அரைஞாண் கயிற்றைத்தான் அப்படிச் சுருக்கி அண்ணாக் கயிறாக்கி விட்டான் அந்தச் சிறுவன்!

விரலே... நீ வாழ்க!



-பேராளம் புகழ்மதி

''அடடே, விரலெல்லாம்' இங்க்கா இருக்கே; நீங்க இன்னைக்குச் செஞ்ச கடுமையான வேலையைப் பத்தி இந்த விரலே பேசுதே!'' என்று மானேஜர் பாராட்டியபடி வீட்டிற்குக் கிளம்பினார்.

'என்ன! விரலே பேசுமா?' ஆச்சரியப்பட்டபடி வேலையில் ஆழ்ந்தேன்.

மாலை ஏழு மணி இருக்கும். அலுவலகத்தில் சொச்சமுள்ள உதிரி வேலைகளை முடித்துவிட்டு, ''அப்பாடா! நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை, ஓய்வாக இருக்கலாம்' என்று நினைத்தபடி அலுவலகத்தை விட்டு வெளியே வந்தேன். அடடே! அருமையான மாலைக் காற்று. இந்தக் காற்றை அனுபவித்தபடி மூணு மைல் தூரத்திலுள்ள வீட்டுக்கு நடந்தே போனாலென்ன?

ராஜா தெரு நெருங்கியது. மிருதங்க ஒலி அருகிலிருந்த 'கிருஷ்ண கான சபா'விலிருந்து பிரமாதமாகச் செவியில் நுழைந்தது. வெளியிலிருந்த போர்டில் 'மாஸ்டர் அமர்நாத்தின் மிருதங்க அரங்கேற்றம்' என எழுதியிருக்கிறதே....! உள்ளே நுழைந்தேன்.

கச்சேரியைப் பாராட்டி யாரோ ஒரு கவிஞர் பேசினார். ''இதுவரை பேசிய தம்பியின் விரல்கள் அற்புதமானவை, அந்த விரல்கள் பேசிய பேச்சு அபாரமானவை'' என்று புகழ்ந்து தள்ளினார்.

'அடடே, இங்கேயும் விரல்கள் பேசுகின்றனவா? இந்த விரல்கள் விசித்திரமானவைதான்' — நினைத்தபடி வெளியே வந்தேன்.


''ஆ, ஆ..... விரல், விரல்.... என் விரலை மிதிச்சுட்டீங்க....'' ஜமுக்காளத்தில் அமர்ந்தபடி கச்சேரியை ரசித்த பின் வரிசை ரசிகர் ஒருவரின் கைவிரலை என் கால் பதம் பார்த்துவிட்டதோ! ''அடடா.... மன்னிச்சுக்குங்க....'' என்றபடி வீதிக்கு வந்தேன்.

''விரலுக்கேத்த வீக்கமிருக்கணும்; தாம்தூம்னு செலவு பண்ணினா எப்படி?'' யாரோ ஒரு பெரியவர் மற்றொருவரிடம் பேசிக் கொண்டு சென்றார்.

''என்னை விரலை நீட்டிப் பேசிட்டான் இந்தச் சின்னப் பிள்ளை. இனிமேல் இவன் வீட்டுக்குள்ளே நுழைய மாட்டேன்; நான் பெரிய பிள்ளை வீட்டுக்குப் போறேன்'' கோபத்தோடு ஒரு முதியவர் ஒரு வீட்டிலிருந்து வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார். அவரை அக்கம்பக்கத்தார் ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தனர். ''அஞ்சு விரலும் ஒண்ணாவா இருக்கு? இதெல்லாம் மனசுலே வச்சுக்கக் கூடாது'' என்றனர் அவர்கள்.

''குட்டுப் பட்டாலும் மோதிர விர





லால் குட்டுப் படணும்; இவன்கிட்டே போயி திட்டு வாங்க வேண்டியிருக்கு" யாரோ ஓர் அதிகாரியைப் பற்றி ஊழியர் குறைப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு வீட்டின் திண்ணையில் மாணவன் ஒருவன் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தான். அவன் தந்தை அவனுக்கு எப்படிப் படிக்க வேண்டும்; பரீட்சை எழுத வேண்டும் என் அறிவுரை கூறிக் கொண்டிருந்தார். "மொத்தத்திலே பார்க்கப் போனா படிச்ச படிப்பெல்லாம் விரல் நுனியிலே இருக்கணும். உன் படிப்பைப் பார்த்து பரீட்சை பேப்பர் திருத்துகிறவர் மூக்கின் மேல் விரலை வைக்கணும்" என்றார்.


"..... அப்போ, பகவான் தன் கால் விரலால் மலையை அழுத்தினார். இராவணன் அடியிலே மாட்டிக்கிட்டான்" கோயிலின் அருகே கதாகாலட்சேபம் நடந்து கொண்டிருந்தது.

"என்னது, உன் மருமகள் இப்படி உன் கண்ணுலே விரலை விட்டு ஆட்டுறா; எல்லாம் நீ கொடுத்த இடம் தான்" யாரோ இரு கிழவிகள் பேசிக் கொண்டிருந்தனர், "அவள் விரலிலே வைர மோதிரம் போட்டிருக்காளே; அதனாலேதான் அவளுக்கு அவ்வளவு திமிர்" பதிலளித்தாள் மற்றவள்.

"வெட்டி வேர் வாசம் விரலுக்குள்ளே வீசும்" எங்கோ திரைப் பாடல் ஒலித்தது. 'தீக்குள் விரலை வைத்தால்....' பாரதியின் பாடலை ஓர் இளைஞன் பாடிக் கொண்டிருந்தான். 'வீணையடி நீ எனக்கு; மேவும் விரல் நானுனக்கு' என மற்றொருவன் பாடினான்.

தெரு முனையில் கூட்டமாக இருந்தது. ஒரு விரலை நீட்டியபடி தலைவர் ஒருவரின் சிலைக்குச் சற்றுத் தள்ளி ஒரு பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார் ஒருவர். "யாருக்கு ஓட்டுப் போடறதுன்னே தெரியல்லே; ஒருத்தர் ரெண்டு விரலைக் காட்டுகிறார்; இன்னொருத்தர் அஞ்சு விரலை விரிச்சுக் காட்டுறார். இன்னொருத்தர் அஞ்சு விரலைச் சேர்த்துக் காட்டுறார். இந்த விரலுக்குள்ளேயே நாடே அடங்கிப் போச்சு" என்று கூட்டத்திற்கு வந்திருந்த நடுத்தர வயதுக்காரர் அருகிலிருந்த பேண்ட் வாலிபரிடம் கூறிக் கொண்டிருந்தார். "உலகமே விரலிலே அடங்கிப் போச்சுங்க; 'சர்ச்சில்' அன்னிக்கு இரண்டு விரலைக் காண்பிச்சுத்தானே 'வி' பார் 'விக்டரி' (V for Victory)ன்னு வெற்றி மேலே — வெற்றி குவிச்சார்; பெரிய பெரிய தலைவருங்களுடைய விரல் காட்டுகிற திசையிலேதானே உலக வரலாறே ஓடிக்கிட்டிருக்கு" என்று இவர் பதிலளித்தார்.

ஆற்றங்கரையைத் தாண்டிக் கொண்டிருந்தேன். காற்று வாங்கிக் கொண்டிருந்த இரண்டு மூன்று பேர் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர். "அப்புறம்.... அந்தக் கதையை முடிக்கல்லியே.... அந்த முனிவர் ஒரு விரலைக் காட்டினார், ஒன்றேதான் உலகமென்று; இந்த முனிவரோ இரு விரல்களைக் காட்டினார், சக்தியும் சிவனும் தான் உலகமென்று. உடனே அந்த முனிவர் மூன்று விரல்களைக் காட்டினார், மும்மூர்த்திகள்தான் உலக முதல்




வர்கள் என்று; உடனே இவர் நாலு விரல்களைக் காட்டினார். பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், சிவம் என்று. அந்த முனிவரோ அஞ்சு விரல்களைக் காட்டினார், பஞ்ச பூதங்கள்தான் உலகைப் படைச்சுது என்று. இந்த முனிவரோ அஞ்சு விரல்களையும் மடக்கி, ஓங்கிக் குத்துவது போல் காட்டினார், ஆத்ம ஞானம்தான் எல்லாவற்றிலும் உயர்ந்தது என்று. ஆக இப்படி இந்த விரலுக்குள்ளேயே இந்த அண்ட சராசரமும் எல்லா வேதாந்தமும் அடங்கிப் போயிடுத்து" என்று ஒரு வேதாந்தி பேசிக் கொண்டிருந்தார்.

வானத்தில் பூரண நிலா ஜிலு ஜிலுவென்று ஜொலித்துக் கொண்டிருந்தது. யாரோ ஒரு பாட்டிக்குப் பேரன் புராணக் கதை வாசித்துக் கொண்டிருந்தான். "இந்த ஏகலைவன் விரலிலேதான் இந்த உலகத்தின் எதிர் காலச் சரித்திரமே அடங்கியிருக்கு தென்று அந்தக் குரு தெரிந்து கொண்டு அந்த விரலையே குருதட்சணையாய்க் கேட்டார்" என்று உருக்கமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

கடைத் தெரு வந்தது. 'நெய்ல் பாலிஷ்' (Nail Polish) ஒண்ணு கொடுங்க ஒரு பெண் வாங்கிக் கொண்டிருந்தாள்.

"இந்த விரலுக்குள்ளே உலகமே அடங்கியிருக்கு. ஒருத்தருக்குள்ள மாதிரி மற்றவங்களுக்கு விரல் ரேகை அமையாது. இந்த விரல் ரேகையை வச்சுத்தான் இன்னிக்கு எல்லாத் திருட்டையும் கண்டு பிடிக்கிறோம்" போலீஸ் அதிகாரியொருவர் பக்கத்





திலொருவரிடம் பேசிக் கொண்டே சென்றார். "உன் விரல் ரேகையை வச்சு உன் வருங்காலத்தைச் சொல்றேன்" ஒரு ஜோதிடர் ஒரு சிறுமியிடம் கூறிக் கொண்டிருந்தார்.


பக்கத்திலே சந்தைத்திடல்நிரம்பிக் கொண்டிருந்தது. மறு நாள் கருக்கலில் சந்தை. யாரோ ஒரு தரகர் தன் கையை மற்றொருவரின் கையோடு துண்டால் மறைத்தபடி விரலைத் தொட்டுத் தொட்டு விலை பேரம் பேசினார். விரல் இங்கு பேரம் பேசுகிறதோ?

பக்கத்தில் 'டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்' வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. "விரல்தான் இதுக்கு உயிர் நாடி" — பயிற்சி அளிப்பவர் மாணவர்களிடம் விளக்கிக் கொண்டிருந்தார்.

"மாப்பிள்ளையின் விரல் அளவை வாங்கிக்கிட்டீங்களா....? அப்புறம், தாலி கட்டுற சமயத்திலே, தாம்தூம்னு குதிக்கப் போகிறார்" என்று மோதிரம் பற்றிக் குடும்பத் தலைவி தன் வீட்டுக்காரரை எச்சரித்தாள்.

"அவன் ஆறு விரல் காரன்டா, அதிர்ஷ்டசாலி"—யாரைப் பற்றியோ யாரோ குறிப்பிட்டபடி சென்றார்கள்.

"டேய், ஸ்கூலிலே சேர்ந்த பிறகு வாத்தியாரிடம் ஒரு விரலைக் காண்பிச்சா இப்படி; இரண்டுவிரலைக்காண்பிச்சா இப்படி...." விரல் காட்டுவதைப் பற்றிப் புதிதாகப் பள்ளியில் சேரவிருக்கும் நான்கு வயதுத் தம்பியிடம் கூறிக் கொண்டிருந்தான் அண்ணன். "தினசரி வீட்டுப் பாடம் எழுதல்லியோ, விரலை ஒடிச்சுடுவார் வாத்தியார்" எச்சரித்தான் இன்னொரு



வன். "அடப் போடா, அவன் மூக்கிலே விரலை வைக்கிற மாதிரி பிரமாதமாப் படிக்கப் போருன் பார்" என்று தைரியப்படுத்தினான் மற்றொருவன்.

"எங்கம்மா விரல் பட்டா நளபாகம்தான்...." ஹைஸ்கூல் மாணவியொருத்தி மற்றொருத்தியிடம் கூறிக் கொண்டு சென்றாள். ஒரு சிறுவன், "டியூஷன் முடிஞ்சு சீக்கிரமாப் போகலேன்னு எங்கப்பா விரல் என் முதுகிலே பேசும்; சீக்கிரம் வா போவோம்" என்று கூறி வேகமாக நடந்தான். "அது சரி, பின்னே என்ன அணிலை மூணு விரலால் தடவிக் கொடுத்த இராமர் மாதிரியா வீட்டிலே கொஞ்சு வாங்க" என்றான் அவன் நண்பன்.

"மத்தவங்க மேலேயே தப்புச் சொல்லிக்கிட்டிருக்காதே. ஒரு விரல் மத்தவங்களைக் குற்றம் சாட்டும்போது மூணு விரல் உன்னைக் குற்றம் சாட்டுகிறது என்பதை மறந்துவிடாதே" என்று ஒரு மேதை கூறியிருக்கார், தெரியுமல்லவா?" என தத்துவ விளக்கம் கூறியபடி தன் நண்பரோடு சென்று கொண்டிருந்தார் ஒருவர்.

அப்பாடா, மெல்ல மூன்று மைல் தூரம் நடந்தாகிவிட்டது. அருமையான காற்றை அலுக்கும் வரையிலும் வாங்கியாகிவிட்டது. அதோ வீடு வந்துவிட்டது. வீட்டில் போய்க் கால்வலி தீரத் தூங்க வேண்டும்..... அடடே என்ன இது.... வீடு பூட்டியிருக்கிறதே! ஐயய்யோ, விரலைச் சொடுக்கினேன். காலையில் ஆபீசுக்குப் போகும்போது தான் மனைவியையும் பிள்ளைகளையும் கோடை விடுமுறைக்கு ஊருக்கு அனுப்பி விட்டு, சாவியை எடுத்துக் கொண்டு ஆபீசுக்குச் சென்றேன். இப்போதோ வீட்டுச் சாவியை அங்கேயே வைத்துவிட்டு வந்துவிட்டேன். விரலைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே வந்த நான், இங்கேயும் விரலைத்தான் சொடுக்குகிறேன்.

பக்கத்து வீட்டுக்காரர், "சார் வந்துட்டீங்களா, ரொம்ப லேட்டா வர்ரீங்களே.... உங்ககிட்டே ஒரு சந்தேகம்... 'தறிபடும் பாடோ, என் விரல் படும் பாடோ' அப்படின்னு சாயந்திரம் ஒரு கதையிலே படிச்சேன். அப்படின்னு என்ன சார் அர்த்தம்?" என்று யதார்த்தமாகக் கேட்டார். என் முகம் போன போக்கைப் பார்த்தவுடன், "சாருக்கு மூடு சரியில்லை போலிருக்கு. காலையிலே பார்ப்போம்" என்றபடி மெல்ல நகர்ந்தார்.

நான் என்ன செய்வது? மீண்டும் ஆபீசுக்கா போக முடியும்? இப்படியே திண்ணையில் படுக்கலாம் என்றால் கொசு பிடுங்கும். என்ன செய்வது? என்னுடைய ஞாபக மறதியே என்னைப் பழி வாங்கிவிட்டதே! நம் விரலே நம் கண்ணைக் குத்துவது சகஜம்தான்; அதற்காக விரலையா வெட்டிக் கொள்ள முடியும்?

அடடா, மீண்டும் விரல் பற்றிய எண்ணம்தானா? இந்த விரல் நம்மைச் சுற்றி இவ்வளவு பவனி வருகிறதே! என் கால்வலியையெல்லாம் இந்த விரல் பற்றிய சிந்தனைதானே போக்கடித்துக் கொண்டிருந்தது. எனவே, 'விரலே, நீ வாழ்க!' எனக் கூறிவிட்டு, திண்ணையில் அமர்ந்தேன். மீண்டும் ஆபீஸ் போவதா? இப்படியே படுப்பதா? விரல் நீட்டி உங்களைக் கேட்கிறேன்; பதில் சொல்லுங்கள்!

(கல்யாண வீட்டில்)

ஒருவர்: "இவர்தான் கந்தசாமி, என் கடை சிப்பந்தி."

மற்றவர்: "ஓஹோ, அதுதான் கடைசிப் பந்தியிலே சாப்பாடா?"

தோபங்க.



கேரளத்தில்

ஜவகர் பாலபவன்

"கலாசாரமும் விஞ்ஞானமும் நமது இரு கண்கள். நம்து நாட்டுக் குழந்தைகள் இந்திய கலாசாரத்திலும் விஞ்ஞானத்திலும் சிறந்து விளங்க வேண்டும்" என்று கூறியவர் நேருஜி.

நேருஜியின் லட்சியக் கனவுகளுக்கு வடிவம் கொடுக்கத் தோன்றியதுதான் திருவனந்தபுரத்திலுள்ள கேரள ராஜ்ய ஜவகர் பால பவன்.

நேருஜியின் கொள்கைகளால் பெரிதும் கவரப்பட்ட திரு. ஏ. எஸ். மேனன் என்ற ஐ. ஏ. எஸ். அதிகாரியின் பெருமுயற்சியால் 1970 ஆம் வருடம் ஜூலை மாதம் 25 ஆம் தேதி தொடங்கப்பட்டது. கட்டிடத்தைத் திறந்து வைத்தவர் முன்னாள் ஜனாதிபதி திரு. வி. வி. கிரி அவர்கள்.



மகிழ்ச்சியோடு சிரிக்கவும், விளையாடவும், புதியனவற்றைக் கற்றுக் கொள்ளவும் உள்ளதுதான் குழந்தைப் பருவம் என்ற கொள்கையில் இந்தப் பாலபவன் நடத்தப்படுகிறது. இது மற்றப் பள்ளிகளைப் போல



* பாலபவன் பிரின்சிபால் சுகதகுமாரி.

இல்லை. 5 வயது முதல் 15 வயது வரை உள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு, சாதாரண நாட்களில் மாலை நேரங்களிலும், ஆண்டு விடுமுறையின் போது காலை மாலை நேரங்களிலும் கலையும் விஞ்ஞானமும் கற்றுக் கொடுக்கும் ஒரு கலைக்கூடம் இது! ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை இதன் பிரின்சிபாலாக இருப்பவர் திருமதி சுகத குமாரி. இவர் ஒரு பிரபலமான கவிஞரும் கூட.

இவரது அறையினுள் நாம் நுழைந்தவுடன் நம் கண்களில் தென்படுவது நேருஜி நைனி சிறையில் இருந்தபோது எடுக்கப்பட்ட படமும், இந்திரா




* பாலபவன் கட்டிடம்.

பிரியதர்சினியின் இள வயதுப் படமும்தான். மிகப் பெரிய அளவில் என்லார்ஜ் செய்து மாட்டப்பட்டிருக்கின்றன.

பாலபவனின் வாசலில் நம்மை வரவேற்பது ஓர் அசல் பழைய விமானம்.

பாலபவனில் நுழைந்ததும் —

'தாம் தித்தா ... தை தத்தை... தாம் தித்தா தைதித்தை' என்று நடன ஆசிரியை பாட, நாட்டியமாடும் சிறுமிகளில் சிலர் பத்மா சுப்ரமணியத்தை



* பாலபவனில் அசல் விமானம்.

யும், கமலாவையும் நினைவுபடுத்துகின்றனர்...

கும்பகோணம் பிடில் ராஜமாணிக்கம் பிள்ளையைப் போன்றோ, லால்குடி ஜெயராமனைப் போன்றோ வருவதற்கு நம்பிக்கையூட்டும் இளம் வயலின் வித்வான்கள்...

வீணையின் நாதமும் கேட்கிறது... மிருதங்கத்தின் ஒலியும் கேட்கிறது.

கிடார்... டிரம்ஸ்... டிரம்பெட்.....



* வீணை வாசிக்கப் பயிற்சி.



* பாலபவனில் நாட்டியப் பயிற்சி.

குழந்தைகளின் கோரஸ்... கர்னாடக இசை... மெல்லிசை... ஆர்மோனியத்தின் தனி இசை...

டிராயிங், பெயிண்டிங் செய்யும் குழந்தைகள்... எத்தனை எத்தனையோ ரவி வர்மாக்கள் உருவாகப் போகிறார்கள்!

இன்னும், களிமண் மாடலிங்... ராய் சௌத்ரி மறைந்தாலென்ன? எத்தனையோ ராய்சௌத்ரிகள் இதோ இருக்கிறார்கள்...



* பாலபவனில் நடிக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கதை, கவிதைகள் சொல்ல, எழுதப் பயிற்சி — கண்ணதாசனுக்கும் சுஜாதாவுக்கும் எதிர்காலத்தில் பஞ்சமேயில்லை.

ஏரோ மாடலிங் — பறக்கும் பொம்மை விமானம் செய்து விடுவது. இது ஒரு 'த்ரில்லிங்' அனுபவம்.

எலெக்ட்ரானிக்ஸ் சம்பந்தப்பட்ட எல்லா நுணுக்கங்களும் கற்றுத் தரப்படுகின்றன. இன்று புகைப்படக் கலையும் சொல்லித் தரப்படுகின்றது.

விளையாட்டு மைதானத்தில் —

ஹாக்கி, கால்பந்து, வாலிபால்,

டென்னிஸ்... உடற்பயிற்சிகள்...

நாடக அரங்கில் நடிப்புப் பயிற்சி—டைரக்ட் செய்ய, நாடகம் எழுதப் பயிற்சி... எத்தனையோ சிவாஜி கணேசனும்பாலச்சந்தரும்உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

நல்லதொரு நூலகமும் உண்டு.

ஒரு சில சிறுவர் சிறுமியர் இவை எதிலும் சேராமல் ஆங்காங்கே கொஞ்ச நேரம் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த ஆசிரியரும் ஆசிரியையும் குழந்தைகளை அடிப்பதோ, திட்டுவதோ கிடையாது.



* ஓவியக் கலையில் தேர்ச்சி.

இந்தக் குழந்தைகளின் முகங்களில் தான் எத்தனை மகிழ்ச்சி!

குழந்தைகளுக்காக ஒரு பத்திரிகையும் நடத்தப்படுகிறது. அதன் பெயர் 'தளிர்' பால பவனில் படிக்கும் குழந்தைகளின் படைப்புகளுக்கு முதலிடம் தரப்படுகிறது இந்தப் பத்திரிகையில்.

குழந்தைகளுக்காக 'பாலசித்ரா' பிலிம் கிளப் நடத்தப்படுகிறது.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குழந்தைகள் பங்கு கொள்ளும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.



* கோரஸாகப் பாடப் பயிற்சி.



* களிமண் மாடலிங்.

பாலபவனின் பிரின்சிபால் திருமதி சுகத குமாரி கூறுகிறார்:

"குழந்தைகளுக்குஇசையிலும்,கலையிலும், இலக்கியத்திலும், விளையாட்டிலும், விஞ்ஞானத்திலும் ஒரு ரசனையை வளர்ப்பதே எங்கள் நோக்கம். குறிப்பிட்ட துறையில் அவர்களுக்கு அதிக ஈடுபாடு இருந்தால் மேற்கொண்டு அவர்கள் தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு கற்றுக் கொள்ளலாம். வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படும்போது, தங்களுடைய குழந்தைப் பருவத்தை நினைத்தாலாவது அவர்களுக்கு இனிய நினைவும் மகிழ்ச்சியும் கிடைக்க வேண்டும் என்பதே எங்கள் லட்சியம்."



* பாட்டுப் பாடத் தயார்.

பாலபவனுள் சென்றால், அதை விட்டு வெளியே வரக் குழந்தைகளுக்கு மனமே வருவதில்லை!

அவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும்தான்! ஏனென்றால் அங்கு சென்று திரும்பி வந்தால் ஏதோ ஓர் அதிசய உலகத்திற்குச் சென்று வருவது போன்ற பிரமையும், மிகுந்த மனநிறைவும் மகிழ்ச்சியும் ஏற்படுவதுதான் அதற்குக் காரணம்!

— படங்களும் கட்டுரையும்:
கமலநாதன்.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)

3608 க. கண்ணன், 9—ஏ, சாந்தி நகர், அம்மாப்பேட்டை, தஞ்சாவூர்—61440 1.

3609 கே. சுபா, 14, அம்மையப்ப இல்லம், திருப்பத்தூர், இராம்நாட் ஜில்லா—623211.

3610 க. ரெங்கநாதன், 7, அக்ரஹாரம், நீடாமங்கலம்—61440 4.

3611 என். ரமேஷ், 15—ஈ, மெயின் ரோடு, கவுந்தப்பாடி.

3612 ரெ. நா. ராஜன், 9/1469, பச்சண்ணு சந்து, மேலரத வீதி, தஞ்சாவூர்—6130 0 9.

3613 ரெ. ரமேஷ், 9/1469, பச்சண்ணு சந்து, மேல ரத வீதி, தஞ்சாவூர்—6130 0 9.

3614 ர. ராதிகா, 75, கோர்ட் ரோடு, சங்கர் பில்டிங்ஸ், நாகர்கோவில்.

3615 எஸ். அனந்தராகவன், பிளாக் எண்:22, பிளாட் எண்:15—சி, பி.டபிள்யூ.டி. குவார்ட்டர்ஸ், கே.கே. நகர், சென்னை—60 0 0 78.

3616 ந. மோகன் 4/58, தாமஸ் பார்க், ரேஸ்கோர்ஸ், கோவை—18.

3617 ந. சத்யன், 4/58, தாமஸ் பார்க், ரேஸ்கோர்ஸ், கோவை—18.

3618 சி. சாம்பமூர்த்தி, 17, பராங்குச தேசிகர் தெரு, ஹரித்திரா நதி போஸ்ட், மன்னார்குடி.

3619 ஏ. தீபா, 15, வெங்கடேச ஐயர் தெரு, சாமிமங்கலம், பெரியார் மாவட்டம் — 638 401.

3620 இராம. இலக்குவன், 11, மீனாட்சி அம்மன் கோயில் தெரு, மீனாட்சிபுரம், 1 ஆம் தெரு, முத்துப்பட்டணம், காரைக்குடி — 623 001.

3621 மா. ஜெயந்தி, பெரிய மலையாம்பட்டு, தென்னம்பட்டு அஞ்சல், (வழி) துத்திப்பட்டு, வ. ஆ. மாவட்டம். வ. ஆ. மாவட்டம் — 635 811.

3622 வெ. கலைவாணி, பெரியமலையாம்பட்டு, தென்னம்பட்டு அஞ்சல், (வழி) துத்திப்பட்டு, வ. ஆ. மாவட்டம் — 635 811.

3623 **P. J. Senthilkumar, 693, B. B. Garden Road, Out house, Old Agraharam, Mysore — 4.**

3624 ர. சரத்பாபு, 32, கோமிசாரி பஜார், வேலூர் — 632 001.

3625 பி. என். மதன்குமார், 184/9, ஜெயில் ஹில், உதகமண்டலம் — 643 001.

3626 ஆர். குமார், 4/ஜி, காட்டரி ரோடு, குன்னூர் — 643 102.

3627 ஜி. சரவணன், துரை பாலம் ஹவுஸ், பாரதியார் தெரு, சதாசிவ நகர், மதுரை—20.

3628 வ. உஷா, 220, 'என். பிளாக், அண்ணா நகர், சென்னை — 600 102.

3629 தி. கண்ணன், த/பெ. திருநாவுக்கரசு, செட்டித் தெரு, பொன்விளைந்தகளத்தூர்.

3630 ஆர். ராமானுஜம், 14, கிழக்குக் குளக்கரைத் தெரு, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டம்.

3631 கா. செந்தில்குமார், 34, எஸ். ஆர். ஓ. தெரு, தேன்கனிக் கோட்டை — 635 107.

3632 ரா. ரமேஷ், 'E' மாதிரி தெரு — 1, தமிழ்நாடு மின்சார வாரியம், நெத்திமேடு, பவர் ஹவுஸ், சேலம் — 636 002.

3633 கோ. புனிதா, 3 ஏ, லக்கி பங்களா, கிண்டி, சென்னை—32.

3634 எம். யு. ஜோதிலட்சுமி, 23, முதல் மெயின் ரோடு, யுனைடெட் இந்தியா காலனி, கோடம்பாக்கம், சென்னை — 24.

3635 என். ராஜசேகர், வி. ஏ. கோயில் தெரு, வாலாஜாபாத், செங்கல்பட்டு மாவட்டம்.

3636 கே. எஸ். குமரகுருபரன், த/பெ. கே. ஷண்முகம், கொழுமம் — 638 212. உடுமலைப்பேட்டை தாலுகா.

3637 தெ. ஆறுமுக நயினார், 4/7, வடக்குரத வீதி, விக்கிரமசிங்கபுரம் — 627 425, நெல்லை மாவட்டம்.

3638 க. முத்துகுமார், 270, கன்னிமாரம்மன் கோயில் தெரு, தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

3639 ரா. ஜெய்குமார், 13, வெங்கடேஸ்வர நாயக்கன் தெரு, ஏழு கிணறு, சென்னை 600 00!

3640 எம். மைதிலி 29—சி, (ஏ.ஏ. 117) சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை—600 040.

3641 த. கண்மணி, 321, செந்தில் நகர், திருமுல்லை வாயில் அஞ்சல், சென்னை—600 062.

3642 த. இளவரசு, 321, செந்தில்நகர், திருமுல்லைவாயில் அஞ்சல், சென்னை—600 062.

3643 என். தேவிப்பிரியா, 6, செல்லப்ப கிராமணி தெரு, புரசைவாக்கம், சென்னை—7.

3644 தா. பாலகிருஷ்ணன், 97, முண்டக நாடார் தெரு, சிவகாசி — 626 123.

3645 கி. வா. சத்திய நாராயணன், 1/பி, நேதாஜி தெரு, புதுபெருங்களத்தூர், சென்னை—63.

3646 எஸ். கிருத்திகா, 17—1—4, தெற்குத் தெரு, அருப்புக்கோட்டை, இராமநாதபுர மாவட்டம்.

3647 ஜே. பி. உமா மகேஸ்வரி, 153/பி. ரயில்வே காலனி, மதுரை – 10.

3648 க. லதா மகேஸ்வரி, த/பெ. கல்யாணசுந்தரம், பொள்ளாச்சி ரோடு, பழனி.

3649 பூ. சுவாமிநாதன், 1, கருமாயா வீதி – 1, கோபி செட்டி பாளையம், பெரியார் மாவட்டம்.

3650 இரா. சிவகுமார், 15, ஆண்டியப்பர் தெரு, கும்பகோணம்.

3651 எஸ். ஆனந்த், 2/45, அக்ரகாரம், வழுத்தூர், தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு 614 210.

3652 சிவ. இளங்கோவன், த/பெ. இ. சிவகுருநாதன், கீழைப் பெருமழை அஞ்சல்.

3653 எச். விஜயலக்ஷ்மி, 5, கான்சா மேட்டுத் தெரு, 1 வது சந்து, மதுரை – 1.

3654 ஏ. முத்தையா, த/பெ. எம். ஏகநாதன் அக்கவுண்டன்ட், இந்தியன் பாங்க், இராஜபாளையம்.

3655 ஐ. எஸ். கற்பகவல்லி, 38, பெருமாள் கோயில் வடக்கு மாட வீதி, வில்லிவாக்கம், சென்னை – 49.

3656 எஸ். மகேஷ், த/பெ. கே. யூ. ஸ்ரீரங்கராயன், காத்தசாமி பாளையம், தஞ்சை தாழையூர், வழி – ஈரோடு ஆர். எம். எஸ்.

3657 பி. முத்துக்குமார், த/பெ. ஜி. பி. பாலசுப்பிரமணியம், விவசாய ஆராய்ச்சி நிலையம், ஆழியார் நகர், கோவை மாவட்டம் – 641 101.

3658 ஆர். லலிதா, ஐ. டி. ஐ. குவார்ட்டர்ஸ், கூனூர், நீலகிரி மாவட்டம்.

3659 இல. கல்பனா, 38, ரயில் நகர், திருச்சி – 620 004.

3660 இராம. செந்தில்குமார், 5–58 ஜி. மெயின் ரோடு, திருக்கடையூர் அஞ்சல், தரங்கம்பாடி தாலுகா.

3661 கே. அசோக், 46, பேரண்டம்மாள் தெரு, சிவகாசி, இராமநாதபுரம் மாவட்டம்.

3662 எல். ராமதுரை, 20, ஹனுமந்தாபுரம், தாராபுரம், பெரியார் மாவட்டம்.

3663 ஆர். முருகன், 85 ஏ, காலேஜ் ரோடு, நங்கைநல்லூர், சென்னை – 61.

3664 எஸ். செந்தில்குமரன், த/பெ. ஆர். லட்சுமணன், எஸ். வி. வி. ஹைஸ்கூல், குல்லூர் சந்தை – 626 053.

3665 ராம்பிரபு, 105, மாதா கோவில் தெரு, ஜெயா நகர், போரூர், சென்னை – 602 104.

3666 கே. கிருஷ்ணகுமார், ஏ 16/6, டீன்ஸ் காம்பவுண்டு, நத்தம் ரோடு, மதுரை – 625 002.

3667 கே. கன்னியப்பன், ஏ 16/6, டீன்ஸ் காம்பவுண்டு, நத்தம் ரோடு, மதுரை – 625 002.

3668 ஜி. சுமித்திரா, 41, கப்பல் போலு செட்டி தெரு, சென்னை – 21.

3669 சி. பிரேம்நாத் சங்கர், 6, பி. டபிள்யூ. டி. காலனி, குல்லூர் சந்தை, விருதுநகர் (வழி) – 626 053.

3670 **டி. தேவராஜன், 6/4,** முக்கந்தர் தெரு, இராமனுஜபுரம், கோவை – 641 045.

3671 **ஆர். பழனிவேலன்,** 21 எப், எண் 2, மாரியம்மன் கோவில் தெரு, சஞ்சீவிராயன் பேட்டை, சேலம் – 636 006.

3672 டி. இராமமூர்த்தி, 36, தெற்கு ரத வீதி, திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

3673 பி. கே. ரமேஷ்மூர்த்தி, 100, என். ஜி. ஜி. ஓ. நகர், செங்கல்பட்டு – 603 001.

3674 ஏ. எல். ராமு, 2, தாமஸ் ரோடு, நரிமேடு, மதுரை – 625 002.

3675 சு. மாரிமுத்து, முத்துப்பேட்டை அஞ்சல், தஞ்சை மாவட்டம் – 614 704.

3676 அ. சையது காதர் பாவா, 15/பி. பள்ளி வாசல் தெரு, ஆலங்குடி – 622 301, புதுக்கோட்டை மாவட்டம்.

3677 என். சீனிவாசன், த/பெ. என். சுப்பு, ஆசிரியர், ஸ்ரீ. தெ. அ. தொ. பள்ளி, குன்றக்குடி – 623 206.

3678 ஆர். பாரி, த/பெ. கே. ராமசாமி, பரிசல் துறை ரோடு, பட்டவாய்த்தலை, திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.

3679 ஆர். அருணாசலம், எண். 4, இராமசாமி தேசிக தெரு, சலவன்பேட்டை, வேலூர்.

3680 மு. மதுசூதன், எப் – 161, பெரியார் நகர், ஈரோடு – 638 001.

3681 **A. Charavanan, C/o. N. N. Chawla, 15/82, Old Rajender Nagar, New Delhi – 110 060.**

3682 கே. சீனிவாசன், ஸ்ரீ ஞானானந்தா மெட்ரிக்குலேஷன், வாணமாமலை தெரு, திருக்கோவிலூர்.

3683 மா. ஹேமமாலினி, த/பெ. எஸ். வி. எம். சுவாமிகள், வரகவி இல்லம், 39, குமரன் நகர், ராஜாஜி நகர், பாண்டிச்சேரி – 8.

3684 க. பொற்கோ, த/பெ. டி. கணேசன், பெருமாள் கோயில் தெரு, பேரங்கியூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை தாலுகா.

3685 க. ரமேஷ்பாபு, சி/2199 எப், கைலாசபுரம் (பி. எச். இ. எல்.) திருச்சி – 620 014.

3686 என். சத்தீஷ்குமார், 7/12, வைசியர் தெரு, ஆவலூர் பேட்டை, தெ. ஆ. மாவட்டம் – 604 201.

3687 டி. ராதிகா, 104, குட்டி கவுண்டர் வீதி, இரத்தினபுரி, கோவை – 641 027.

3688 க. சங்கரேஸ்வரி, 62, தேவாங்கர் கீழத்தெரு, மதுரை ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம் – 626 125.

3689 சி. பி. சிவானந்தம், குவார்ட்டர்ஸ் எண். E – 2/120 எப், கைலாசபுரம், பி. எச். இ. எல். திருச்சி – 14.

(இன்னும் வரும்)


வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி!

கதை: ஆனந்தி படம்: வினு





தசரதனே கேள்! மாரீசன், சுபாஹு என்ற அரக்கர்கள் என் யாகத்தைக் கெடுக்கின்றனர். அவர்களை அடக்க ராமனை என்னுடன் அனுப்பு!
ஆ! ராமனையா? அவன் சிறு பிள்ளை. நான் வருகிறேன், படைகளோடு...
தசரதனே! கொடுத்த வாக்கை மீறுகிறாய்! நான் வந்த வழியே போகிறேன்! சுகமாய் இரும்!
நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார் குலகுருவான வசிஷ்டர்.
மன்னா! விசுவாமித்திரர் ஏமாற்றம் அடைந்தார்; ஆனால் கோபமுற்று சபிக்கவில்லை, பார்த்தீரா? அவர் கதையைக் கூறுகிறேன், கேளும்!
விசுவாமித்திரர் கௌசிக மகாராஜாவாக இருந்த காலத்தில் தேவியருடனும் பரிவாரங்களுடனும் காடு கடந்து செல்ல நேர்ந்தது...
நாவும் தொண்டையும் வரண்டு விட்டன. தண்ணீர் கிடைத்தால் தேவலாம்.



வசிஷ்டரின் ஆசிரமம் எதிர்ப்பட்டது. தாகம் தணிந்தனர்.
அரசனே! இளைப்பாறி உணவருந்திச் செல்வீராக.
கௌசிகன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.
முனிவரே! நீர் அருந்தியதே போதும். இத்தனை வீரர்களுக்கு எப்படி உம்மால் விருந்து படைக்க முடியும்?
முடியாத காரியத்தைச் செய்வதாகக் கூறுவேனா? ஆற்றில் நீராடி வருவீராக!
அவர்கள் சென்றதும் வசிஷ்டர்...
சபலே! அரசனுக்கும் பரிவாரங்களுக்கும் உணவு அளிக்க வேண்டும்.
கௌசிக மன்னரும் பரிவாரங்களும் திரும்பி வந்த போது...
அட! இது என்ன அதிசயம்!


பிரபோ! கண்டு பிடித்து விட்டேன்... முனிவரிடம் உள்ள ஒரு பசுதான் இத்தனை பேருக்கும் விருந்து படைக்கிறது!
வசிஷ்டர் உபசரித்தார்...
மன்னவா! தாம்பூலம் தரித்துக் கொள்ளுங்கள். தங்களுக்கும் தேவியருக்கும் திருப்திதானே?
பரம திருப்தி... ஆனால்...
ஆனால் என்ன? இன்னும் என்ன வேண்டும்?
காட்டில் வாழும் உங்களுக்கு இந்த அற்புதப் பசு எதற்கு? எனக்குத் தந்து விடுங்கள். உபயோகமாய் இருக்கும்.
கௌசிகனே! சபலை என் சகோதரி. என்னை விட்டுப் பிரிய மாட்டாள்.
நீங்கள் தராவிட்டால் என்ன? அரச ஆணை பிறப்பித்து இழுத்துப் போகிறேன்!
அரச ஆணை யானாலும் அதர்மம் வெல்லாது. முயன்று பாரும்!... சபலை உன்னைக் காத்துக் கொள்!


அருகில் வந்த வீரர்களை, சபலை முட்டித் தள்ளியது.
ஹூம்! ஹூம்!
ஆ!
ஐயோ!
வியப்புடைந்த கௌசிகன் இன்னும் நிறைய வீரர்களை ஏவினான்.
அப்போது சபலையின் மூக்கிலிருந்து படை வீரர்கள் தோன்றி...
இந்தப் பசுவுடன் தான் தலைநகர் திரும்ப வேண்டும்! ம்.. பிடித்துக் கட்டி இழுத்துப் போங்கள்!
... விரைவில் வளர்ந்து கௌசிகனின் சேனை வீரர்களை விரட்டினார்கள்!
ஐயோ! அப்பா!
ஓடு! தப்பினால் போதும்!
கௌசிக மன்னனும் அவர் பின்னோர்களும் யுத்தம் செய்தனர்.
ஹூம்! கேவலம் ஒரு பசுவிடம் நாம் பயப்படுவதா?



ஆனால் சபலையின் மூக்கிலிருந்து தோன்றிய வீரர்களை வென்றனர். வசிஷ்டர் கருணை காட்டினர்.
வேண்டாம் அவர்களை விட்டு விடுங்கள்!
வசிஷ்டரிடம் உயிர்ப்பிச்சை பெற்றதை நன்றியோடு எண்ணாமல் அவரையே தாக்க வந்தனர் இளவரசர்கள்...
இந்தக் கிழவனால்தான் நமக்கு இந்த அவமானம்! அடித்து நொறுக்கு!
ஆனால் வசிஷ்டரின் ஓர் அதட்டலே அவர்களை சாம்பலாக்கி விட்டது.
அடேய்! விடலைகளா! நில்லுங்கள்!
கௌசிக மன்னன் துக்கமும் அவமானமும் அடைந்து...
ஞான பலம், தவ பலத்துக்கு முன்னால் மன்னனுடைய பணபலமோ, படை பலமோ, அதிகார பலமோ பயனற்றது என்பதை உணர்ந்தேன்.
உன் குமாரர்களை உயிர்ப்பிக்கிறேன்.
கௌசிகன் தன் மகனுக்கு முடி சூட்டி ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு இமய மலைச்சாரலில் தவமிருந்தார்.



சிவபெருமான் தோன்றி, கேட்ட வரங்களை அருளினார்.
தனுர்வேதத்தை அளித்தேன். தேவ, கந்தர்வ, யக்ஷ ராட்சஸர்கள் அடைந்த எல்லா அஸ்திரங்களையும் உனக்குத் தந்தேன்!
வரங்கள் அளித்த வலிமையோடு விசுவாமித்திரர் என்ற ரிஷியாக வசிஷ்டர் ஆசிரமத்துக்கு வந்தார் கௌசிகன்.
வசிஷ்டரைத் தொலைத்து விடுகிறேன்!
விசுவாமித்திரர் ஏவிய தீக்கணையால் ஆசிரமம் பற்றி எரிந்தது.
தீ! தீ! ஐயோ! ஓடு! ஓடு!
பயப்படாதீர்கள்! நான் இருக்கிறேன்.
ஹஹ் ஹ ஹா!
விசுவாமித்திரர் கேலியாகச் சிரித்தார்.
நீர் இருக்கிறீரா? எத்தனை காலத்துக்கு? இதோ இந்த அக்னி அஸ்திரத்தினால் சாம்பலாகப் போகிறீர்!
வசிஷ்டர் தம் முன்னால் பிரம்ம தண்டத்தை நிறுத்தினார். சீறி வந்த அக்னியாஸ்திரம்.....
அட! பிரம்ம தண்டத்தின் அருகில் சென்றதும் அக்னி அஸ்திரம் அணைந்து விட்டதே!





ஏராளமான அஸ்திரங்களை ஏவி களைத்துப் போனார் விசுவாமித்திரர். அத்தனையையும் பிரும்ம தண்டமே தடுத்து விட்டது!
கடைசியில் பிரம்மாஸ்திரத்தை ஏவ அதையும் பிரம்மதண்டம் விழுங்கிற்று...
ஆகா! வசிஷ்டர் நெருப்பு போல ஜொலிக்கிறாரே! நான் தோற்றேன்...
விசுவாமித்திரர் துயருடன் இமயத்துக்குத் திரும்பினார்.
அநேக ஆண்டுகள் கடுந்தவம் இருந்தார் விசுவாமித்திரர். பிரும்மா தோன்றி...
உன் தவ மகிமையால் ராஜரிஷி பதவி அடைந்தாய்!
அது போதாது! நானும் பிரும்மரிஷியாக வேண்டும்! இன்னும் கடுமையாகத் தவம் செய்வேன்!
அப்படியானால் சரி, உன் இஷ்டம்... நான் போய் வருகிறேன்...
பரமசிவன் என்னை ஏமாற்றி விட்டார். வசிஷ்டர் ஒரு கோலை முன் நிறுத்தி இறைவன் தந்த அஸ்திரங்களை எல்லாம் விழுங்கச் செய்து விட்டாரே...!
திரிசங்கு என்ற பேரரசனுக்கு வசிஷ்டர் குரு. ஒரு நாள்...
சுவாமி! உயிர் பிரியாமல் இந்த உடலோடு நான் சுவர்க்கம் செல்ல நீங்கள் தான் உதவ வேண்டும்!
தகாத ஆசை; நடக்காத காரியம்; மறந்து விடு!


வசிஷ்டருடைய குமாரர்களிடம் சென்றான் திரிசங்கு...
உங்கள் தந்தை முடியாது என்று கூறிய யாகத்தை நீங்கள் நடத்துங்கள்! நீங்கள் மனம் வைத்தால் என்னை இந்த உடலோடு சொர்க்கத்துக்கு அனுப்ப முடியும்!
வசிஷ்ட புத்திரர்கள் கோபம் அடைந்து...
குருவின் சொல்லுக்குக் கட்டுப் படாத நீர் மூடனே! நீ சண்டாளனாவாய்!
அழகிழந்தும் வலிமை இழந்தும் சண்டாளனாகச் சுற்றினான் திரிசங்கு...
ஒரு நாள் கானகத்தில் திரிந்த போது விசுவாமித்ரர் ஆசிர மத்தைக் கண்டான்...
நீ திரிசங்கு அல்லவா?
ஆம் சுவாமி! என் குரு புத்தி ரர்கள் என்னைச் சபித்து விட்டனர்!
திரிசங்கு நடந்ததையெல்லாம் கூற...
உன் குரு செய்யாத காரியத்தை நான் நிறைவேற்றுகிறேன்! இந்தச் சண்டாள வடிவத் தோடேயே சொர்க்கம் புகுவாய்!


சீடர்களை அனுப்பி முனிவர்களை யாகத்துக்கு அழைத்தார் விசுவாமித்திரர்.
ஒரு சண்டாளனைத் தேவலோகம் அனுப்ப யாகமா? அழகுதான்!
இப்படிப் பேசாதீர்கள். விசுவா-மித்திரர் பெரும் தபஸ்வி; கோபக்காரர். நாம் போவோம்.
அழைக்கச் சென்ற சீடர்கள் திரும்பி வந்து...
குருவே! உங்கள் அழைப்பை எல்லோரும் ஏற்றனர். வசிஷ்ட குமாரர்கள் மட்டும் வரவில்லை. சண்டாளனுக்கு யாகமா? என்று பரிகசிக்கின்றனர்!
வசிஷ்ட குமாரர்கள் சாம்பலாகட்டும்!
வந்திருந்த முனிவர்கள் பயத்தினால் யாகத்தை நன்றாக நடத்தினர்.
அக்னயே ஸ்வாஹா!
விசுவாமித்திரர் தேவர்களை அழைத்தார்...
தேவர்களே! அவிசை வந்து ஏற்றுக் கொள்ளுங்கள்!
தேவர்கள் வரவில்லை. முனிவர்கள் கேலியாகச் சிரித்தார்கள்...
தேவர்கள் யாகத்தை ஏற்கவில்லை!
ஹ ஹ ஹ ஹா!


விசுவாமித்திரர் கோபமும் அகங்காரமும் கொண்டு...
முனிவர்களே! என் தவ வலிமையைப் பாருங்கள்! திரிசங்குவே! உனக்கு என் தவம் முழுதும் தந்தேன்! நீ இப்போதே சுவர்க்கம் ஏறு!
திரிசங்கு ஆகாயத்தில் கிளம்பினான்...
போ! மேக மண்டலங்களைக் கடந்து சென்று சொர்க்க வாசலைத் தட்டு!
சண்டாளன் சொர்க்கத்துக்கு வருவதா? இந்திரனுக்குப் பிடிக்க வில்லை... சொர்க்கவாசலில்...
குரு சாபம் பெற்ற மூடனே! இங்கே வராதே! போ!
இந்திரனால் தள்ளிவிடப் பட்ட திரிசங்கு...
விசுவா மித்திரரே! என்னைக் காப்பாற்றுங்கள்!
முனிவரின் தவ வலிமையால் திரிசங்கு அந்தரத்தில் நிற்க...
நில்! நில்! அங்கேயே!
சொர்க்கத்தில் உனக்கு இடமில்லை என்றால் உனக்காகப் புதிய சொர்க்கத்தை சிருஷ்டிப்பேன்! நீ இப்போது நிற்குமிடத்தி லேயே புதிய நட்சத்திர மண்டலங்கள் தோன்றும்!


புதிய தேவர்களைப் படைப்பேன்! புதிய இந்திரனையும் உருவாக்குவேன்!
இந்திராதி தேவர்கள் பயந்து போனார்கள். ஓடி வந்து...
விசுவாமித்ரரே! தங்கள் தவ வலிமையை உணர்ந்தோம். நீங்கள் படைத்த புதிய உலகங்கள் அப்படியே இருக்கட்டும். எங்களை மன்னித்துக் காக்க வேண்டும்.
திரிசங்கு சொர்க்கத்தைப் படைத்த விசுவாமித்ரர் தேவர்களை மன்னித்தார். பிறகு..
என் தவ பலத்தையெல்லாம் திரிசங்குவுக்காகச் செலவழித்து விட்டேன். மீண்டும் தவவலிமை பெறவேண்டும்.
மேற்கே சென்று புஷ்கர தீர்த்தத்தை அடைந்து கடும் தவம் செய்தார் முனிவர்.
விசுவாமித்ரரின் பிள்ளைகள் அவரைத் தேடி வந்தனர்...
தந்தையே! வசிஷ்டரோடு உங்களால் போட்டி போட முடியாது! நாம் அரச குலத்தினர். தவம் போதும். நாட்டுக்குத் திரும்புங்கள்!


விசுவாமித்ரர் ஆத்திரமடைந்தார்.
என் தவத்தைப் புரிந்து கொள்ளாமல் கலைக்க வந்த மூடர்களே! உங்கள் நாட்டில் பஞ்சம் உண்டாகும்!
பிள்ளைகளைச் சபித்து அனுப்பிய பின் மனம் வருந்தினர் விசுவாமித்ரர்.
இத்தனை தவமிருந்தும் என்ன பயன்? என் முன் கோபத்தை அடக்க இன்னும் கடுமையான தவம் செய்வேன்!
மீண்டும் அநேக ஆண்டுகள் தவம் செய்தார் விசுவாமித்ரர்... பிரம்மா தோன்றி...
உமது தவம் பலித்தது. நீர் பூரண ரிஷி ஆகி விட்டீர்.
விசுவாமித்ரர் திருப்தி அடையவில்லை...
வெறும் ரிஷி பதவிதானே கிடைத்தது; வசிஷ்டருக்குச் சமமான சக்தி பெறும் வரை தவத்தைத் தொடர்வேன்!
இந்திரன் முனிவரின் தவத்தைக் கலைக்க மேனகையை அனுப்பினான்.



மேனகையின் அழகில் மயங்கிய முனிவர் அவளோடு சில ஆண்டுகள் வாழ்ந்தார்.
மேனகைக்கு ஒரு குழந்தை பிறந்தது. விசுவாமித்திரர் விழித்துக் கொண்டார்.
சம்சார வாழ்க்கையில் என் தவத்தை மீண்டும் வீணடித்து விட்டேனே....
சுவாமி! தங்கள் சாபத்துக்கு அஞ்சுகிறேன்...
பெண்ணே! என் மதி மயங்கியது உன் மீது குற்றமில்லை.
இமயமலைச் சாரலை அடைந்து மீண்டும் கடும் தவம் இருந்தார் விசுவாமித்திரர்...
இந்திரன் ரம்பையை அனுப்பினான். அவளால் விசுவாமித்திரரின் தவத்தைக் கலைக்க முடியவில்லை.
தவாக்கினி என்னைச் சுடுகிறது. நெருங்க முடியவில்லை.
பிரம்மா தோன்றி...
மேனகையைச் சபித்தா தவம் செய்தீர். கோபத்தை அடக்கினீர்; இந்திரன் செய்த இடையூறுகளை வென்றீர்.
மகரிஷியாகவும் பிரம்மரிஷியாகவும் ஆகிவிட்டீர்!




அப்போதும் விசுவாமித்ரர் திருப்தி அடையாமல்...
இந்தப் பதவி வசிஷ்டர் வாயால் எனக்குக் கிடைத்தால் மகிழ்ச்சியாக இருக்கும்.
பிரம்மா அதற்கு இசைய அடுத்த கணமே வசிஷ்டரின் ஆசிரமத்தை அடைந்தனர்.
நீங்கள் செய்த கடும் தவங்களின் பலன்களை அடைந்தீர். பிரம்ம ரிஷியானீர். சந்தேகமேயில்லை!
தேவர்கள் பூ சொரிந்து இருரிஷிகளுக்கும் ஆசி கூறினார்கள்.
தசரத மன்னருக்கு விசுவாமித்ரரின் கதையைக் கூறி முடித்தார் வசிஷ்டர்.
இப்படிப்பட்ட தவ வலிமை மிக்க மாமுனிவரோடு ராமலக்ஷ்மணர்களை அனுப்பினால் அவர்கள் எல்லா நன்மைகளையும் அடைவார்கள்.
கவலைப்படாமல் தைரியமாக அனுப்புங்கள்.
நீங்கள்தான் விசுவாமித்ரரைத் திரும்ப அழைத்து வரவேண்டும்.


அவ்வாறே வசிஷ்டர் விசுவாமித்திரரைத் திரும்ப அழைத்து வர...
சுவாமி! வசிஷ்டர் என் அறியாமையைப் போக்கினார். உங்கள் பெருமையை உணர்த்தினார்...
ராமா! லக்ஷ்மணா! இருவரும் முனிவருடன் சென்று அவர் வேள்வியை அசுரர்களிடமிருந்து காப்பாற்றுங்கள்.
அப்படியே ஆகட்டும், அப்பா!
சுவாமி! ராம லக்ஷ்மணர்களை அழைத்துப் போங்கள்.
உன் புதல்வர்களுக்கு சகல மங்களங்களும் உண்டாகும்.
விசுவாமித்திரரின் வேள்வி காக்க ராம லக்ஷ்மணர்கள் சென்றனர். தேவ துந்துபி முழங்கியது. பூ மழை சொரிந்தது. பூங்காற்று வீசியது.

சீனநாட்டுக் கதை

லோசனும் அவன் நாயும்

தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி.



கான்டன் நகரத்தில் லோசன் என்னும் சிறுவன் இருந்தான். அவன் ஒரு துரதிர்ஷ்டசாலி. பிறக்கும்போதே அவனுக்குப் பார்வை இல்லை. அவன் பிறந்த சில நாட்களிலேயே அவனுடைய அம்மா இறந்துவிட்டாள். அப்பா ஒரு தொழிலாளி. அவருக்குப் பிள்ளை மேல் பாசமே இருக்கவில்லை. அவர் ஒரு கல் நெஞ்சுக்காரர். அவருக்குப் பணம் ஒன்றே குறி.

ஒருநாள், அப்பா பிள்ளையைக் கூப்பிட்டார். "லோசன்! உனக்குக் கண் இல்லை. உன்னால் வேலை செய்து சம்பாதிக்க முடியாது. உபயோகமில்லாத ஒரு குருட்டுப்பிள்ளைக்குச் சோறு போட்டு வளர்க்க, இங்கே பரம்பரைச் சொத்து ஒன்றும் குவிந்திருக்கவில்லை. நாளைக் காலை முதல், நீ இந்த வீட்டில் இருக்கக் கூடாது. நீ எங்கே தங்குவாயோ, சாப்பாட்டிற்கு என்ன செய்வாயோ, எனக்குத் தெரியாது. நீயே அதைத் தீர்மானித்துக் கொள்!" என்று கொஞ்சங்கூட இரக்கம் இல்லாமல் சொன்னார். அப்பா சொன்னபடியே லோசன் வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

விழி இல்லாத லோசனுக்கு ஒரே ஒரு வழித்துணைதான் இருந்தது. அது தான் அவனுடைய நாய். லிங்கோ என்று பெயரிட்டு அதனிடம் ஆசையாக இருந்தான். அந்த நாயும் தன் குட்டி எஜமானனை லோசனிடம் மிகுந்த அன்போடு இருந்தது. லோசனோடு அது எல்லா இடங்களுக்கும் போயிற்று. லோசன் ஒரு தடியை ஊன்றிக் கொண்டு, சரியான பாதையை அறிந்து நடந்தான். கரடுமுரடான பாதைகளில் லிங்கோ அவனைக் கவனமாக அழைத்துச் சென்றது.

லிங்கோ வெறும் துணையாக மட்டும் இருக்கவில்லை. அது ஒரு புத்திசாலி நாய். தன் எஜமானனைக் காப்பாற்றுவதற்காக அது பணம் சம்பாதித்தது. லிங்கோவுக்கு நிறைய விளையாட்டுகள் தெரியும். ஜனங்கள் கூடுகிற நாற்சந்தி முனைகளுக்கு அது லோசனை அழைத்துச் செல்லும். லோசன் மூன்று முறை கைகளைத் தட்டுவான். உடனே அவனுடைய நாய் தன் கால்களை மண்டியிட்டுத் தலையைப் பூமியில் வைத்து எல்லாருக்கும் வணக்கம் சொல்லும். அதைப் போல இன்னும் பல வித்தைகளைச் செய்து மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டும். மக்கள் அதைப் பாராட்டி லோசனின் கையில் சில காசுகளைப் போடுவார்கள்.

அந்த மாதிரி லோசனும் அவனுடைய நாயும் காலை முதல் மாலை வரையில் தெருத்தெருவாகச் சுற்றிப் பிச்சை எடுத்தார்கள். கிடைத்த காசுக்கு ரொட்டி வாங்கி இருவரும் பங்கிட்டுச் சாப்பிட்டனர்.

சில ஆண்டுகள் ஆயின. கிழிந்த ஆடை, பரட்டைத் தலை, கையில் தடி— இந்தக் கோலத்தோடு நாயையும் அழைத்துக் கொண்டு லோசன் ஊர் ஊராகப் போனான். மரத்தடி, வயல் வெளி, படிக்கட்டு, திண்ணை, பாழ் மண்டபம் — இப்படிப் பல இடங்களிலும் தங்கி இரவைக் கழித்தான்.

லோசனும் அவனுடைய நாயும் ஒன்றாகப் படுத்து உறங்கினார்கள். ஒரு நாள் வழக்கம் போலத் தன் நாயைக் கூட்டிக் கொண்டு லோசன் ஒரு மரத்தடியில் தூங்கிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு கனவு கண்டான்.



கனவில் ஓர் அழகான தேவதை வந்தாள். ''குழந்தாய் லோசன், என்னைப் பார்க்க முடிகிறதா?'' என்று கனிவோடு கேட்டாள்.

''எனக்கு விழிகள் இல்லையே! இருந்தால் உங்களைப் பார்க்க முடியுமே! ஐயோ! உங்களைப் பார்க்க முடியவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது.''

''வருத்தப்படாதே லோசன்! நான் உனக்கு உதவி செய்வதற்காகத்தான் வந்திருக்கிறேன்.''

''அப்படியா? ரொம்ப நன்றி! என் கண்களுக்கு நீங்கள் ஒளி தரப் போகிறீர்களா? உலகிலுள்ள அழகான பொருள்களை எல்லாம் நான் கண்ணாரக் காண முடியுமா?'' லோசனின் குரலில் ஆர்வம் ஒலித்தது.

''லோசன்! நான் உடனே உனக்குப் பார்வையைத் தரமுடியாது. ஆனால் அதற்குரிய வழியைச் சொல்லுகிறேன். கவனமாகக் கேள். ஒவ்வொரு முறையும் நீ பிறருக்கு நன்மை செய்யும் போதும், அவர்களிடம் உண்மையான அன்பு காட்டும்போதும் உன் கண்ணில் கொஞ்சம் ஒளி கூடும். இவ்வாறு படிப்படியாக நீ முழுப் பார்வையையும் பெறலாம். ஆனால், நீ சுயநலமாக நடந்தாலோ அல்லது பிறரை வெறுத்தாலோ உன் கண்ணின் ஒளி குறையும். முன்னையும் விட இருள் சூழும். நீ பார்வையைப் பெறுவது உன் கையில்தான் இருக்கிறது'' என்று சொல்லி விட்டுத் தேவதை மறைந்தாள்.

விடியும் நேரம் சூரியனின் இளங் கிரணங்கள் லோசனின் முகத்தில் பரவின. அவன் எழுந்தான். என்றைக்கும் இல்லாத மகிழ்ச்சி அவனுடைய மனத்தில் நிறைந்திருந்தது. லிங்கோவும் மகிழ்ச்சியாகத் தன் எஜமானனைச் சுற்றிச் சுற்றி வந்தது. அவனுடைய கையை நக்கியது. 'லொள், லொள்' என்று குரைத்தது.

''லிங்கோ! நீ இல்லாமல் என்னால் ஒன்றுமே செய்ய முடியாது. என் கண்கள் ஒளி பெறுவதற்கு நீதான் உதவி செய்ய வேண்டும். போகலாம்,

வா!'' என்று லோசன் அழைத்தான்.

லோசனும் அவனுடைய நாயும் சாலை வழியாக நடந்து சென்றனர். கனவில் தேவதை கூறிய வார்த்தைகள், லோசனின் காதுகளில் ஒலித்தன. அவனுடைய மனத்தில் ஒரு புதிய நம்பிக்கை ஒளி பிறந்திருந்தது.

சிறிது நேரத்தில் அவர்கள் சாலை ஓரத்தில் இருந்த ஒரு முதியவரைக் கடந்து சென்றனர்.

"ஐயா சாமி! ரெண்டு கண்ணும் இல்லே. சும்மா போகாதீங்க, ஐயா! தருமம் செய்யுங்க!'' என்று அந்த முதியவர் கெஞ்சினார்.

"எனக்கும் கண் இல்லையே. நானும் ஒரு பிச்சைக்காரனாக இருக்கிறேனே!'' லோசன் பதிலளித்தான்.

"தம்பி! என்னைவிட நீ அதிர்ஷ்டசாலி. உன்னால் நடக்க முடிகிறதே! எனக்குக் கண்ணும் இல்லே, காலும் இல்லே. நான் ஒரு குருடன், நொண்டி!''

தேவதையின் அறிவுரைகள் நினைவுக்கு வராவிட்டாலும், உண்மையிலேயே லோசன் அந்தப் பிச்சைக்காரர் மீது அனுதாபப்பட்டான். தன்னிடமிருந்த ஒரே காசை அவருக்கு அன்போடு கொடுத்தான். முதிய பிச்சைக்காரர் நன்றியோடு அதைப் பெற்றுக்கொண்டார்.

திடீரென லோசனின் கண்களுக்கு முன்னால் ஒரு மின்னல் வெட்டியது. இமைகள் மூடித் திறந்தன. பழைய இருள் குறைந்திருந்தது! சுற்றிலும் உள்ள பொருள்கள் மங்கலாகத் தெரிந்தன.

"ஓ! லிங்கோ! கனவு பலித்துவிட்டது! தேவதை சொன்னது உண்மைதான்! உண்மையேதான்!'' என்று லோசன் கூவினான்.

நடந்து நடந்து அவர்கள் ஒரு புதிய ஊரை அடைந்தனர். ஊர்க் கோடியில் ஒரு பாழடைந்த கோவில் இருந்தது. அங்கு இளைப்பாறினர். கோவிலின் பிராகாரத்தில் லோசனைப் போலவே வேறு பல பிச்சைக்காரர்களும் தங்கி இருந்தனர்.

இரவு ஆயிற்று. அந்தக் கோவிலின் ஒரு மூலையில் பிச்சைக்காரக் கிழவி ஒருத்தி படுத்திருந்தாள். அவளுக்கு நல்ல பசி. அன்று யாருமே அவளுக்கு உணவளிக்க முன்வரவில்லை.

லோசன் தன் கையிலிருந்த இரண்டு ரொட்டித் துண்டுகளில் ஒன்றை லிங்கோவுக்குக் கொடுத்தான். அது தின்றதும் இன்னொரு ரொட்டித் துண்டை லோசன் தின்னப் போனான். அப்போது "ஐயோ! ஒரே பசியாயிருக்குதே! உயிரு போகுதே!'' என்று கிழவி தவிப்பதைக் கேட்டான். உடனே, தான் பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை என்று எண்ணி சந்தோஷமாக அவன் அந்த ரொட்டியை அவளுக்கு அளித்துவிட்டான்.

உடனே இன்னொரு மின்னல் வெட்டியது. லோசன் கண்களை மூடித் திறந்தான். அப்போது அவனால் இன்னும் கொஞ்சம் தெளிவாகப் பார்க்க முடிந்தது.


"இன்றைக்கு நிலா வெளிச்சம் இருக்கிறதா என்ன?'' லோசன் கேட்டான்.


"ஆமாம், ஆமாம்! பௌர்ணமி நிலா பிரகாசிக்கிறது!'' பிச்சைக்காரக் கிழவி பதிலளித்தாள்.

"அப்படித்தான் நானும் நினைத்தேன். எனக்கும் அந்த வெளிச்சம் மங்கலாகத் தெரிகிறது'' என்றான் லோசன். பட்டினியையும் மறந்து அவன் உறங்கத் தொடங்கினான்.

பொழுது விடிந்தது. லோசன், லிங்கோ இருவருக்கும் நல்ல பசி. "வா லிங்கோ, இன்று சீக்கிரமாகவே பிச்சை எடுக்கப் போகலாம். ரொம்பப் பசிக்கிறது'' என்று அவன் நாயைக் கூப்பிட்டான்.

சென்ற இதழில் 'தாத்தாவின் பரிசு' என்ற கதையை எழுதியவர் ரங்கநாயகி நாராயணன்.





புழுதி நிறைந்த ஒரு சாலை வழியாக அவர்கள் இருவரும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். அப்போது உரக்கக் கூவிக் கொண்டே ஒரு கோழி சாலையின் குறுக்கே ஓடியது. லிங்கோ அந்தக் கோழியைத் துரத்திப் பிடித்தது. அதைக் கொன்று, தன் குட்டி எஜமானனிடம் கொண்டு வந்தது.

லோசன் சந்தோஷப்பட்டான். அதிகாலையிலேயே கிடைத்த அதிர்ஷ்டமாக அதைக் கருதினான்.

"அங்காடியில் அந்தக் கோழியை விற்றால், எவ்வளவு பணம் கிடைக்கும்! பல நாட்களுக்குப் பட்டினி இல்லாமல் காலந் தள்ளலாமே!" என்று அவனுடைய சிந்தனை ஓடியது. தன் கிழிந்த சட்டையின் அடியில் அந்தக் கோழியை மறைத்து எடுத்துக் கொண்டான். "என்னை அங்காடிக்கு அழைத்துப் போ!" என்று நாயிடம் சொன்னான்.

இருவரும் அங்காடிக்குச் சென்று காத்திருந்தனர். ஒருவன் நல்ல விலை கொடுத்து லோசனிடமிருந்து அந்த செத்த கோழியை வாங்கினான். லோசன் பணத்தைக் கையில் பெற்றுக் கொண்டதுமே, ஒரு கரிய மேகம் அவனுடைய கண்களை மறைத்தது. அவன் பழையபடி தன் பார்வையை முழுதும் இழந்தான்!

"லோசன்! இன்று நீ ஒரு தவறு செய்திருக்கிறாய். அதனால்தான் மறுபடியும் விழிகளை இழந்துவிட்டாய். அங்காடியில் நீ விற்ற கோழி உன்னுடையதல்லவே? அது திருட்டுச் சொத்தல்லவா?" என்று லோசனின் மனம் பேசியது. தன் தவற்றை உணர்ந்தான்.

கொடிய பசி லோசனை வருத்தினாலும், கோழி விற்ற பணத்தை அவன் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. நாய் கோழியைத் துரத்திய இடத்தை அவன் தேடித் திரிந்தான். எதிரில் வந்த ஆட்களிடம், "யாருடைய கோழியாவது இன்று தொலைந்து போயிற்றா?" என்று கேட்டுக்கொண்டே சென்றான்.

அப்போது ஒருவர், "ஆமாம். ஆமாம். என் அண்ணனின் கோழியைத்தான் காணவில்லை. பாவம் அவர். ஏற்கெனவே ஏழை. தினமும் ஒரு முட்டையிட்டு வந்த அந்தப் பெட்டைக் கோழியையும் இழந்து ரொம்ப வருத்தப்படுகிறார்" என்று அந்த ஆள் பதிலளித்தார்.

"உங்களுடைய அண்ணனுக்காக நான் வருந்துகிறேன். என் நாய்தான் அந்தக் கோழியைக் கொன்றுவிட்டது. அதற்குரிய பணத்தைக் கொடுத்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். இதோ இருக்கிறது பணம். தயவுசெய்து அவரிடம் சேர்த்துவிடுங்கள்" என்று சொல்லி லோசன் காசைக் கொடுத்தான்.

உடனே ஒரு மின்னல் தோன்றியது. லோசனின் கண்கள் திரும்பவும்

ஓரளவு ஒளியைப் பெற்றன. அவன் சந்தோஷத்தில் மூழ்கினான்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு லோசன் முற்றிலும் மாறிவிட்டான். நல்லதையே எண்ணினான்; நல்லதையே செய்தான். தன்னைவிட அதிகமாகக் கஷ்டப்படும் மக்களைக் கண்டு இரங்கினான். இயன்ற உதவியைச் செய்தான்.

நாளடைவில் லோசனால் பகலுக்கும், இரவுக்கும் உள்ள வேறுபாட்டை உணர முடிந்தது.

மழைக் காலம். பலநாட்களாகத் தொடர்ந்து பெய்த மழை அப்போது தான் கொஞ்சம் ஓய்ந்திருந்தது. வானத்தை விட்டுக் கரிய மேகங்கள் இன்னும் அகலவில்லை. தெருக்களில் வெள்ளம் ஓடியது. லோசனும் அவனுடைய நாயும் ஓர் ஊரை அடைந்தனர். ஊருக்கு வெளியில் ஓர் ஆறு. பெருமழையின் காரணமாக அந்த ஆறு கரைபுரண்டு ஓடியது. ஆற்றுவெள்ளத்தின் உயரமும், வேகமும் அதிகரித்துக் கொண்டே போயின. திடீரென ஒரு குரல் கேட்டது.

"நான் ஆற்றில் விழுந்துவிட்டேன். என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று அந்தக் குரல் அலறியது.

லோசனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவனுக்கு இன்னும் முழுப்பார்வையும்வரவில்லை. அப்படி இருக்க, ஆற்றில் முழுகுகிறவனுக்கு அவனால் எப்படி உதவ முடியும்? லோசன் யோசித்தான். உடனே லிங்கோவின் நினைவு வந்தது. "லிங்கோ பலசாலி. புத்திசாலி. அதனால் நீந்த முடியும். ஆற்றில் விழுந்த மனிதனைக் காப்பாற்றவும் முடியும். அப்படிச் செய்யும்போது ஒருவேளை என் அருமை லிங்கோவும் முழுகிப் போய்விட்டால்.....? எனக்கு இந்த உலகில் உள்ள ஒரே துணை லிங்கோ தானே? வேறு யார் இருக்கிறார்கள்? லிங்கோ இல்லாமல் என்னால் எப்படி வாழ முடியும்?" என்று லோசன் ஒரு கணம் சிந்தித்தான்.

"என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று அந்த மனிதனின் அலறல் மறுபடியும் கேட்டது.

"லிங்கோ! அந்த மனிதனைக் காப்பாற்று! ஓடு!" என்று சொல்லி லோசன் அதை ஆற்றில் தள்ளினான். லிங்கோ அவனை நோக்கிப் பாய்ந்தது. அவ்ன் நாயைப் பார்த்து, "வா! வா! என்று கைநீட்டி அழைத்தான்.



இருட்டும் நேரம். நுப்பும் நுரையுமாகச் சுழித்துக் கொண்டு, 'சோ' என்ற இரைச்சலுடன் ஆற்று வெள்ளம்வேகமாகப்பாய்ந்துகொண்டிருந்தது. லிங்கோ எதிர் நீச்சல் போட்டது. அந்த ஆளையும், தன் அருமை நாயையும் காப்பாற்றும்படி லோசன் மனமுருகி இறைவனை வேண்டினான்.

சிறிது நேரத்தில் அந்த மனிதன் தட்டுத் தடுமாறிக் கொண்டு கரை ஏறினான். பொத்தென்று கீழே விழுந்தான். லோசன் அவனிடம் ஓடினான். "ஐயா. நீங்கள் உயிர் பிழைத்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்று கனிவோடு விசாரித்துவிட்டு, "என் அருமை நாய் எங்கே?" என்று கவலையோடு கேட்டான்.

அந்த மனிதன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான். களைப்பினால் பேசுவதற்குக் கஷ்டப்பட்டான்.

"குழந்தாய்! உன்னுடைய நாய் தான்என்னைக்காப்பாற்றியது! கிட்டத் தட்ட கரை வரையில் அது என்னை இழுத்துக் கொண்டு வந்தது. ஆனால், அதற்குள் நாங்கள் இருவருமே ஓய்ந்து விட்டோம். அது ஆற்று வெள்ளத் தோடு போகிறது. விரைவில் முழுகி விடும். என்னால் அதைக் காப்பாற்ற முடியவில்லையே என்றுதான் வருத்தமாக இருக்கிறது" என்று மிகுந்த கஷ்டப்பட்டு அந்த மனிதன் பேசினான்.

லோசனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. "ஓ! லிங்கோ! நீ என்னை விட்டுப் போய்விட்டாயே! எனக்கு உள்ள சொந்தம் நீ ஒருவன்தானே! நீ இல்லாமல் இனி எப்படி வாழப் போகிறேன்!" என்று சொல்லி லோசன் கதறி அழுதான்.

அந்த மனிதன் லோசனை அன்போடு அணைத்துக்கொண்டான். "அழாதே குழந்தே! வீட்டுக்குப் போ! அப்பாவிடம் சொல்லு. அவர் நிச்சயமாக உனக்கு வேறு ஒரு நாய் வாங்கிக் கொடுப்பார்" என்று ஆறுதல் சொன்னான்.

"ஐயா! எனக்கு வீடு இல்லை. இரண்டு கண்களும் இல்லை. எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போதே அப்பா என்னைத் துரத்திவிட்டார். இந்த நாய்தான் எனக்குத் துணை. இன்று அதுவும் போய்விட்டது" என்று சொல்லி லோசன் தொடர்ந்து அழுதான்.

அந்த மனிதன் பதறிப் போய் "குழந்தே! உன் முகத்தைக் காட்டு!" என்று பரபரப்போடு கேட்டான்.

லோசன் தலைநிமிர்ந்து அந்த மனிதனைப் பார்த்தான். ஆம், தன் கண்களால் உண்மையாகவே பார்த்தான். இப்போது லோசனுக்கு நன்றாகக் கண் தெரிந்தது. அவன் கடைசியில் செய்த நல்லசெயல்அவனுக்குக்கண்பார்வையைக் கொடுத்தது. நாயை இழந்தான். ஆனால் பார்வையை அடைந்தான்.

"குழந்தே! நீ லோசன்தானே?" அந்த மனிதன் தயக்கத்தோடு கேட்டான்.

"ஆமாம் ஐயா! என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என்னை மன்னித்து விடு, மகனே! நான்தான் உன் அப்பா. உன்னைக் கொடுமைப்படுத்தி வீட்டை விட்டுத் துரத்திய அப்பா: வா, மகனே! வீட்டுக்குப் போகலாம். நான் திருந்திவிட்டேன். உன்னிடம் இனிமேல் அன்பாக இருப்பேன். உனக்கு வேறு ஒரு நாய் வாங்கித் தருவேன்."

ஒருகணம் லோசனுக்குக் கோபம் பொங்கியது. "நான் பட்ட கஷ்டத்திற்கெல்லாம் காரணமான அப்பா இவர்தானா? ச்சே!" என்று நினைத்தான். ஆனால், மறுகணமே அவனுடைய மனம் இளகியது.

"அப்பா! நான் உங்களை மன்னித்து விட்டேன். சந்தோஷமாக வீட்டுக்கு வருகிறேன். ஆனால், நான் கண் இல்லாமல் இல்லை. பார்வை பெற்று விட்டேன்" என்றான்.

அப்பா திருந்தியதில் லோசனுக்குச் சந்தோஷம். லோசன் கண்ணொளி பெற்றுத் திரும்பி வந்ததில் அப்பாவுக்குச் சந்தோஷம்.

லோசன் மனதார அந்தக் கனவு தேவதைக்கு நன்றி செலுத்தினான். அப்பா அவனுக்கு ஒரு புதிய நாய்க் குட்டி வாங்கிக் கொடுத்தார். அருமை லிங்கோவின் நினைவாக அதற்கு 'இளைய லிங்கோ' என்று பெயரிட்டு அழைத்தான்.

பிருந்தாவனக் கதையரங்கம்

ஒன்று + ஒன்று = இரண்டு தான்!



—நாகிராஜ்குமார் (7002)—

சதீஷ்,

—நல்ல கற்பனை மனம் படைத்தவன்.

— எந்த ஒரு பொருளைக் கண்டா'லும் அதை வர்ணிக்கத் தோன்றும் மனம் படைத்தவன்.

பிறர் பார்க்காத கண்ணோட்டத்தில் ஒரு பொருளைப் பார்த்து அதனை வர்ணிப்பான் அவன். சாலையில் எருமை மாடுகள் செல்லும் —

'இவ்வளவு பெரிய உடலை இறைவன் எங்களுக்குக் கொடுத்து விட்டானே, நடக்க முடியாதபடி இது எங்களைத் துன்புறுத்துகிறதே!' என்று இறைஞ்சுவதைப் போல இருக்கிறது அவற்றின் பார்வை'' 'என்று கூறுவான்.

வாத்துக்கள் தங்களின் குட்டையான வால் பக்கத்தை ஆட்டி ஆட்டி நடந்து வருவதைப் பார்ப்பான். உடனே,

''எங்களை விரட்டிப் பிடிக்காதீர்கள். எங்களிடம் ஒன்றும் இல்லை' என்று அவை தங்களின் குட்டையான வால்புறத்தை வேகமாக ஆட்டி ஆட்டி மறுக்கின்றன' என்பான்.

ஆனால், இவன் இவ்வாறு கூறியவுடன் இவனோடு விளையாடும் நண்பர்கள், இவனைப் பார்த்துக் கேலி பேசுவார்கள்.

'இவருக்கு என்ன பெரிய கம்பரென்று நினைப்போ!' என்பான் ஒருவன்.

'டேய் இவருக்கு காளிதாஸருக்குப் பக்கத்து வீடு; கம்பருக்கு எதிர் வீடுடா....' என்று கிண்டல் செய்வான் மற்றொருவன். உடனே எல்லோரும், 'ஹா' 'ஹா' என்று எக்காளமிட்டவாறு சிரிப்பார்கள். இவர்கள், மட்டம் தட்டும் பேச்சைக் கேட்டதும் சதீஷ் மனமுடைந்து போவான், சஞ்சலப்படுவான்.

அதற்குள், ''சரி வாங்கடா! மலையடிவாரத்துக்குப் போய்க் கிரிக்கெட் விளையாடுவோம்'' என்று எவனாவது பேச்சை மாற்றுவான். இவனும் அவர்களோடு சேர்ந்து கொள்வான்.

சதீஷ் தனது தந்தையை மாலையிடப்பட்ட புகைப்படத்தில்தான் பார்த்திருக்கிறான். அதனால் அவன் குடும்பம் — அவனும் அவனுடைய அம்மாவும் ஏழைகளாகவே இருந்தனர். அவனுடைய தாய் ஓர் அஞ்சல் நிலையத்தில் பியூனாக வேலை செய்து அவனையும் படிக்க வைத்து வந்தாள். அதனால் அவளுக்கெல்லாம் இவனது 'கற்பனை இராஜ்'ஜியத்திற்கு வர நேரம் இல்லை.

சதீஷ் நண்பர்களுடன் விளையாடும் போதுகூட — பந்து எறிபவனை மட்டை பிடிப்பவன் பந்தை லாவகமாகத் திசை திருப்புவதை, பந்து ஸ்டம்ப் மீது பட்டு

அது தெறிக்கும் அழகை, மயங்கிப் பூத்து வந்து கொண்டு இருக்கும் பந்தை 'காட்ச்' செய்ய அதை எதிர்நோக்கி இருப்பவனுடைய ஆவல் மிக்க கரங்களை — என்று எதைப் பார்த்தாலும் அவனது கற்பனை மனம் அதிர்கின்ற கோயில் மணியைப் போல் துடிதுடிக்கும். ஆனால்தனது நண்பர்கள் தன்னைக் கேலி செய்கின்றார்களே என்று எண்ணிப்பேசாமல்இருந்துவிடுவான், எதிரிக்கு அஞ்சி அடங்கும் மான்குட்டியைப் போல.

நாட்கள் தேனியின் படபடக்கும் இறக்கையின் வேகத்தைப் போல் (விநாடிக்கு 350 முறை என்பார்கள்) வேகமான உருண்டன.

ஒரு வாரத்திற்கு முன்தான் அவர்களோடு விளையாடுவதன் மூலம் அறிமுகமானான் — கிரன். இன்றும் அவர்களுடன் விளையாடினான். விளையாடிய பின்பு சதீஷிடம் வந்தான் கிரன். மற்றவர்கள் சென்றுவிட்டார்கள்.

''சதீஷ்! ஒரு பொருளைப் பார்த்தவுடனே அதைவர்ணிக்கத்துடிக்கிறாய். ஆனால் உனது, நமது நண்பர்கள் உன்னைக் கேலி செய்து உன்னை மட்டம் தட்டுகிறார்கள். இதை நான் வந்த நாளில் இருந்தே கவனிக்கிறேன். நீ ஒண்ணு செய்யலாமே?''

''என்ன?''

''உன்னுடைய கற்பனை வளங்களை ஒன்று திரட்டு. அதை எல்லாம் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பு! அவர்கள் உன் திறமையை நிச்சயம் வளர்ப்பார்கள்'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான்.

சதீஷ் சோகமாக, ''கிரன், அதுக்குக் கூட என்னிடம் வசதி இல்லையே!'' என்று ஆரம்பித்துத் தனது நிலையைக் கூறினான். மேலும், ''அது மட்டுமில்லாமல் சும்மா, கற்பனையை மட்டும் எழுதினா நல்லா இருக்காது. அதை ஒரு கதையில் புகுத்தி அனுப்பினால் இன்னும் நல்லா இருக்கும்'' என்று யோசனையும் தெரிவித்தான்.

''சரி சதீஷ்! செலவுக்கு நான் என்னுடைய சேமிப்பில் இருந்து எடுத்துத் தருகிறேன்'' என்று கூறிய கிரன், தான் பலமுறை கதைகள் எழுதி இருந்தாலும், அவற்றைப் பத்திரிகைகளுக்கு அனுப்பியதில்லை என்றும் இப்போது தான் அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும் கூறினான். அவனது வீட்டில் அவனுடைய பாட்டியுடன் அவன் இருக்கிறான் என்றும், சதீஷ் எப்போது வேண்டுமானாலும் தன் வீட்டிற்கு வரலாம் என்றும் கூறினான்.

இதையெல்லாம் கேட்ட சதீஷ் குதூகலமடைந்தான்.

''ரொம்ப நன்றி கிரன்! இனிமேல் நாம் இரண்டு பேரும் சேர்ந்து நல்ல படைப்புக்களைப் படைப்போம். இந்தச் சமூகத்திலே.... எனது நண்பர்களைப் போல, ஒரு சிலராவது திருந்துவாங்கன்னு நம்பிக்கை வைப்போம்'' என்று கூறினான் வீராவேசத்துடன்.

* * *

பாருங்கள் இத்தனை நாளும் எதுவும் பேசாதிருந்தவன், அவனை ஊக்குவிப்பதற்கும் உடன் உழைப்பதற்கும் ஒருவன் வந்தவுடன் எப்படித்



பள்ளி நடைபெறும் நாட்கள்

ஜப்பானில்	240 நாட்கள்
இந்தியாவில்	200 ,,

கல்வி கற்றோர் தொகை
(5 வயதுக்கு மேற்பட்டோர்)

ஜப்பானில்	100க்கு 99 பேர்.
இந்தியாவில்	100க்கு 36 பேர்.

துடிதுடிப்பாய் இயங்குகிறான்! காற்றுள்ள பந்தை எவ்வளவு நேரம் தான் தண்ணீருக்குள் அழுத்திப் பிடிக்க முடியும்! எப்படியேனும் அது மேலே வந்துதானே தீரும்?

* * *

சதீஷ் கீரன் இருவரும் சேர்ந்து விவாதித்தனர். கருப் பொருள் பற்றிப் பேசினார்கள். சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்தனர்.

"சதீஷ்! நான் கதையை வரி வரியா சொல்றேன்! நீ தகுந்தாற்போல, உன் கற்பனையை ஏற்றிச் சொல்! எழுதலாம்."

"சரி சொல்லு!"

ஆரம்பித்துவிட்டார்கள்.

சதீஷ் — கீரன் சேர்ந்தே துடிக்கும் கண் இமைகள் போல், சேர்ந்தே படபடக்கும் பறவைகளின் இறக்கைகளைப் போல் — இருவரும் சேர்ந்து உழைத்தனர். சதீஷின் ஆரம்பத்தையும் கீரனின் முடிவையும் இணைத்து 'சன்' என்ற புனை பெயரில் பல்வேறு கதைகள் புனைந்தார்கள்.

இதோ இப்போது ஒரு பிரபல நிறுவனம் நடத்திய கதைப் போட்டியில் முதல் பரிசை வென்றுள்ளார்கள். நாளைக் காலை அமைச்சர் ஒருவரின் கைகளால் ரூபாய் ஆயிரத்தைப் பெறப் போகிறார்கள். இருவரும் பெருமிதம் கொள்வதில் தவறென்ன?

'சன்' னுடைய நண்பர்கள் சதீஷைக் கேலி செய்த குற்றத்தை உணர்ந்தார்கள். இரு கைகள் சேர்ந்தால் ஓசை உண்டாவது எப்படி உண்மையோ, ஒன்றும் ஒன்றும் இரண்டுதான் என்பது எவ்வளவு உறுதியோ அவ்வளவு உறுதியானது உழைப்பும் ஊக்கமும் இணையும்போது உயர்வு ஏற்படும் என்ற உண்மை!



னக்கு வரும்போது...? —எம். நிர்மலா (520)—

கோடை வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. தெருவில் ஈ காக்காய் இல்லை. அன்று காலையிலிருந்தே பொழுதே போகவில்லை சங்கருக்கு. எவ்வளவு நேரம் தெருவையே பார்த்துக் கொண்டிருப்பது?

அந்த வருடம் சங்கர் எட்டாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்புக்குப் போய் இருந்தான்.

"சங்கர்" உள்ளேயிருந்து அம்மா கூப்பிடுவதைக் கேட்டு உள்ளே எழுந்து சென்றான்.

"என்னம்மா?" என்றபடி சமையல் அறைக்குள் நுழைந்தான்.


"இந்தத் தாளில் எழுதி இருக்கிற சாமான்களையெல்லாம் சீக்கிரமா வாங்கிட்டு வாப்பா" என்றவாறு சாமான் லிஸ்டையும் பணத்தையும் அவனிடம் கொடுத்துவிட்டு அம்மா தன் வேலையைக் கவனிக்கப் போய் விட்டாள்.

பையையும், பணத்தையும் எடுத்துக் கொண்டு கடையை நோக்கி நடையைக் கட்டினான். அவனுக்கு எப்போது ஏழு மணியாகப் போகிறது என்றிருந்தது. விஷயம் வேறொன்றுமில்லை. அன்று இரவு ஏழு மணிக்கு, ரேடியோவில் அவனுக்கு மிகவும் பிடித்த திரைப்படத்திலிருந்து பாடல்கள் ஒலிபரப்பப்பட இருந்தன. இதைப் பற்றி நினைத்துக் கொண்டே சாமான்களை வாங்கி வந்தான்.

மணி ஏழு அடித்ததுதான் தாமதம், சங்கர் வீட்டு ரேடியோ உச்சஸ்தாயியில் அலற ஆரம்பித்தது.

"சங்கர், சத்தத்தைக் கொஞ்சம் குறைத்து வை. மற்றவர்களுக்கு நம்மால் தொல்லை இருக்கக் கூடாதில்லையா?" என்றான் அம்மா.

சங்கர், காதில் போட்டுக் கொண்டால்தானே?



ஒரு பாட்டு முடிந்தது.

"சங்கர் தம்பி" குரல் கேட்டுத் திரும்பினான். பக்கத்து வீட்டுத் தாத்தா வந்திருந்தார்.

"தம்பி; கொஞ்சம் சத்தத்தைக் குறைச்சு வச்சுக் கேளுப்பா. தலைவலி பொறுக்க முடியவில்லையப்பா."

"எங்க வீட்டில் நான் ரேடியோ கேட்கிறேன். உங்களுக்குப் பிடிக்கலேன்னா நீங்கள் காதை மூடிக் கோங்கோ" முகத்தில் அறைந்தாற் போல் பதில் வந்தது சங்கரிடமிருந்து.


பெரியவர் மேற்கொண்டு எதுவும் பேசாமல் போய்விட்டார்.

இவர்கள் பேசிக்கொண்டிருந்ததையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சங்கரின் அம்மா அவனுக்காகப் பெரியவரிடம் மன்னிப்புக் கேட்டாள். தன் மகனுக்கு எவ்வளவோ முறை சொல்லியும் அவன் போக்கு மாறாததைக் கண்டு வருந்தினாள். சங்கர் எதையும் லட்சியம் செய்யவில்லை.

மீண்டும் பள்ளி திறந்தது. நாட்கள் நகர்ந்தன. காலாண்டுத் தேர்வு நெருங்கியது. சங்கர் தேர்விலே நல்ல மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் கவனமாகப் படிக்க ஆரம்பித்தான்.

இச்சமயத்தில்தான் அவர்கள் பக்கத்து வீட்டுக்குப் புதிதாகச் சிலர் குடி வந்தார்கள்.

தேர்வுக்கு இன்னும் நான்கு நாட்களே இருந்தன. மாலை ஆறு மணி இருக்கும். சங்கர் படிக்க ஆரம்பித்து சிறிது நேரம்கூட ஆகியிருக்காது. பக்கத்து வீட்டிலிருந்து ரேடியோ அலறியது. சங்கர், படிக்க இயலாமல் தவித்தான். சட்டென்று நினைத்துப் பார்த்தான். 'பக்கத்து வீட்டில் தாத்தா இருந்தபோது, நாம் அவருக்கு எவ்வளவு தொல்லை கொடுத்திருக்கிறோம்' அவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்' — அவன் உள்ளம் அவன் முன்பு செய்தது தவறு என்று உறுத்தியது. மிகவும் மனம் வருந்தினான். நேராக அடுத்த வீட்டிற்குச் சென்றான். அவர்களிடம் சிறிது ஒலியைக் குறைக்கும்படி வேண்டிக் கொண்டான். அவர்கள் உடனே ரேடியோவை நிறுத்தி விட்டு, "நீ போய்ப் படிப்பா. நம்மால் பிறருக்கு நல்லது செய்ய முடியாவிட்டாலும் தொல்லை தரக்கூடாது" என்றனர். அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு, இனி ஒரு போதும் பிறருக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தான்.



அளகேசனைத் தெரியுமா உங்களுக்கு? தெரியாவிட்டால் பரவாயில்லை. இப்பொழுது தெரிந்து கொள்ளுங்கள். அவன் பத்தாம் வகுப்பு படிக்கும் நல்ல மாணவன்.

அவனிடம் ஒரு பூதம். ஆமாம், பூதமேதான் இருந்தது. பயப்படவேண்டாம். அந்த பூதம், பாவம், ரொம்பவும் சாது. அலாவுதீன் பூதம் போல விசித்திரச்செயல்களைச் செய்யத்தெரியாவிட்டாலும், அளகேசனுக்கு மிக உதவியாக இருந்தது. பூதம்தானே என்று அலட்சியப்படுத்த வேண்டாம். அது படித்த பூதம். ஆமாம், அதற்குதிருக்குறள், பாரதியார்பாட்டு, கம்ப ராமாயணம் எல்லாம் தெரியும். பார்க்காமலே சொல்லத் தெரியும்.

அளகேசனின் தம்பி அழகுவேல் ஏழாவது படிக்கிறான். அவனுடைய நண்பன் சிவகுமார். சிவகுமாரின் தங்கை காயத்ரி.

ஞாயிற்றுக்கிழமை.

அளகேசனின் அம்மாவும் அப்பாவும் ஒரு திருமணத்திற்குப் போய் விட்டார்கள். அளகேசனும் அழகுவேலும் மட்டுமே வீட்டில் இருந்தார்கள்.

"அழகு.அழகு" வாசற்கதவுதட்டப்படும் ஓசை கேட்டு அழகுவேல் வாசற்கதவைத் திறந்தான். அங்கு சிவகுமாரும், காயத்ரியும் நின்று கொண்டிருந்தார்கள்.

"வாடா குமார்... வா... காயத்ரி... என்ன விஷயம்?"

"சும்மாதான் வந்தோம். வீட்டுல போரடிச்சுது... உங்க அம்மா அப்பா இல்லே?"

"இல்லேடா... வா நாம ஜாலியா விளையாடலாம்..." என்றான் அழகு.

"டேய்... உங்க அண்ணு அளகேசன் இருக்கானு? இருந்தா அவனோட பூதத்தோட பேசிக்கிட்டு இருக்கலாம்" என்று யோசனை தெரிவித்தாள் காயத்ரி.

மாடி அறையில் உட்கார்ந்துகொண்டிருந்த அளகேசன் யதேச்சையாக இறங்கி வந்தான்.

"அட குமார்... காயத்ரி... வாங்க.." என்றான்...

"அண்ணு! உன்னோட பூதத்தோட விளையாடலாமா?" என்றான் அழகுவேல்.

"விளையாட முடியாது... என்னோட 'அபூ'விற்கு விளையாட்டு பிடிக்காது. ஏதாவது பேசிக்கிட்டிருக்கலாம். இல்லாட்டி கதை கேட்கலாம்" என்றான் அளகேசன்.

'அபூ' என்பது பூதத்தின் பெயர். 'அளகேசனின் பூதம்' 'அற்புத பூதம்' 'அறிவாளி பூதம்' இவற்றின் சுருக்கமே 'அபூ'.

"அபூ" என்று மாடியை நோக்கிக் கூப்பிட்டான் அளகேசன். "இதோ

வந்திட்டேன்'' என்று குரல் கேட்டது. பிறகு மாடிப்படியில் அபூ இறங்கி வந்தது.

அபூவைப் பற்றிப் பயங்கரமாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டாம். அது நம்மைப் போல சாதாரணமாகத் தான் இருக்கும். கொஞ்சம் பெரிய உருவம். உற்றுப் பார்த்தால், தலையில் சிறிய கொம்பு தெரியும். மிகச் சிறிய தாக கோரைப் பல். கொசுறாக வால். ஆனால், அபூவின் வால் அவ்வளவு சீக்கிரத்தில் வெளியே தெரியாது.

அபூ எங்கே போகுமோ எங்கே இருக்குமோ தெரியாது. அளகேசன் கூப்பிட்டால் வந்துவிடும். மாடியிலிருந்து இறங்கி வரும். அவ்வளவு தான் தெரியும் அளகேசனுக்கு.

''அட... குமார்... காயத்ரியா... சௌக்கியமா?'' என்று கேட்டபடியே வந்து சோபாவில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு ஸ்டைலாக உட்கார்ந்தது பூதம்.

''என்ன எல்லோரும் நல்லாப் படிக்கிறீங்களா?'' என்று பொதுவில் கேட்டது அபூ.

''ஓ!'' என்றனர் எல்லோரும் கோரஸாக.

''சரி..! நான் ஆங்கிலப் புத்தாண்டிற்கே உங்களுக்கு ஏதாவது பரிசு கொடுக்கணும்னு நினைச்சேன். ஆனால் முடியலே... அதனாலே தமிழ்ப் புத்தாண்டிற்குப் பரிசு தரப் போகிறேன்...''

நாலு பேருக்கும் ஏககுஷி. ''எல்லோருக்குமா?'' — அழகு.

''இல்லே, இல்லே. ஒரே ஒருவருக்குத்தான் பரிசு. அதுக்கு ஒரு போட்டி''

''சரி, என்ன போட்டி?'' — காயத்ரி.

''வள்ளுவர் நாலு தீய குணங்களை ஒரு குறளில் சொல்லி இருக்கார். அந்த நாலு குணங்களிலே ஒரு குணம் கூட இல்லாதவங்களுக்குத்தான் பரிசு.''

''அது என்ன?'' — அளகேசன்.

''நான் சொல்லமாட்டேன். நீங்கள் திருக்குறளை எடுத்துப் பார்க்கவும் கூடாது... ஆனால்?''

''என்ன ஆனால்...?'' — குமார்.

''ஆனால், அந்தத் தீய பழக்கம் உங்ககிட்டே இருந்தாலும், இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். இருக்கா இல்லையான்னு நீங்களே கண்டுபிடித்து அதை விடணும்''

''அப்படி விடலேன்னு வெச்சுடுவோம். அப்பு...?'' என்று பாதியில் எதிர்க் கேள்வி போட்டான் அழகு.

''அவ்வளவுதான். பரிசு கிடையாது'' என்று இரக்கமேயில்லாமல் சொல்லியது அபூ.

''ரொம்ப மோசம் அபூ... என்ன தீய குணம்னு சொல்லு. அதை விட்டுடறோம்... பரிசு கொடு.. இல்லாட்டி திருக்குறளை படிக்கறதுக்கு அனுமதி கொடு'' கெஞ்சினாள் காயத்ரி.

''ம்கூம்... அப்புறம் த்ரில் இருக்காது. நல்லா யோசித்துப் பாருங்கள்...'' என்றது அபூ.

''ப்ளீஸ்... அபூ... சொல்லிட்டுப் போ'' என்றான் அளகேசன்.

''ம்கூம். நான் அடுத்த வாரம் வாரேன்'' என்று சொல்லிவிட்டு மறைந்தது அபூ

''சே... இந்த அபூ சுத்த மோசம்...'' என்றாள் காயத்ரி.

''அப்படிச் சொல்லாதே காயத்ரி என்னோட அபூவை'' என்றான் அளகேசன். அளகேசனுக்கு அபூ மேல் அவ்வளவு பிரியம்.

''நான் கண்டுபிடிச்சிட்டேன்...'' என்று கூவினான் சிவகுமார்.

''டேய்... சொல்லுடா.,.. சொல்லுடா'' என்று எல்லோரும் கூவினர்.

''அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல்'' — சிவகுமார்.


''அழுக்காறு அப்படின்னா பொறாமை, அவா அப்படின்னா ஆசை'' என்று ஆரம்பித்தாள் காயத்ரி. அவளை இடைமறித்து, ''வெகுளின்னா கோபம், இன்னாச் சொல்னா கடுஞ்சொல்'' என்றான் அழகுவேல்.

''நம்ம யார்கிட்டேயும் இந்த நாலு கெட்ட பழக்கமும் இல்லையே'' என்றான் அளகேசன்.

''அபூதான் சொல்லிடுத்தே.. நம்ம கிட்ட அந்தப் பழக்கம் இல்லாமலேயும் இருக்கலாம்னு'' — சிவகுமார்.

''ம்கூம்... அபூ நம்மைக் குழப்பறதுக்காக அப்படிச் சொல்லியிருக்கு. அபூவிற்கு நம்மேல் அன்பு ஜாஸ்தி. நம்ம நாலுபேர்கிட்டேயும் ஏதோ ஒரு கெட்ட குணம் இருக்கு. அதைப் போக்கறதுக்குத்தான் இந்தப் போட்டி. வெறும் திருக்குறளைக் கண்டுபிடிக்கறதுக்காக அப்படிச் சொல்லியிருக்காது.''

''அப்ப என்ன பண்றது?'' — சிவகுமார்.,



''யோசனை செய்வோம். அடுத்த வாரம் அப்பூ வர்றதுக்குள்ள கண்டு பிடிச்சுடுவோம்'' — அழகுவேல்.

''சரி... சரி... எனக்கு தூக்கம் வர்றது...'' என்றான் அளகேசன்.

''பகலிலே என்ன தூக்கம்?'' சிவகுமார் கேட்டான்.

''எங்கண்ணு சரியான தூங்கு மூஞ்சி'' என்றான் அழகுவேல்.,

காயத்ரியும் சிவகுமாரும் விடை பெற்றுக் கொண்டு வீட்டிற்குச் சென்றனர். காயத்ரி யோசனை செய்து கொண்டே இருந்தாள்.

''டேய்... குமார்... நீயும் யோசனை செய்...'' — காயத்ரி.

''போடி. இன்னும் ஒரு வாரம் டயம் இருக்கே. இப்ப என்ன அவசரம்?'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான் சிவகுமார்.

மறுநாள்...

பள்ளியில்...

''டேய் அழகு... என்னடா கண்டு பிடித்தாயா? அப்பூ சொன்னதை'' — அழகுவேலைப் பார்த்ததும் கேட்டான் சிவகுமார்.

''ம்கூம்... வேற வேலையில்லை... எப்படியும் நீங்க மூணு பேரும் கண்டு பிடிச்சுடுவீங்க... நான் எதற்குச் சிரமப் படணும்?'' என்றான் அழகுவேல்.

''சே... சரியான சோம்பேறி...'' — சிவகுமார்.

மூன்று நாட்கள் ஓடிவிட்டன. நான்கு பேரில் யாரும் கண்டுபிடிக்க வில்லை. சிவகுமார் வீடு. காயத்ரி எதையோ தேடிக் கொண்டிருந்தாள்.

''அம்மா... என்னோட அறிவியல் புத்தகத்தை எங்கே வச்சேன்னு தெரியலே...'' — என்று அறிவியல் புத்தகத்தைத் தேடிக் கொண்டிருந்தாள்.

''ம்... இந்த சின்ன வயசுல இப்படி... சரி... நான் நேத்து மாமாவுக்குப் போடச் சொல்லி ஒரு லெட்டர் கொடுத்தேனே... போஸ்ட் செய்தாயா?'' என்று கேட்டவாறு வந்தாள் அம்மா...

''அந்த லெட்டரை அறிவியல் புத்தகத்துல வெச்சேன்... அதைத்தான் இப்ப தேடிக்கிட்டு இருக்கேன்'' என்றாள் காயத்ரி.

''சரியாப் போச்சு... இந்த வயசுல இவ்வளவு மறதியா?.. சிவகுமார் கிட்டே ஒரு வேலையைச் சொன்னு ரொம்ப தாமதமா செய்வான். நீ மறந்துடுவே... ம்... எப்ப மாறப் போறீங்களோ?'' என்றவாறு ்ள்ளே போனாள் அம்மா

'சே... மறதி எவ்வளவு கெட்ட குணம்...?' என்று நினைத்தவாறே அறிவியல் புத்தகத்தைத் தேடினாள். அறிவியல் புத்தகம் கிடைத்தது. 'சட்'டென பொறி தட்டியது. அட, மறதி ஒரு கெட்ட குணம். 'அபூ' அதை மனத்தில்வைத்துக்கொண்டுதான் சொல்லியிருக்கும். 'அட.... இந்த சிவகுமார் எல்லா விஷயத்தையும் தாமதமாகச் செய்கிறான். காலம் நீடித்தல் ஒரு தீய குணம்.'

''டேய் குமார்... அழகுவேலைப் பார்த்தியா...?'' என்றாள் காயத்ரி.

''எதுக்குக் கேட்கறே?' அபூ' சொன்னதைப் பத்திதானே. அவன் சரியான சோம்பேறி. நாம கண்டு பிடிச்சுடுவோம்னு அவன் பேசாமல் இருக்கான்.''

''அப்படியா?'' என்று சொல்லி விட்டு மனத்திற்குள் சோம்பலும் ஒரு கெட்ட குணம்தானே...அப்ப அளகேசனுடைய கெட்ட குணம் தெரியணும்' என்று நினைத்துக் கொண்டாள்.

''டேய் குமார்... நான் மூணு கண்டு பிடிச்சிட்டேன்'' — என்றாள் காயத்ரி.

''அப்படியா, சொல்லு...'' என்று அடக்க முடியாத ஆவலுடன் கேட்டான் சிவகுமார். காயத்ரி சொன்னாள்.

''இப்ப நாம கண்டுபிடிக்க வேண்டியது அளகேசனோட கெட்ட குணத்தைத்தான்.''

''நாளைக்குப்போகலாம்'' என்றான் சிவகுமார்.

''பார்த்தாயா? எது சொன்னாலும் தாமதமா... நாளைக்கு... நாளைக்குன்னு சொல்றியே... இந்தப் பழக்கத்தை விட்டுடு.''

இருவரும் அளகேசன் வீட்டிற்குப் போனார்கள். ''வாங்க... கண்டு பிடித்தாயிற்றா?'' என்று வரவேற்றான் அளகேசன்.

''ம்... நீ'' — காயத்ரி.

''ஓ... கண்டுபிடிச்சாச்சு... நான் அளவுக்கு மேல தூங்கறேன்... இரவு 9 மணிக்கு படுத்து காலையில் ஏழு மணிக்கு எழுந்துக்கறேன்... அதைத் தவிர விடுமுறை நாட்களில் பகல் பொழுதும் தூங்கறேன்..''

''ஆமாம்... அதுவும் கெட்ட பழக்கம்தான்'' — காயத்ரி.

''சரி...நீங்க மாடிக்கு என் அறைக்கு வாங்க.

''அழகு... அழகு... மாடிக்கு வா...'' என்று உள்நோக்கிக் குரல் கொடுத்து விட்டு மாடிக்கு வந்தான் அளகேசன்.

''அபூ...'' என்று கூப்பிட்டான்.

''என்ன விஷயம்?'' என்றவாறே வந்தது அபூ. அதற்குள் கீழிருந்து அழகுவேலும் வந்தான்.

''நாங்க கண்டுபிடிச்சிட்டோம்'' என்றனர் மூவரும்.

''என்ன குறள்னு தெரியாது. ஆனா என்ன தீய குணங்கள்னு தெரியும்'' — காயத்ரி.

''சொல்லுங்க'' — அபூ.

''என்கிட்ட மறதி. சிவகுமார்கிட்ட காலம் நீட்டித்தல்'' — காயத்ரி.

''என்கிட்டே அளவுக்கு மீறிய தூக்கம்'' — அளகேசன்.

''நீங்க இவ்வளவு சுறுசுறுப்பா பேசப் பேச, சும்மாவே இருக்கிற அழகுவேல் சோம்பேறிங்கிறது சொல்லாமலே தெரியும்'' — அபூ.

''சரி... அபூ... பரிசு கொடு'' என்றாள் காயத்ரி.

என்ன கட்டிங்?

தந்தை: சலூனுக்குப் போய்விட்டு ஏண்டா உடனே திரும்பிட்டே?

மகன்: பதினைஞ்சு ரூபாய் கொடுத்தாத்தான் எனக்கு முடி வெட்டிவிடுவாங்களாம்.

தந்தை: நீ என்ன கட்டிங் செய்யச் சொன்னாய்?

மகன்: ஹெல்மெட் கட்டிங்

— எச். விஸ்வநாதன்



"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன்" — இது தான் திருக்குறள். பொருள் தெரியுமா? காலம் நீடித்தல், மறதி கொள்ளல், சோம்பல் கொள்ளல், அளவுக்கு மீறிய தூக்கம் ஆகிய நான்கு குணங்களும் அழியும் மக்கள் விரும்பும் கப்பல், முதல்லே கண்டுபிடிச்சது காயத்ரி. கண்டுபிடிச்சதுக்கு பரிசு கிடையாது. அந்த குணத்தை விட்டுடணும், அப்பத்தான் பரிசு."

"என்ன அப்பூ.. அப்படின்னா இப்ப பரிசு கிடையாதா?" — சிவகுமார்.

"இந்தத் தமிழ்ப் புத்தாண்டு முதல் அந்த குணங்களை விட்டுடறோம்னு உறுதிமொழி எல்லோரும் எடுத்துக்குங்க... நான் உங்க மேல நம்பிக்கை வெச்சு பேனா தரப் போறேன். இதோ ஆளுக்கு ஒரு பேனா."

"ரொம்ப நல்ல அப்பூ" — என்றனர் அனைவரும்.

"இந்தப் பேனாக்களை உபயோகித்து இந்த வருடத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் வாங்கணும். காயத்ரிக்கு ஒரு விசேஷப் பரிசு..."

"என்ன?" அனைவரும் ஆவலுடன் கேட்க, அப்பூ ஒரு மணி மாலையை எடுத்து காயத்ரியிடம் கொடுத்தது.

"நீ என்ன தீய குணங்கள்னு கண்டு பிடிச்சதுக்கு இது பரிசு" — அப்பூ.

"ரொம்ப தேங்க்ஸ் அப்பூ" என்றாள் காயத்ரி.

"உங்க அனைவருக்கும் என்னுடைய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்" என்று சொல்லி மறைந்தது அப்பூ.



ஒரு மரத்தின் மதிப்பு

நமது பள்ளி வகுப்புகளில் ஆசிரியர் கேள்வி கேட்கும்போது பதில் தெரியாமல் நிற்கும் மாணவர்களைப் பார்த்து,

'ஏண்டா மரம்மாதிரிநிற்கிறாய்' என்றும் 'உனக்கு மண்டையில் ஒன்றுமேயில்லையா, மரமண்டையா' என்றும் சொல்வதை நாமெல்லாரும் கேட்டிருப்போம்.

ஓர் இந்திய விஞ்ஞானி மரத்தின் மதிப்பைக் கணக்கிட்டிருப்பதைப் பார்த்தால் ஆசிரியர்கள் இனி மரத்தைப் பற்றி அவ்வளவு எளிதாகப் பேசமாட்டார்கள் என நினைக்கிறேன்.

அவர் கூறுகிறார்:

"ஒரு மரம் வெளியிடும் பிராண வாயுவின் மதிப்பு, அம்மரத்தால் கிடைக்கும் மழையின் மதிப்பு, காற்றில் உள்ள அசுத்தத்தை அது சுத்தி செய்வதன் மதிப்பு, மண் அரிப்பு, அதனால் தடுக்கப்படும் விளைவின் மதிப்பு, பறவைகள், விலங்குகளுக்கு அது தரும் பாதுகாப்பின் மதிப்பு, உணவு வகைகளின் மதிப்பு, என்று கணக்கிட்டால் ஒரு மரத்தின் மதிப்பு ஏறக்குறைய ஒன்றே முக்கால் லட்சம் ரூபாய் ஆகிறது."

எனவே இவ்வளவு மதிப்பு மிகுந்த மரங்களை நடுவோம்; மரங்களை வளர்ப்போம்; மரங்களைப் பாதுகாப்போம்.

— கே. கார்த்திகேய பாண்டியன் (538)
உசிலம்பட்டி.

மதிப்பும் மரியாதையும்



ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

மரியாதை என்ற சொல் தற்சமயம் எங்கும் வழங்கி வருகிறது. அதை ஏதோ ஒரு வகையில் அரைகுறையாகப் புரிந்து கொண்டிருக்கிறோம். அதை இக்கட்டுரையில் புரிந்து கொள்வோம்.

ஒரு ரூபாய் நாணயத்திற்கு மதிப்பு என்ன? அதன் மதிப்புத்தான் அதனுடைய மரியாதை. அதுபோல ஒரு மனிதனுக்குள்ள மரியாதை அவனுக்கு இருக்கும் மதிப்பிற்குத் தக்கபடி அமையும். வயதிற்கு என்று மரியாதை இருக்கிறது. அனுபவத்திற்கு என்று தனி மரியாதை இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கம் என்பதற்கு மரியாதை இருக்கிறது.

மரியாதை பெற வேண்டுமானால் நாம்பிறருக்குமரியாதைசெய்யவேண்டும். மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு என்று பழமொழி இருக்கிறது.

மரியாதை கொடுக்க வேண்டும் என்பது அனுபவத்தில் வர வேண்டும். நம்மைச் சுற்றி இருப்பவர்கள் யார் யாரிடம் எவ்வாறு மரியாதையுடன் நடந்து கொள்கிறார்கள் என்பதை நாம் உற்றுப் பார்த்துப் பழகிக் கொள்ள வேண்டும். தங்கள் கடமைகளை ஒழுக்கமுடன் செய்பவர்கள் எல்லோரும் மரியாதையுடன் நடத்துவார்கள்.

நமக்கு ஒரு விஷயத்தில் சந்தேகம் வருவதாகக் கொள்வோம். அதைத் தெரிந்து கொள்ள வேண்டியவரிடத்தில் பணிவாகச் சென்று அடக்கத்துடன் கேட்க வேண்டும். போர்க்களத்தில் மரணப் படுக்கையில் படுத்திருந்த பீஷ்மரிடம் அர்ச்சுனன் காலடியில் நின்றே ராஜதர்மம் கேட்டான். அவரும் விருப்பமாகச் சொன்னார். நாம் மரியாதையுடன் கேட்பதிலிருந்தே சம்பந்தப்பட்டவர்கள் மகிழ்ச்சி அடையும்படி செய்ய வேண்டும். கேட்டுத் தெளிந்தவுடன் வணக்கத்துடன் நன்றி கூற வேண்டும்.

ஒரு பொருளைப் பிறரிடம் கேட்க வேண்டியநிலை வந்தால் அப்பொழுதும் மிகுந்த மரியாதையுடன் கேட்க வேண்டும். காலமறிந்து மனமறிந்து கேட்க வேண்டும். போருக்கு உதவி கேட்கச் சென்ற கண்ணபிரானிடம் துரியோதனனும், அருச்சுனனும் ஒரே நேரத்தில் சென்றனர். கண்ணபிரான் தூங்கிக் கொண்டிருந்தார். துரியோதனன் அகம்பாவத்துடன் தலைப்பக்கம் அமர்ந்தான். அர்ச்சுனன் அடக்கத்துடன் கால்பக்கம் அமர்ந்தான். விழித்தெழுந்த கண்ணபிரான் கண்களில் முதலில் அர்ச்சுனன் தென்பட்டான். அவன் அடக்கம் அவரைக் கவர்ந்தது.

அதனால் தனக்கு உதவியாகப் பரமாத்மாவைப் பெற்றான்.

மரியாதை என்பது நன்றி தெரிவிக்கும் முறையில் பெரும்பாலும் அமைந்திருக்கிறது. நாம் பெரும்பாலும் பிறரைச் சார்ந்துதான் வாழ வேண்டியிருக்கிறது. ஆகவே, செய்நன்றி உற்றவர்களாக இருக்க வேண்டும். எந்த துரோகத்திற்கும் மன்னிப்பு உண்டு. செய்நன்றி மறந்தவர்க்கு மன்னிப்பே இல்லை. ஒரு சந்தேகத்தைத் தெரிவித்துக் கொண்ட பொழுதும் பெற்றுக் கொண்ட பொருளைத் திருப்பிக் கொடுக்கும் பொழுதும் மனமாற நன்றி சொல்ல வேண்டும். அந்த நன்றி உள்ளத்திலிருந்து வருகிறது என்பது உரியவருக்குத் தெரிய வேண்டும்.

மனிதன் தவறு செய்வது இயல்பு. அறியாமல் செய்த தவற்றை அடம் பிடித்து அது சரியானது என்று சாதிக்கக்கூடாது. தவற்றை ஒப்புக்கொண்டு தவற்றால் பாதிக்கப்பட்டவரிடம் உடனடியாக மன்னிப்புக் கேட்க வேண்டும். செய்தவற்றை உரியவரிடம் காண்பித்து அல்லது சொல்லி உடனே திருத்திக் கொள்ள வேண்டும்.

நேரம் தவறாமல் எச்செயலையும் செய்ய வேண்டும். ஒரு செயலை குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிப்பதாகக் கூறினால் எப்பாடுபட்டாவது அவ்வாக்கைக் காப்பாற்ற வேண்டும்.

திருக்குறள் :

எல்லோர்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.




ஏ யிலிருந்து இஸட் வரை

"டேய், எங்கப்பாவுக்கு ஐ.ஜி. வரை (இன்ஸ்பெக்டர்ஜெனரல்வரை) தெரியும். எங்கிட்டே வாலாட்டாதே! சொல்லிட்டேன்!"

"அட சரிதான் போடா. உங்கப்பாவுக்கு 'ஐ. ஜி'வரைதானே தெரியும்? எங்கப்பாவுக்கு 'ஏ' யிலிருந்து 'இஸட்' வரை தெரியுமாக்கும்."

— பால கோவிந்தராஜ்





ஊசியும் சத்தரியும்

வெட்டுவது எளிது; இணைப்பது சிரமம். கத்தரி தனிமையாகச் செயல்புரிகிறது. ஊசியோ நூல் இல்லாமல் செயல்படாது. கத்தரியின் வேலை நேரானது. ஊசியின் வேலையில் எண்ணற்ற திருப்பங்களும் பலமுறை அது சிக்கி வெளி வருவதும் அடங்கியுள்ளன.

— அணுவிரதம்



தங்கமணி

8. வால்மீகி விட்ட அம்பு

மகா சமுத்திரத்தில் ஒரு மகா நதியின் பெருவெள்ளம் விழுந்து குழம்புகிற மாதிரி —

பிரம்மாண்டமான கருமேகப் படலங்களோடு வெண்ணிற மேகப் படலங்கள் குபுகுபுவெனத் திரண்டு மோதி ஊடுருவித் தழைகிற மாதிரி —

விசித்திரச் சின்னத்தைப் பார்க்கப் பார்க்க —

பயங்கர வடிவத்தைக் காணக் காண —

ரத்தநிறவிழிகளை நோக்கநோக்க —

உள்ளமெல்லாம் வியப்பும், விதிர்ப்பும் திகிலும் திகைப்பும் தழைத்துக் குழம்பிக் கலங்கித் தவித்துத் திணறிப் படபடத்தது!

''அக்கினி பூதத்தின் பயங்கர முகம் இப்படித்தான்.... இப்படித்தான்....''

''அக்கினி பூதத்தின் பயங்கர முகம் இப்படித்தான்.... இப்படித்தான்...'' எனத் தவிப்பும் தயக்கமுமாகச் சொல்லியபடியே, வறண்ட உதடுகளை நாவினால் துழாவி ஈரப்படுத்திக் கொண்டான் நாகன்.

''இப்படியும் இருக்கலாம்.... வந்து... ஏதோ ஓர் அடையாளத்தின் சின்னமாகவும் இருக்கலாம்....'' என்றான் பீமன்.

''அப்படியும் இருக்கலாம்....!'' என்றான் ஆதி.

''எப்படியும் இருக்கட்டுமே! போய்ப் பார்த்துவிட்டால் போகிறது'' என்றான் வீராயி.

உடனே —

''சரி... எல்லோரும் இங்கேயே நில்லுங்கள். நான் மட்டும் போய்....'' என்றவாறே மெல்ல நடந்தான். போனான். விசித்திர முகத்தைப் பொருத்தியுள்ள ஓங்கி உயர்ந்த பாறையின் அருகில் போய், பாறையோடு ஒட்டினாற்போல் நின்றான். தலையைப் பைய நீட்டி எட்டிப் பார்த்தான் வால்மீகி.

மறுநொடியே —

சட்டெனத் தலையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு திரும்பினான். 'இங்கே வாருங்கள்....' என்கிறமாதிரி தலையை அசைத்துச் சாடை காட்டினான் வால்மீகி.

எல்லோரும் ஆவலுடன் தாவினார்கள். பாறைக்குப் பின்னால், வால்மீகி சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தார்கள்.

அங்கே —

அந்த இடத்தில் —

மலைபாறைகளை இடித்துத் தகர்த்துக் குடைந்து எடுத்தது போல, ஒன்று, ஒன்றரை மீட்டர் அகலத்திற்குக் கிணறு மாதிரி ஒரு பள்ளம் தெரிந்தது. எல்லோரும் மெல்ல நகர்ந்து போய்ப் பள்ளத்தைக் கவனித்தார்கள்.

நாலைந்துமீட்டர் ஆழமுள்ள அந்தப் பள்ளத்திலே, மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரையில், முறுக்கித்திரித்த காட்டுக் கொடி, ஆலமரத்தின் விழுது போல் தொங்கிக் கொண்டிருந்தது.

ஓரிரு நொடி நேர யோசனைக்குப் பிறகு —

தோளிலிருந்து கயிற்றுச் சுருணையை எடுத்தான்; பிரித்தான் வால்மீகி. ஆதியிடமிருக்கிற கயிற்றுச் சுருணையை வாங்கினான், பிரித்தான். கயிற்றின் இரண்டு முனைகளையும்

இணைத்துக் கட்டி முடிந்த பிறகு, பீமனைப் பார்த்தான். கயிற்றின் ஒரு முனையை அவனிடம் கொடுத்து, "இதைக் கூம்புப் பாறையில் சுற்றிக் கட்டு...." எனக் கிசுகிசுத்தான்.

பீமன், கயிற்றைப் பாறையில் கட்டி விட்டு வந்ததும், கயிற்றின் மறு முனையைப் பள்ளத்தில் தொங்கவிட்டான். "முதலில்.... பள்ளத்திற்குள் நான் இறங்கிப் போய்ப் பார்த்த பிறகு, உங்களைக் கூப்பிடுகிறேன்...." என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு ஒரு கையில் கயிற்றையும், இன்னொரு கையில் காட்டுக் கொடியையும் பிடித்துத் தொத்தியபடி நழுவி இறங்கிச் சென்றான் வால்மீகி.

பள்ளத்திற்குள் இறங்கும்போது—

"வால்மீகி, எச்சரிக்கையாயிரு..." என்றான் ஆதி.

"டேய் நிதானமாகப் பார்" என்றாள் வீராயி.

சில வினாடி நேரத்திற்குள் —

வால்மீகி, பள்ளத்திற்குள் இறங்கினான். நின்றான். வில்லை எடுத்தான். அம்பை எடுத்தான். வில்லின் நரம்பில் அம்பைத் திணித்துப் பற்றிக் கொண்டு, பள்ளத்திலிருந்து செம் மண்ணும், செம்பூராங் கல்லுமாக நிறைந்து சரிந்து போகும் பாதையில், மெல்ல நகர்ந்தான். அக்கம்பக்கமெல்லாம், மேலும் கீழும் பாறைகளால் இறுகிக் கிடந்த இடுக்கான வழியில் பைய நடந்து சென்றான். ஓரிரு நிமிஷங்களில், ஏழெட்டு மீட்டர் தூரத்தைச் சந்தடியேதுமின்றிக் கடந்ததும் நின்றான். பக்கவாட்டாக வெயில் பளீரிடும் பிரதேசத்தைப் பார்த்தான்.

சுற்றிச் சூழ செங்குத்தாக ஓங்கி நிற்கிற சிக்கிமுக்கிக் கல் பாறைகளுக்கும் கருநீலக் கல் பாறைகளுக்கும் நடுவே, ஒரு பள்ளம். களி மண் பாறைகளாலான அந்தப் பெரும் பள்ளத்திலே, சேறும் நீருமாய்ச் சதசதத்துக் கொண்டிருந்தது.

மெல்லத் தழைகிற காற்றில் —

என்னவோ ஒரு நாற்றம்!

கல் எண்ணெய் மாதிரி....

வால்மீகி, சுற்றும் முற்றும் பார்த்தான். யாரையும் காணோம். கூப்பிடு தொலைவில், வானளாவ ஓங்கி நிற்கிற சிக்கிமுக்கிக் கல் பாறையின் உச்சியிலே, ஒரு பிணந் தின்னிக் கழுகு, தன்னந் தனியாக அமர்ந்து கொண்டிருந்தது.

வால்மீகி அதைப் பார்த்தான்.

அது இவனைக் கண்ட நொடியே —

பாறையிலிருந்து குப்பெனக் கிளம்பி, பெரிய பெரிய இறக்கைகளை வீசியடித்து, வான வெளியில் ஜிவ்வெனப் பறந்து மறைந்தது!

வால்மீகி, அங்கிருந்து திரும்பினான். வந்த வழியே நடந்தான். பள்ளத்தை அணுகினான். கயிற்றையும், காட்டுக் கொடியையும் பற்றிக் கொண்டு மேலேறி வந்தான்.

வந்தவுடனே —

ஆதி, ஆவலுடன் விசாரித்தான்: "என்னடா வால்மீகி, உள்ளே அக்கினி பூதம் இருக்கிறதா....?"

வால்மீகி, சலிப்பும் சிரிப்புமாகச் சொன்னான். "அக்கினி பூதமாவது, வெங்காயமாவது...! உள்ளே ஒரு பெரிய சேற்றுக் குட்டையிருக்கிறது. அதிலிருந்து பொங்குகிற கல்லெண்ணெயின் நாற்றம், மூக்கைத் துளைக்கிறது! ஒரு புழு பூச்சியைக் கூடப் பார்க்க முடியவில்லை....!"

"அப்படியென்றால்.... வந்து... அக்கினி பூதம் வேறு எங்கேயாவது..." எனச் சொல்லிக் கொண்டிருந்த வீராயியின் வாயைக் கப்பெனப் பொத்திய பீமன், எதையோ உற்றுக் கேட்டான்.

"என்னடா...?" என்றான் ஆதி.

"ஏதோ... சத்தம்... கேட்கிறதே... கவனி..." எனக் காதைத் தீட்டிக் கொண்டு கேட்டான், பீமன். எல்லோரும் ஊமைகளாய்ச் சமைந்து கவனித்தார்கள்.

'டக் டக்... டடக்...
டக் டக்... டடக்...'

மெல்லிய சத்தத்தை உன்னிப்பாகக் கேட்டு உணர்ந்ததும், "என்னடா, வால்மீகி... உள்ளே யாருமே இல்லை என்கிறாய்... என்னவோ சப்தம் கேட்கிறதே...?" எனக் கிசுகிசுத்த குரலில் கேட்டான், பீமன்.

"எல்லோரும் உள்ளே போய்ப் பார்க்கலாம், வாருங்கள்..." என்றான், வால்மீகி. உடனே, எல்லோரும் பள்



ளத்திற்குள் இறங்கினார்கள். சரிவில் இறங்கி முன்னே செல்லும் வால்மீகியைத் தொடர்ந்து நடந்தார்கள்.

சேற்றுக் குட்டையை அடைந்ததும், மூக்கைத்துளைக்கிற கல்எண்ணெயின் நாற்றத்தைச் சகித்துக் கொண்டு, அங்கும் இங்குமாகக் கூர்ந்து பார்த்தார்கள்.

'டக் டக்... ட்டக்...
டக் டக்... டடக்...'

சப்தம் எழும்புகிற திசையில், நிதானமாகவும் எச்சரிக்கையாகவும் தனது கூரிய பார்வையைச் செலுத்திய வீராயி, "அதோ! அதோ...!" எனக் கையை நீட்டிக் காட்டிக் கூவினாள்.

அவள் காட்டிய இடத்தை —

எல்லோரும் பார்த்தார்கள்.

அங்கே —

சேற்றுக்குட்டையின் மேலண்டைப் பக்கத்திலே, ஒரு தட்டையான சிக்கி முக்கிக் கல் பாறையில் முட்டிக் காலிட்டு அமர்ந்து குனிந்தபடி, கீற்றுக் கீற்றாக தொங்குகிற தலைமயிரையும், தாடிமயிரையும் இரண்டு கூழாங்கற்களால் தட்டித் தட்டி நறுக்கிக் கழித்துக் கொண்டிருக்கிற ஒரு கிழவர் —

குனிந்தபடியே திரும்பினார்.

பாறைகளுக்கு இடையில் —

தடியும், அரிவாளும், வில்லும் அம்புமாக நிற்கிற இளம் பட்டாளத்தைப் பார்த்தார். திடுக்கிட்டார். திகைத்தார். கையிலிருக்கும் கூழாங்கற்களை இறுகப் பிடித்தவாறே துள்ளி எழுந்...


எழுந்த நொடியே —

'விஷ்ஷ்... ஷ்ஷ்ர க்...!' வால்மீகியின் வில்லிலிருந்து விடுபட்ட அம்பு, வீச்சாகப் பாய்ந்து, கிழவரின் இடது தோளுக்குக் கீழே, இருதயத்திற்குச் சற்று மேலே, நறுக்கெனப் பொத்துக் கொண்டு ஊடுருவியது!

அம்படி பட்ட நொடியே —

''ஹய்ய்... ய்யோ... ஓ...!'' உயிரதிர ஓங்கி அலறியபடியே, தட்டுத் தடுமாறிச் சுழன்று விழுந்தார், வாழ்க்கையில் தொண்ணூற்றாறு





ஆண்டுகளாய்ப் பழுத்திருக்கிற படு கிழவர்...!

இப்படி நடக்கும் — என்று யாருமே எதிர்பார்க்கவில்லை! எல்லோரும் திடுக்கிட்டுக் குழம்பித் தவித்தார்கள்!

வீரபாயி, வால்மீகியைப் பார்த்து நெஞ்சந் தவிக்க வினவினான்: "ஏன்டா, இது நியாயமா...?"

"நம்மைக் கண்டு பயந்து எழுந்த கிழவரை நோக்கி, எதற்காக அம்பு விட்டாய்...?" எனக் கோபமாய்ச் சீறினான், ஆதி.

"இல்லை... வந்து... அவர் நம்மைக் கண்டதும் எழுந்து கொண்ட வேகத்தையும், வீச்சையும் பார்த்து... நம்மைத் தாக்கிவிடுவாரோ என்று எண்ணி... ஆத்திரப்பட்டு விட்டேன்! அவசரப்பட்டு விட்டேன்...!" குற்றம் செய்திருக்கிற குறுகுறுப்புடன் சொல்லிக் கொண்டே தலைகவிழ்ந்தான், வால்மீகி.

உடனே —

எல்லோரும் தாவியோடினார்கள். அம்பு பொத்துக் கொண்டு விழுந்து கிடக்கும் கிழவரை அணுகினார்கள். பார்த்தார்கள். கிழவரின் நெஞ்சில் அம்பு தைத்திருக்கிற ரணவாயிலிருந்து ரத்தமாய்க் கசிந்து பெருகி வழிந்து கொண்டிருந்தது!

நொடி நேரம் தயங்கிய ஆதி, பரபரப்புடன் சுற்றும் முற்றும் கவனித்தான். கிழவரின் தலைப்பக்கமாகப் பாறைகளின் இடுக்கில், சலசலவெனப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. அருவி நீர்!

நீரைக் கண்டவுடனே —

ஆதி, பாய்ந்தோடினான். இரு கைகளையும் தாமரைப் பூவாய்க் குவித்து நீரை அள்ளிக் கொண்டு வந்தான். கிழவரின் முகத்தில் லேசாகத் தெளித்தான்.

சில வினாடிகளில் —

மூர்ச்சை தெளிந்த முதியவர், மெல்ல இமைகளை அசைத்து பார்த்தார். திணறுகிற மூச்சை நிதானப்படுத்திக் கொண்டு, சுற்றிச் சூழ்ந்திருப்பவர்களைத் தெளிவாகப் பார்த்தார்.

ஆதி.

வீரபாயி.

நாகன்.

ரிமன்.

வால்மீகி.

வில்.

அம்பு...

கிழவர் மெதுவாக நெளிந்தார். இடது கையைப் பாறையில் ஊன்றிப் பைய எழுந்து கொள்ள முயல்வதைக் கண்ட நொடியே —

எல்லோருமாகச் சேர்ந்து கிழவரைக் கைத்தாங்கலாகத் தூக்கி உட்கார வைத்தார்கள். அப்படியினால் பொங்குகிற கொடிய வலியினால், உயிர் தத்தளித்தது. திணறித் தவிக்கிற மூச்சுக்காற்றைச் சிரமத்துடன் இழுத்துச் சுவாசித்தபடியே, மெல்லத் தலை நிமிர்ந்த கிழவர், எதிரில் நிற்கும் வால்மீகியைப் பார்த்தார். "ஏன்டா, கண்ணு... மரத்துக்குப் பின்னால்

மறைந்து நின்று, மகாவீரனை வாலியை அம்பாலடித்துக் கொன்ற ஸ்ரீராமன் மாதிரி, நிற்கிறாயே...! நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன்...? என்னை ஏன் அம்பால் அடித்தாய்...?' என்று கண்ணீர் வடித்துப் புலம்பியவாறே கேட்டார், கிழவர்.

அவரது புலம்பலைக் கேட்டதும் —

அக்கினியில் நெக்குருகும் ஈயக் கட்டி மாதிரி —

வெயிலில் கரைந்துருகும் பனிக் கட்டி மாதிரி —

எல்லோருக்கும் துயரம் ததும்பியது! உள்ளமெல்லாம் மண்டிச் செருமிய கொடிய வேதனையால், நெக்குருகிக் கனிந்து இளகிக் கரைந்து, உயிரெல்லாம் பம்மியது!

வீராயி, தேம்பினாள்!

ஆதி, கண்ணீர் சிந்தினான்!

பீமன், விம்மினான்!

நாகன், விசித்தான்!

வால்மீகி —

அவன், இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு, உயிர் கலங்க, உடல் குலுங்க ஓங்கிக் கதறினான்! கதறிக் கதறி அழுதான்...!

எதையோ, தெளிவாகப் புரிந்து கொண்ட மாதிரி... கிழவர் தலையை அசைத்தார். ''குழந்தைகளே... அழாதீர்கள். உங்களை நானும், என்னை நீங்களும் தெரிந்து கொள்ளுவோம்...'' எனச் சொல்லியவர், எதிர்ப்புறத்திலுள்ள ஓங்கி உயர்ந்துள்ள பாறையைக் கவனித்த நொடியே, ''அய்யோ! அண்ணா...! வேண்டாம்! வேண்டாம்...!'' என்று அச்சமும் அதிர்ச்சியுமாக, உயிர் வேதனையைச் சகித்துக் கொண்டு, வீறிட்டு அலறினார்!

அவரது திடீர்க் கூக்குரலைக் கேட்டதும் —

எல்லோரும் பயந்தார்கள், பதறினார்கள். சற்றே கலைந்து நின்று தலையை நிமிர்த்தி அண்ணாந்து பார்த்தார்கள்.

அங்கே —

ஓங்கி நிற்கிற பாறையின் மேலே —

ஒரு பெரிய பாறாங்கல்லைத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தது, ஓர் உருவம்!

(தொடரும்)



பிருந்தாவனக் கவியரங்கம்

அச்சுதனின் பம்பரம்

அச்சுதன் வாங்கிய பம்பரம்
அழகு வாய்ந்த பம்பரம்
பச்சை மஞ்சள் சிவப்பென
பலநிறங்கள் கொண்டது.
சாட்டை கொண்டு சுற்றினான்
தரையில் நன்றாய் வீசினான்
தரையில் சுற்றும் அதனையே
சாட்டை கொண்டு எடுத்தனன்
அம்பி கையில் விட்டனன்
அழகாய் ஆடக் கண்டனன்!

— வி. எம். பாரதி (9306), விளாங்குப்பம்





நிச்சயம்

தினமும் கற்று வருவதால்
தேர்வில் வெற்றி நிச்சயம்!
கனிவு கொண்டு பழகினால்,
களிப்பு உண்டு நிச்சயம்!

ஒன்று பட்டு வாழ்வதால்
உயர்வு உண்டு நிச்சயம்!
தொண்டு செய்து வருவதால்,
தேசம் ஓங்கும் நிச்சயம்!

ஊக்கம் கொண்டு உழைப்பதால்,
ஆக்கம் உண்டு நிச்சயம்!
வாக்கில் வாய்மை இருந்திடில்,
வளர்ச்சி உண்டு நிச்சயம்!

நன்மை செய்து வாழ்வதால்,
நாடு போற்றும் நிச்சயம்!
உண்மை யாக உழைப்பதால்,
உயர்வு உண்டு நிச்சயம்!

— செல்வன். பா. மணிவண்ணன்
(11420), வேடசந்தூர்.

பள்ளிக்கூடம் திறந்தாச்சு

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
பாடப் புத்தகம் வந்தாச்சு
சொல்லி வைத்த பைகூட
நல்ல நிறத்தில் தைச்சாச்சு

காலை விடிந்து எழுந்ததுமே
காலைக் கடனை முடித்திடுநீ



தோளில் பைதான் தொங்கிடவே
துடிப்பாய் பள்ளி சென்றிடுநீ

உயர்வு தாழ்வு பாராமல்
ஒன்றாய்க் கூடி ஆடிடுநீ
அயர்வு கொள்ளா மனத்தோடு
அன்பு கொண்டு பழகிடுநீ

வாத்தி யாரைப் பார்த்ததுமே
வணக்கம் சொல்லிப் பணிந்திடுநீ
ஏத்திப் படிப்பை அறிவுக்கு
ஏற்றம் கொடுக்கத் துடித்திடுநீ

மாலை வீட்டை அடைந்ததுமே
மகிழ்ச்சி யாக ஆடிடுநீ
நாளை என்று இருக்காமல்
நன்கு பாடம் படித்திடுநீ.

— பா. அகிலன் (8387), மண்மங்கலம்

கப்பலோட்டிய தமிழர்



ஓட்டப் பிடாரம் எனுமூரில்
உத்தமர் வ.உ.சி. பிறந்திட்டார்;
பட்டம் பெற்ற பேரறிஞர்
பைந்தமிழ் வளர்த்த மூதறிஞர்.

சட்டக் கல்வி தனைப்பயின்ற
தலைசி றந்த வழக்கறிஞர்
நாட்டம் கொண்டார்; பாடுபட்டார்
நமது நாட்டின் விடுதலைக்கே!

ஆங்கிலக் கம்பெனிக் கெதிராக
ஆழ்கடல் தனிலே கப்பலினைப்
பாங்காய் விட்டுப் பெருமையுற்றார்;
பாரில் சிறந்த புகழ்பெற்றார்.

சிறைக்குச் சென்றார்; கல்லுடைத்தார்
செக்கும் இழுத்தார் சிதம்பரனார்
மறைய வில்லை அவர்தொண்டே
மங்கலப் புகழால் நிலைத்துவிட்டார்!


— எம்.ஜி. இராமசந்திரன் (2915),
பழையனூர்.

இறைவன் எங்கே?




காற்றின் அசைவில்கலந்திருப்பான்—பெருங்
கடலின் அலையில் மிதந்திருப்பான்!
வானவெளியில் பார்த்திடலாம் — அவன்
வடிவம் இயற்கை எழிலன்றோ!
பூமித்தாயின் மணிவயிற்றில் — தினம்
பூக்கும் மலரின் வாசமன்றோ!
கூலி செய்து பிழைத்திடுவார் — உடல்
கொட்டும் வியர்வையில் வழிகின்றான்
மலையாய் நிமிர்ந்தே நின்றாலும் — அடி
மடுவாய்த் தாழ்ந்தே சென்றாலும்
நதியாய்த் தவழ்ந்து விரிந்தாலும் — அவன்
நம்முன் ஒளியாய்ச் சிரிக்கின்றான்!
இறைவன் எங்கே? எங்கேதான் — தவம்
இருந்தே தவிப்பவர் சிந்தையிலே
உறைந்தே நிற்பான் ஒளியுருவாய் — நாம்
ஓதும் மந்திரம் இயற்கையன்றோ!

— சிவஜோதி செல்லபாண்டியன் (7496)
போடிநாயக்கனூர்.



தயிர் சாதம்
ஓவியர் - ராஜு :- கதை - மு. சிவாஜி
① மகத நாட்டை நோக்கி ஒரு பிச்சைக்காரன் சென்று கொண்டிருந்தான்.....
② அப்பொழுது ஒரு மரத்தில் அமர்ந்திருந்த தேவதை அவனைப்பார்த்து, பரிதாபப் பட்டது.
③ என் மாயசக்தியைக் கொண்டு இவனை நான் பணக்காரனாக ஆக்கப்போகிறேன்.
④ உடனே அந்த தேவதை பிச்சைக்காரனை அழைத்தது.
⑤ நான் ஒரு தேவதை. என் மாய சக்தியால் உன்னை செல்வந்தனாக நான் ஆக்குகிறேன். நீ விரும்புகிற வரத்தை என்னிடம்.. கேள்.
⑥ இப்ப.. எனக்கு ரொம்ப பசிக்கிறது. தயிர் சாதத்தை நீ... தந்தால் போதும்.
⑦ நீ, கேட்ட வரம் தந்தோம். இது அட்சய பாத்திரம்.... இதில் தயிர் சாதம்... நீ... எடுக்க... எடுக்க வந்து... கொண்டேயிருக்கும். இதை விற்றுப்பணக்காரனாகி விடு. ஆனால்... நீ... இந்தக்காட்டை..... தாண்டும் வரை ... இந்தப் பாத்திரத்தை திறக்காதே.
⑧ நிபந்தனையை மறந்து பாத்திரத்திலிருந்த தயிர் சாதத்தை, பிச்சைக்காரன் எடுத்துச்சாப்பிட்டான்.
⑨ அன்றிரவு ஒரு விடுதியில் அட்சய பாத்திரத்துடன் பிச்சைக்காரன் தூங்கிக் கொண்டிருந்தான். தயிர்-சாதம் நிரம்பி வழிந்தது.
⑩ தயிர் சாதம் விடுதியை மூழ்கடித்தது. பிச்சைக்காரன் அந்தச்சாத வெள்ளத்திலிருந்து நீந்தி உயிர் தப்பினான்.
⑪ அந்த ஊரிலுள்ள மக்கள் சாத... வெள்ளத்தில் மூழ்கித்தவித்தனர்.


12
தயிர் சாத வெள்ளம் ஏற்பட, பிச்சைக்காரன் தான் காரணம் என்பதை அரசர் அறிந்து கொண்டார். உடனே காவலாளிக ளிடம், பிச்சைக்காரனைக்கைது செய்யும்படி உத்தரவிட்டார்.
13
அந்தப்பாத்திரத்தால் தான் ஊரே மூழ்கி விட்டது என்று விஷயம் அவர்களுக் குத்தெரிந்து... விட்டது போலும். என்னை ஆபத்து அணுகப்போகிறது.
14
ஏய்! பிச்சைக்காரனே.. ஓடாதே! ... நில்...!!
15
பீதியடைந்த அந்தப் பிச்சைக்காரன் காட்டை நோக்கி, தலை தெறிக்க ஓடலானான்....
16
காட்டிலுள்ள ஒரு மரத்தின் மீது பிச்சைக் காரன் ஏறினான்....
17
அங்கு அவனுக்கு அட்சய பாத்திரத்தை தந்த தேவதை அமர்ந்திருந்தாள்.
ஹா..! .. நீயா..!! எனக்கு நீ.. கொடுத்த பாத்திரத்தினால் தான், மகத நாடு தயிர் சாதத்தில் மிதக்கிறது. உன்னை நம்பி நான் மோசம் போய் விட்டேன்.
18
என் நிபந்தனையை நீ மீறியதால் தான், ஒரு நாடே உன்னால் அழிகிறது.... என் கண்முன் நிற்காதே... போ....
19
மகத நாட்டை மூழ்கடித்துக் கொண்டிருந்த தயிர் சாதக் குவியலை.. தன் மந்திர சக்தியால் அந்தத்தேவதை மறையும்படி செய்தாள். பிறகு மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர்.
20
பிச்சைக்காரன் மீண்டும் திருவோடு ஏந்தி.. தெருத் தெருவாக அலைய ஆரம்பித்தான்.



கடவுள்களைக் கண்டுபிடியுங்கள்

இவை எந்தெந்தக் கடவுள்களின் உருவங்கள் என்று கண்டுபிடியுங்கள். பிறகு நீங்களே இப்படங்களைப் பூர்த்தி செய்ய முடியுமா என்று பாருங்கள்.

— குமார்

விடை: விநாயகர், கிருஷ்ணர், பராசக்தி, சரஸ்வதி, முருகர், ஆஞ்சநேயர்.

தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்த தம்பி தங்கைகள்

'கோகுலம்' இதழில், உங்களுக்கான திரைப்படங்கள், புத்தகங்கள், நூலகங்கள் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வருக்கு ஒரு வேண்டுகோள் தயாரித்து, அதில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கையெழுத்திட்டு அனுப்பினால், முதல்வர் நிச்சயம் உங்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து, தக்க நடவடிக்கை எடுப்பார் என அறிவித்திருந்தோம்.

மிகுந்த அக்கறையுடனும் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் 150க்கு மேற்பட்ட சிறுவர்கள் வேண்டுகோளைத் தயாரித்து 8500 க்கு மேற்பட்டவர்களிடமிருந்து கையெழுத்துப் பெற்று முதல்வருக்கு அனுப்பி, எங்களுக்கும் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களின் பெயர்களை முகவரியுடன் கீழே தந்திருக்கிறோம். இவர்களில் சிலர், இரு பிரதிகளில் கையெழுத்துக்களைப் பெற்று ஒன்றை முதல்வருக்கு அனுப்பிவிட்டு, மற்றொன்றை கோகுலத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். பதிவுத் தபாலில் சிலர் வேண்டுகோளை அனுப்பியிருக்கிறார்கள். சிலர் Certificate of Posting பெற்று அனுப்பியிருக்கிறார்கள்.

இத்தகைய ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் அனுப்பப் பெற்ற உங்கள் வேண்டுகோளுக்கு நிச்சயம் நம் தமிழக முதல்வர் மதிப்பளிப்பார் என்று நம்புகிறோம்.

— ஆசிரியர்

1. சா. காயத்திரி தேவி (11300),
டி—28, ராமசுவாமி வீதி,
காந்தி நகர்,
உடுமலைப்பேட்டை — 642 154.

2. ஆர். சுப்புலட்சுமி,
148, 8 வது வீதி,
கே.கே. புதூர்,
கோவை—38.

3. ராகசெள. கருணாகரன் (883),
17—பி, டி.பி.சி. சந்து (மாடி)
கடைவீதி, சேலம்—1.

4. மா. வெங்கடேச மூர்த்தி (7698)
8—சி, 5 வது மெயின் ரோடு,
நியூ காலனி,
குரோம்பேட்டை, சென்னை—600 044.

5. என். சீனிவாசன்,
த/பெ. எஸ். நாகராஜன்,
கீழ் அக்ரஹாரம்,
பாஞ்சம்பட்டு, விழுப்புரம்—605 602.

6. ஏ. ஜி. கோபி (10610)
தாலுகா ஆபீஸ் ரோடு,
திருப்பத்தூர்—623 211.
ப.பொ.மு. மாவட்டம்.

7. வி. மீனாட்சி (9145),
208, ஹவுசிங் யூனிட்,
ராஜகோபால புரம்,
புதுக்கோட்டை.

8. இரா. வேணுகோபால் (7385),
61, பேராநாயுடு லே அவுட்,
ராம்நகர்,
கோவை—641 009.

9. எஸ். தியாகு (12509),
அழகப்பா பில்டிங்,
கீழரத வீதி,
திருப்பத்தூர்—623 217.

10. ஆர். குருராஜ் (1444)
34, தெற்குத் தெரு, (பின்புறம்),
கரூர்—639 001.

11. மா. தா. ஸ்ரீதர் (13601),
564, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
அரும்பாக்கம், சென்னை—600 106.

12. பா. உமா மகேஸ்வரி (10747),
த/பெ. பாலகிருஷ்ணன்,
நிர்வாக மேலாளர்,
இன்டாக் பிராடக்ட்ஸ் (பி) லிமிடெட்,
கடலூர்—607 003.

13. பொ. நடராஜன் (12,173)
த/பெ. பொங்கியண்ணன்,
ஆயக்காட்டூர்,
காவேரி ஆர். எஸ்.,
ஈரோடு—7.

14. ஏ.எஸ். கணேசன் (12575),
1, மேற்கு கூவம் ஆறு சாலை,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை—600 002.

15. இரா. பாபு,
ஏ 6/3, அண்ணாசாலை,
ஸ்வர்ணபுரி, சேலம்—4.

16. எஸ். சிவராஜ்,
மன்னை நகர கோகுலம் சிறுவர் சங்கம்
மன்னை.

17. கே. பாபு சங்கர்,
துணுக்கு மற்றும் கவிதை எழுத்தாள
சிறுவர் சங்கம்,
தபால் நிலைய ஊழியர் குடியிருப்பு,
நாகர்கோவில்.

18. எஸ். கணேசன் (9921),
17 ஏ, தேசிபாளையம் தெரு,
காஞ்சிபுரம்—631 503.

19. பா. கதிர்வேலன் (9154)
177, ஈ.பி. காலனி,
கழிஞ்சூர், வேலூர்—632 006.

20. மாணவர்கள்,
சிவானந்தா வித்யாலயா,
சிவானந்தா நகர் போஸ்ட், தோப்பூர்,
மதுரை—625 006.

21. வி.டி. விவேகானந்தன்,
மகாதானபுரம்—1.

22. க. ஜெயந்தி குமாரி (7958),
2, ரவுண்டு பங்களாத் தெரு,
வாலாஜாபாத், செங்கற்பட்டு
மாவட்டம், 631 605.

23. ஜி. கோபாலகிருட்டிணன்,
7, கருப்பணன் தெரு,
சௌகார்பேட்டை, சென்னை—1.

24. மு. அம்புச புவனா (10900)
18, பவானி நகர், ம.க. சாலை,
தஞ்சாவூர்—613007.

25. எஸ். சாந்தி,
மேட்டு மகாதனபுரம் போஸ்ட்,
லாலாபேட்டை (வழி)
திருச்சி மாவட்டம்,
குளித்தலை தாலுகா—639 131.

26. கே. அருள் ஜோதி,
67, புதுப் பிள்ளையார் கோவில் தெரு,
மேல்புவனகிரி போஸ்ட்,
தெ.ஆ. மாவட்டம்—608 601.

27. ம. ராஜேஸ்வரி,
நியூ பென்சி ஹால்,
வாழப்பாடி அஞ்சல்,
சேலம் மாவட்டம்.

28. டி.எம். பர்வேஸ் அஹமத்,
10, வாணி தெரு,
ஆம்பூர்—635 802.

29. வள்ளிதாசன் (10847),
எல்—87, திருவள்ளுவர் நகர்,
வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு,
இராஜபாளையம்—626 117.

30. வி. என். கௌரி,
638, பிரேம்ஜி கட்டிடம்,
நேருஜி வீதி,
விழுப்புரம்—605 602.

31. க. சபிதா,
த/பெ. என். சுப்பிரமணியம்,
சிக்கல்நுத்து (போஸ்ட்),
ஜக்கார்பாளையம் (வழி)
உடுமலை (தாலுகா)

32. க. ஜெயராஜ் (12259),
திலகர் தெரு,
திருவள்ளூர்—602 001.

33. ஆர். ஜி. சுப்பிரமணியன் (9113)
6, புதுத் தெரு, தென்காசி—627 811.

34. பி. சரவணன் (12850)
74, மெயின் ரோடு,
எருமப்பட்டி—637 013.

35. க. சிவக்குமார்,
1—70, திருவள்ளுவர் தெரு,
முள்ளிப்பட்டு—632 316.

36. ஏ.பி. திருமகச் செல்வி (13331)
3, மூன்றுவது தெரு,
திருவள்ளுவர் நகர்,
உசிலம்பட்டி—626 532.

37. த. அருள் சிவபாலன் (47),
வெண்ணிலா கோகுலம்
சிறுவர் சங்கம், செங்கல்பட்டு—1.

38. பெ. வெங்கடலட்சுமி காந்தன்
(13367)
4/1, பெருமாள்புரம் தெரு, சிதம்பரம்
கடம்பூர்—627 714.

39. கே. பங்காரு,
செயலாளர்,
அறிவகம்,
எலவம்பட்டி கிராம அஞ்சல், 635602

40. வெ. புகழொளி,
2, செட்டித் தெரு,
திருவிழுந்தூர்,
மயிலாடுதுறை—609 001.

41. கே. ராஜன் (8404),
26, 8வது தெரு,
சாய்பாபா காலனி, கோவை.

42. பி. ரமேஷ் (3692),
72, கடைத் தெரு,
வெள்ளிமேடுபேட்டை,
திண்டிவனம் தாலுகா 604 207.

43. பா. மகேஷ் (11556),
58, கோகுல வீதி,
ராம்நகர், கோவை—9.

44. பா. உஷா நந்தினி (5132),
த/பெ. பாலசுப்பிரமணியன்,
செல்வம் இராமானுஜ நகர்,
கரூர்—639 002.

45. டி. இரத்தின வேலு,
16/பி, நரசிம்ம நகர்,
செய்யாறு, டி.வி.புரம் அஞ்சல்,
வ.ஆ. மாவட்டம் 604 407.

46. ஆர். ஸ்ரீவித்யா (4778),
1/63, ராஜேந்திர பிரசாத் காலனி,
கல்கத்தா—33.

47. க. தங்கராசு (8557),
த/பெ. கணபதிக் கவுண்டர்,
சின்னப் பொன்னுன் காடு,
வி. அய்யம்பாளையம்,
சாமனாபுரம் அஞ்சல், மங்கலம் வீதி,
கோவை மாவட்டம் 638 663.

48. கே. முத்துக் கிருஷ்ணன் (9386),
41, முருகன் கோவில் வீதி,
கண்டமங்கலம்,
புதுவை மாநிலம் 605 102.

49. கோ. மோகன் (9384),
41, முருகன் கோவில் தெரு,
திருவாண்டார் கோயில் அஞ்சல்,
கண்டமங்கலம்—605 102.

50. வை. ஜெயஸ்ரீ (11623),
1/49, அக்ரஹாரம்,
நடுக்காவேரி—613 101.
தஞ்சை மாவட்டம்.

51. ஆர். முருகன் (7421),
த/பெ. ரெங்கசாமி,
கீரமங்கலம் மேற்கு,
கீரமங்கலம் அஞ்சல்.

52. பி. வித்யா சாகர் ஆர்யா
13/1, 6 எல்ப், காம்ப் தெ. 3,
எண்ணூர், சென்னை—57.

53. க.மு. விஸ்வநாதன் (589),
37, பெருமாள் கோயில் தெரு,
கண்ணமங்கலம், ஆரணி வட்டம்,
வ.ஆ. மாவட்டம்—632 311.

54. பி.எஸ். முத்துராம கிருஷ்ணன்,
(2587),
57, தேனப்பபுரம் 2 ஆம் தெரு,
சங்கரன் கோயில்—627 756.
நெல்லை மாவட்டம்.

55. வி. குமணன் (3284),
29, திருவள்ளுவர் நகர்,
திருக்கழுக்குன்றம்—603 109.

56. தே. வெற்றிச் செல்வன் (8190)
விக்டரி பில்டிங்,
கருங்கல் அஞ்சல், குமரி மாவட்டம்.

57. பி. ஆனந்த் (10878),
41, அம்மாசிக் கோனார் தெரு,
கே.வி. புதூர், கோவை—38.

58. பழ. காந்தி,
4—1—31, சுந்தரம் தெரு,
ஜலகண்டபுரம் 636 501.

59. தா. இராஜேந்திரபிரசாத் (11517)
54, பிள்ளையார் கோவில் தெரு,
கைக்கான் குப்பம், சென்னை—87.

60. கா. மில்லர்,
காசி நாடார் தெரு, சோழவந்தான்.

61. ந. நாகராஜன்,
எல். 107, ஹட்கோ காலனி,
ரயெக்கோட்டா ரோடு,
ஒசூர்—635 125.

62. ச.த. கார்த்திகேயன் (8956),
4/2, சத்தியம்மன் கோயில் வீதி,
அம்மையார் குப்பம் 631 301
செங்கை மாவட்டம்.

63. ரெ. ஜோதி (8353),
த/பெ. கே.என். ரெத்னப்பா,
மருதம் பட்டிணம், திருவாரூர்—2.

64. க. ஸ்ரீராமராஜேஷ்,
24, ஹரித்திரா நதி வடக்கு,
மன்னார்குடி,
தஞ்சை மாவட்டம்—614 012.

65. ஜெ. சுரேஷ் குமார் (13342),
3, வெங்கடாசல நாயக்கர் தெரு,
விழுப்புரம் — 605 602.
தெ. ஆ. மாவட்டம்.

66. ஏ. முரளி (12348),
13, பச்செட்டித் தெரு,
தருமபுரி—636 702.

67. ஆர். ரகுநாதன் கணேஷ் (6518)
த/பெ. என்.எஸ். ரங்கசாமி,
நாயக்கன்பாளையம் அஞ்சல்,
எஸ். ஆர். கே.வி. வழி,
கோவை மாட்டம்.

68. ஜி. என். கதிர் (6739),
ஜின்ஸ் பவன்,
பெருமாள் விலாஸ், படத்தாலூமூடு,
மீன்சால் அஞ்சல் 629 153.

69. மு. பழ. முரளி (8902),
11/பி, முத்துசாமி தெரு,
ஒடக்காடு, திருப்பூர்—638 602.

70. எம். பழனிச்சாமி (7177),
11/பி, முத்துசாமி தெரு,
ஒடக்காடு, திருப்பூர்—638 602.

71. ச. கணேஷ்.
11/எஃப். முத்துசாமி தெரு.
ஒடக்காடு. திருப்பூர்—638 602.

72. அ. வெங்கடாசலம் (52).
36/சி. வடக்குத் தெரு.
சிந்துபூந்துறை.
திருநெல்வேலி—627 002.

73. டி. சிவக்கனி (3025).
417. ஹவுசிங் யூனிட்.
இராஜகோபாலபுரம்.
புதுக்கோட்டை—3.

74. பா. செந்தில்குமாரி (11046).
1—4/14. ஈ.வெ.ரா.சி. தெரு.
சிங்கம்புணரி—624 502.
பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம்.

75. சி. இராஜாராமன் (3382).
48/ஏ. தேரடி பிள்ளையார் கோயில் தெரு.
சிதம்பரம்—608 001.

76. க. நாச்சியார் (9108).
63. மேலரத வீதி.
திருச்செந்தூர்—628 215.

77. எம். முகேஷ் ஆனந்த் (12065)
த/பெ. பி.வி. மோகன்.
செட்டி தெரு.
காஞ்சி—606 702.

78. ஜெ. ஜெயசீலன் (12405).
த/பெ. சே. ஜெயவேல்.
பேராம்பட்டு அஞ்சல்.
வீரமங்கலம் வழி.
திருப்பத்தூர் (வ.ஆ.)

79. டி. மாதவன் (7764).
7. வேதா இல்லம்.
மரக்காணம்—604 303.

80. எஸ். சிவராஜ் (22)
8. உப்புக்காரத் தெரு.
மன்னார்குடி—614 001.

81. எஸ். பாண்டிச் செல்வி.
பி—2. ஹவுசிங் யூனிட்.
சத்தியமூர்த்தி சாலை.
புதுக்கோட்டை—622 002.

82. ம. ஜெயச்சந்தர் ராவ் (12745).
த/பெ. என். மாதவ ராவ்.
தனி போஸ்ட்.
குறிச்சிக் கோட்டை (வழி).
உடுமலைப்பேட்டை தாலுகா.
கோவை மாவட்டம்.

83. அ. கோபிநாத் (9657).
5. கட்டியப்பர் வடக்கு சந்து.
நாகப்பட்டினம்.

84. ஆர். எஸ். விஜயகுமார்.
த/பெ. ஆர். சோமசுந்தரம்.
முருகன் காலனி.
பெத்தநாயக்கன்பாளையம்.
ஆத்தூர். சேலம்—636 109.

85. வி.ஏ. ராஜ கணபதி (3124).
21. சொர்ணபுரி பிரிவுப் பகுதி.
சேலம்—636 004.

86. எஸ். எஸ். ராஜன்.
42. எஸ்.ஜி. புரம். மெயின் ரோடு.
விழுப்புரம்—605 602.

87. பாலசிஷி (13015).
46/14. மேல ரத வீதி.
எட்டயபுரம்—625 902.

88. எம். கல்யாண சுந்தரம் (7722).
கோனுபட்டு.
புதுக்கோட்டை மாவட்டம்.

89. ஆர். ரமேஷ் குமார்.
திருச்சண்முகா நடுநிலைப் பள்ளி.
மேல மருதப்பபுரம்.
நெல்லை மாவட்டம்—627 860.

90. எஸ். கணேஷ் (9661).
செயலர். திரு.வி.க. கோகுலம் சிறுவர் சங்கம்.
வண்டுவாஞ்சேரி. செம்மங்குடி போஸ்ட்.

91. எஸ்.வி. கார்த்திகேயன் (9230)
2. ஸ்ரீநாகநாத சுவாமி கோவில் காம்பவுண்ட்.
ஆம்பூர் (வ.ஆ.) 635 802.

92. கொ.மா.கோ. இளங்கோ.
22. இராமசாமி கோவில் தெரு.
இராஜபாளையம்.

93. எஸ். அமீர் அலி (7577).
76. தெற்குத் தெரு. நாகூர்—611 002.

94. சி. சதீஷ்குமார்.
3 ஏ (4). டி.பி.ஏ. காலனி. திருப்பூர்—7.
கோவை மாவட்டம்.


95. எஸ். மஞ்சுளா (11,179)
118. ஜோதி நகர். 4வது தெரு.
திருவொற்றியூர். சென்னை—600019.

96. ஏ. முகமது (12231).
9.மீனவர் தெரு. அரும்பாவூர்போஸ்ட்
பெரம்பலூர் தாலுகா.
திருச்சி மாவட்டம்—621 103.

97. ஐ. ஷேக் சுல்தான். (13,397).
24. பாளையப்பட்டுத் தெரு.
உளுந்தூர்ப்பேட்டை.
தெ.ஆ. மாவட்டம்—606 107.

98. எம். அசோக் (11826).
80 சி. மோனு காட்டேஜ்.
கிரீன் பில்ட். உதகை 643 001.

(இன்னும் வரும்)



காச நோய்

டாக்டர் கு. கணேசன்

நம் நாட்டில் பரவியுள்ள நோய்களுள் மிகவும் பழைமையானதும், அதே சமயத்தில் மிக அதிக அளவில் பரவியுள்ளதுமான காச நோயைப் பற்றி இக்கட்டுரையில் படிக்கப் போகிறீர்கள்.

'மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ்' (Mycobacterium Tuberculosis) என்ப்படும் பாக்டீரியாக் கிருமிகளால் வருவதுதான் காசநோய். இதை ஆங்கிலத்தில் 'டியூபர்குளோசிஸ்' (Tuberculosis) என்றும் 'டி.பி.' (T.B.) என்றும் அழைக்கிறார்கள்.

காற்று மண்டலத்தில் அழுக்கையும் தூசுகளையும் அள்ளித் தெளிக்கும் நூற்பாலைகள் நிறைந்த நகரங்களிலும், புகை கக்கும் தொழிற்சாலைகள் நிரம்பிய நகரங்களிலும், அளவுக்கதிகமாக மக்கள் தொகை உள்ள ஊர்களிலும், காற்றோட்டமில்லாத இடங்களிலும், சுகாதாரமற்ற கிராமங்களிலும், வறுமையில் வாடும் சேரிப் பகுதிகளிலும் காச நோய்க் கிருமிகள் அதிகமாகக் காணப்படும்.

இவ்விடங்களில் வசிக்கும் குழந்தைகள், கிருமிகள் நிறைந்த அசுத்தக் காற்றை சுவாசிக்கும் போது காச நோய் வருவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டாகின்றன.

இதுமட்டுமில்லாமல் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் எச்சில், சளி போன்றவற்றிலும் காசநோய்க் கிருமிகள் வாசம் செய்வதால், நோயாளிகள் சுகாதாரம் தெரியாமல் கண்ட இடங்களில் காறித் துப்பும்போது சளியோடு நோய்க்கிருமிகளும் வெளியேறுகின்றன. இந்த எச்சிலும் சளியும் சூரிய வெப்பத்தால் காய்ந்து போனாலும், அதிலிருக்கும் கிருமிகள் சாகாமல் நீண்ட நாட்களுக்கு உயிரோடிருக்கின்றன. இம்மாதிரியான சுகாதாரமற்ற இடங்களில் குழந்தைகள் விளையாடும்போது இக்கிருமிகள் குழந்தைகளிடத்தில் எளிதாகத் தொற்றிக் கொள்ளும்.

பிறந்த குழந்தைகள், வளரும் பருவத்தில் உள்ள குழந்தைகள், இளைஞர்கள், பெரியோர்கள் என்று எல்லாப் பருவத்தினரையும் இந்நோய் பாதிக்க வல்லது என்றாலும், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளையே அதிகமாகப் பாதிக்கிறது.

காரணம் — இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் நோய் எதிர்ப்பு

சக்தி அதிகமாக இருப்பதால், அவ்வளவு சுலபமாக அவர்களுக்கு காசநோய் வருவதில்லை. ஆனால் வளரும் பருவத்தில் உள்ள குழந்தைகளுக்கு இந்தஎதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால், பஞ்சில் பற்றிக் கொள்ளும் நெருப்பு மாதிரி மிக எளிதாகப் பற்றிக் கொள்ளும்.

பொதுவாக எல்லாக் குழந்தைகளுக்குமே காச நோய் வருவதில்லை. வீட்டில் யாரேனும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருந்து அவர்கள் எந்நேரமும் இருமி, எச்சிலைத் துப்பி காசநோய் பரவுவதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ள இடத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கும்.

போதுமான ஊட்டச்சத்து இல்லாத நிலையில் வளரும் குழந்தைகளுக்கும்,

தட்டம்மை, சக்குவான், இருமல் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும்,

சுத்தமும், சுகாதாரமும் இல்லாத குழந்தைகளுக்கும் இந்த காசநோய் மிக எளிதாக வந்துவிடும்.

இந்நோய் இந்தியாவில் மட்டும் நூற்றுக்கு ஒருவர் என்ற கணக்கில் குழந்தைகளிடத்தில் பரவியுள்ளதென்றால், இதன் பரவும் வேகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்.


'காசநோய்க் கிருமிகள் பெரும்பாலும் காற்றின் மூலம் பரவுவதால், குழந்தைகள் சுவாசிக்கும் போது சுவாசக்குழல் வழியாகச் சென்று, நம் மார்பின் இரு பக்கமும் உள்ள நுரையீரல்களை வந்தடைகிறது. இங்குதான் கிருமிகள் பன்மடங்கு பெருகி காசநோயை உண்டாக்குகின்றன.

நாளடைவில் இக்கிருமிகள் இரத்தத்தின் மூலமாகவோ, நிணநீர் மூலமாகவோ உடம்பின் மற்ற உறுப்புகளுக்கு — அதாவது நிணநீர்ச் சுரப்பிகள், மூளை, சிறுகுடல், முதுகெலும்பு, இடுப்பெலும்பு போன்றவற்றுக்கு — பரவி சில மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

காசநோய்க்கிருமிகள் முதல் முறையாக குழந்தைகளின் உடம்பில் புகுந்து ஏற்படுத்தும் சில விளைவுகளை 'பிரைமரி காம்ப்ளெக்ஸ்' (Primary Complex) எனப் பெயரிட்டு அழைப்பர்.

அந்த விளைவுகளை இங்கே பார்ப்போமா?

ஓவியராகலாம்





காசநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பசி எடுக்காது. உடல் மெலியும். எடை குறையும். இருமல் வரும். அடிக்கடி சளி பிடிக்கும். விட்டு விட்டு காய்ச்சல் வரும். ஆகாரம் செரிக்காமல் பேதி ஆகும். இப்படியே சில மாதங்கள் தொந்தரவு செய்யும்.

ஆரம்பத்திலேயே மருத்துவரை அணுகி தகுந்த ஆலோசனைகளைப் பெறவிட்டால், குழந்தைகளிடம் நோய் முற்றி, தொடர்ந்து விடாமல் காய்ச்சலும் இருமலும் வந்து உடலை உருக்கிவிடும். இந்தக் கட்டத்தில் குழந்தைகள் எலும்பும் தோலுமாகத்தான் இருப்பார்கள். இதனால் இந்நோய்க்கு 'எலும்புருக்கி நோய்' என்ற காரணப் பெயரும் உண்டு.

காசநோயாக இருக்குமோ என சந்தேகிக்கும் குழந்தையை உடனே மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள். மருத்துவர் சில சோதனைகள் செய்த பின்பு, எக்ஸ்ரே, மாண்டோ டெஸ்ட் போன்றவற்றாலும் ரத்தம், சளியை சோதித்த பின்னரும் நோயினை உறுதி செய்வார்.

அதற்குப் பிறகு மருத்துவரின் ஆலோசனைப்படி வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

— காசநோய் என்று தீர்மானித்த பிறகு பாதிக்கப்பட்ட குழந்தையை குறைந்தது ஒரு மாதத்திற்கு பள்ளிக்கோ, வெளி இடங்களுக்கோ அனுப்பாமல் இருப்பது நல்லது.

— வீட்டில் நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ள அறையில் படுக்க வைக்க வேண்டும்.

— பூரண ஓய்வும், சத்துள்ள உணவும் அவசியம்.

— மற்றவர்கள் நலன் கருதி, நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் இருமும்போது முகத்தைக் கர்சீப்பால் மறைத்துக் கொள்ள வேண்டும். எச்சிலையும் சளியையும் தனியாக ஒரு குவளையில் சேகரித்து மொத்தமாக அதைத் தீயில் எரித்துவிட வேண்டும்.

— பாசத்தின் காரணமாக நோய் கண்ட குழந்தைகளுடன் அடிக்கடி பேசுவதையும், பழகுவதையும், முத்தமிடுவதையும் தவிர்க்க வேண்டும்.

— நோய் அறவே நீங்கும் வரை மருத்துவரின் ஆலோசனைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும்.

அதுசரி, டாக்டர், இந்நோயை வர விடாமல் தடுக்க வழிமுறைகள் இல்லையா என்றுதானே கேட்கிறீர்கள்?

இருக்கிறதே!

— குழந்தை பிறந்த முதல் ஒரு வாரத்திற்குள் பி.சி.ஜி. (B.C.G.) என்ற தடுப்பு ஊசியைப் போட்டுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் ஓரளவிற்கு காசநோய் வராமல் தடுத்துக்கொள்ளலாம்.

— கக்குவான் இருமல், தட்டம்மை போன்ற நோய்களுக்குரிய தடுப்பு ஊசிகளையும் முறையாகப் போட்டுக் கொள்ள வேண்டும்.

— கூடுமான வரையில் சத்துள்ள உணவு வகைகளை (பால், முட்டை, இறைச்சி, பருப்பு வகைகள், மீன், பழ வகைகள், காய்கறிகள், கோதுமை) நம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

— உங்களையும் உங்கள் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

— நோயாளிகள் உபயோகித்த பாத்திரங்கள், உடைகள் போன்றவற்றை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது.


— நோயாளி உங்களுக்கு நண்பனாக இருந்தாலும் கொஞ்ச காலத்திற்குப் பழகாமல் இருப்பது நல்லது.

காயும் பழமும்

"டேய், என் கை காய்ச்சுப் போச்சுடா."

"ஓகோ.... அப்ப எப்போ பழுக்கும்?"

— ஜி. கௌதமன் (12580)



வீண் புகழ்ச்சி



ஸரோஜா ரங்கராஜன்

நந்தகோபால் பெரிய தனவந்தர். செல்வம் அளவுக்கு மீறி இருந்தது. செருக்கும் அதற்கு மேலே இருந்தது. பிறர் தன்னை எப்போதும் புகழ வேண்டும் என்று நினைப்பார். அதற்காகவே தினம் தினம் லட்டும் புட்டுமாக, தடபுடல் விருந்து வைப்பார். விருந்தா அது! நீங்கள் போய்ச் சாப்பிட்டிருந்தால் சொல்வீர்கள். அத்தனை தடபுடல்!

வேண்டாம் வேண்டாம் என்று சொன்னாலும் கேட்காமல் இலையில் போடுவார். சாப்பிட முடியாமல் திணறிப் பாதிப் பேர் இலையிலேயே வைத்துவிடுவார்கள். லட்டும் வடையும் மீந்து கிடப்பது அவர் கண்களுக்கு விருந்தாகத் தெரியும். மகிழ்வார். இப்படிச் செய்வதற்கு ஒரு காரணம் இருந்தது அவருக்கு. பக்கத்து ஊரில் அவரது பழைய நண்பன் தனகோபால் சுமார் செல்வச் செழிப்பில் இருந்தான். அவன் ஏதோ தினம் பத்து பேருக்கு அன்னதானம் பண்ணினால் புண்ணியம் என்று பண்ணுகிறான் என்று பல பேர் புகழ ஆரம்பித்தார்கள்.

'நம்மை விடப் பதினாயிரம் மடங்கு தாழ்ந்த நிலையில் உள்ள தனகோபால் புகழ் அடைவதா?' என்று நந்தகோபால் நினைத்தார். அரை மைலுக்கு அவர் புகழ் பரவினால், ஆயிரம் மைலுக்கு அப்பால் தன் புகழ் பரவ வேண்டும் என்று நினைத்தார். பத்துப் பேர் அவர் வீட்டில் சாப்பிட்டால், நூற்றுப் பத்துப் பேரைத் தன் வீட்டில் சாப்பிட அழைப்பார்.

தனகோபால் வீட்டில் முதல் நாள் ஆமை வடை என்றால் நந்தகோபால் 'யானை வடை' (என்ன புதிதாக இருக்கிறதே என்று யோசிக்கிறீர்களா? வடை அத்தனை கனமாகப் பெரியதாகத் தட்டச் சொல்வார்.) போடுவார் இலையில்.

உண்டு போகிறவர்கள் எல்லாம், அடேயப்பா! இலையில் மீந்துவிடும் அளவுக்கல்லவா போடுகிறார்!' என்று சொல்ல வேண்டும். அவ்வளவுதான் அவர் ஆசை.

மலை போன்ற செல்வம் நாளுக்கு நாள் குறையலாயிற்று. 'இனியும் இப்படிச் செய்தால் ஓட்டாண்டியாகிவிடுவோம்' என்ற பயம் ஏற்பட்டது. ஆனால், தனகோபாலோ இன்னமும் தினமும் பத்து பேருக்கு உணவு போடுவதாகக் கேள்விப்பட்டார்.

"என்னய்யா ஆச்சரியம். அன்னதானம் படைத்துக் கெட்டுப் போனவன் இல்லை என்று புராணம் வேதமெல்லாம் சொல்கிறது. அன்னதான பலன் ஏழையாக்கிவிடும் என்று தெரிந்திருந்தால், இந்த அசட்டுக் காரியம் செய்து புகழ் சம்பாதிக்க ஆசைப்பட்டிருக்கமாட்டேனே! குறுக்கு வழியில், எப்படி எப்படியெல்லாமோ சம்பாதித்துப் புகழும் பெற்றிருப்பேனே!' என்று வருத்தமாகப் போய்விட்டது அவருக்கு.

'அந்தப் பரதேசிப் பயல் இன்னமும் நிறுத்தாமல் சாப்பாடு போடுகிறானே! அவனால் எப்படி முடிகிறது!' என்று ஆச்சரியப்பட்டார். 'நந்தகோபால் ஏழையாகிவிட்டார்' என்ற அவச்சொல் கிளம்புமோ எனத் தவித்தார். இப்படி இருக்கும்போதுதான், அந்த ஊருக்கு ஒரு சாமியார் வந்தார். நந்தகோபாலுக்கு ஒரு யோசனை வந்தது. சாமியாரிடம் கேட்கலாம். அன்னதானம் செய்பவர்கள் ஏழையாகத்தான் போவார்கள் என்றால் அதைநிறுத்திவிட்டுக் குறுக்கு வழிப் புகழில் இறங்கத் தீர்மானித்தார். சாமியார் இவரைப் பார்த்ததுமே புன்முறுவல் பூத்தார். வசீகரமான தோற்றம்.

முடி வெட்டுபவனுக்கும் (கண்டிப்பாகத்தலைகுனியாவிட்டால் ஆபத்து!) முழுமுதற் கடவுளுக்கு மட்டுமே தலைகுனியும் நந்தகோபால் அவரைக் கண்டதும் தலைகுனிந்து வணங்கினார் அதிசயமாக!

"உன் புகழையெல்லாம் கேள்விப்பட்டேனப்பா! உனக்கு என்ன குறை வந்தது?"

"ஐயோ சாமி! அநியாயமா வீணாப் போயிட்டேங்க! அன்னதான பலன் விசேஷ பலனைத் தரும்னு சொன்னாங்க. தினம் பெரிய நுனி இலை போட்டு லட்டும் புட்டுமா வாரி வாரி இலையிலே போட்டேங்க. இங்க முடியாமே எத்தனையோ பேர் எறிஞ்சுட்டுப் போவாங்க! இன்னம் கொஞ்ச நாளிலே நானே யார் வீட்டுக்காவது போற நிலைமை வந்துடிச்சே சாமி! அன்ன தான பலன் ஏழையாக்கிடுமா?"

நந்தகோபாலின் பதற்றத்தைச் சாமியார்கவனித்துச்சிரித்துக்கொண்டார்.

"அப்படியாப்பா! நாளை எனக்கு மட்டும் இத்தனை நாள் படைத்த மாதிரியே ஒரு விருந்து படையேன்! வழி சொல்லுகிறேன்!" என்றார் அந்தக் கிண்டாங்கிச் சாமியார். உடனே வழி சொல்லமாட்டாரோ!

மறுநாள். நந்தகோபால் இத்தனை நாள் எப்படிப் படைத்-



தாரோ அதே மாதிரி விருந்து படைத்தார். அவருடன் பலர் உண்டனர்.

விருந்து முடிந்தது. சாமியார் இலையில் பெரும்பகுதி மீந்திருந்தது. பெரு மகிழ்ச்சி நந்தகோபாலுக்கு. "ஐயா! விருந்திலே ஏதாச்சும் குறை உண்டுங்களா?" என்றார் பணிவாக.

"அடேயப்பா! இந்திரனால்கூட இப்படிப் போட முடியாதப்பா."

ரொம்ப செருக்கோடு, "அப்ப ஏன்னு நான் ஏன் ஏழையாகிக் கொண்டே வருகிறேன்?" என்றார்.

சாமியார் அன்போடு நந்தகோபாலை உட்கார்த்தினார். "இங்கே உள்ள இலைகளைப் பார்க்கும் போது நீ என்ன நினைக்கிறாய் என்பது புரிகிறது. இலையில் உணவு மிகுந்து போகும் அளவு உணவு போட்டால் புகழ் அதிகமாகும் என்று நினைக்கிறாய். அப்படித்தானே!"


சாமியாரின் பேச்சைக் கேட்டதும் நந்தகோபால் "ஆமாங்க!" என்றார்.

"அப்பா! அன்னதானம் செய்து ஏழையானவன் கதை புராணத்திலேயே இல்லையப்பா! ஆனால், அளவுக்கு மீறி, மற்றவர் புகழ வேண்டும் என்பதற்காக உணவுப் பொருள்கள் வீணாகும் வகையில் அல்லவா படைத்தாய்? லட்சுமி தேவிக்கே நீ பொருள்களை வீணடிப்பது பொறுக்கவில்லை. வயிற்றுக்கு அளவாக, தானத்திலே நிதானமாக உணவு படைத்திருந்தால் உன் செல்வம் இன்னும் பல ஆண்டுகளுக்கு வருமே! அதற்கும் நிதானம் வேண்டும். எதையும் தகுதிக்கேற்ப நிதானமாக, வீண் செய்யாமல் அளவோடு நடந்து கொள். உணவுப் பொருள்களை வீணடித்தால் இறைவனுக்கே அந்த அறத்தில் ஆனந்தம் இராது" என்றார்.

நந்தகோபால் விழித்துப் பார்த்தார்! (அங்கு கிடந்த இலைகளையும் தான்) வயிறார உணவு படைத்தல் தான் அறம் என்பதை அழகாகச் சொன்ன சாமியாரை நிமிர்ந்து பார்த்தார். "இவர் முகத்தில் என்ன தேஜஸ்! எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே!" என்று வேறு எண்ணிக் கொண்டே போய்விட்டார்.

அந்தச் சாமியார் வேறு யாரென்று நினைக்கிறீர்கள்? தனகோபால்தான்! வீண் புகழ்ச்சிக்காக உணவுப்பொருள் வீணாவதை நாள்தோறும் அவரிடம் பலர் சொல்லக் கேட்டுத்தான், சாமியாராகவந்து நந்தகோபாலுக்குப்புத்தி புகட்டினார்!

குழந்தைகளே! விருந்துகளுக்கு நீங்கள் போனால் கூட உங்களுக்குப் பிடிக்காததைப் போட்டு இலையில் எறியாதீர்கள். நாம் எறியும் உணவு எத்தனையோ ஏழைகள் வயிற்றுக்கு உணவாகும் அல்லவா? இலையில் எறிவது நாகரிகம் என்று நினைக்காதீர்கள்.



கர்வமும் மௌனமும்

ஏதோ பழுதுபட்டுவிட்டதால் வாசல் கதவுகள் இரண்டிலே ஒன்று வேலை செய்யவில்லை. இரண்டாவது கதவு கர்வத்துடன் நிமிர்ந்து நின்று, "நீ இல்லாவிட்டாலும் நான் நன்றாக வேலை செய்வேன். தெரிந்து கொள்" என்றது.

மற்ற கதவு மௌனமாக இருந்தது. அதற்குத் தெரியும் இரண்டில் ஒரு கதவை மட்டும் மூடினாலும், மூடாவிட்டாலும் விளைவு ஒன்றுதான் என்பது.

— துளசி அடிகளார்



அவன் வேண்டாம்

இரா. வசந்தராசன்

''அப்பா, நான் சொன்ன பையன் இவன்தாம்மா. இவனுக்கு உங்ககம்பெனியிலேஏதாவதுஒருவேலை போட்டுக் கொடுங்கப்பா.''

கண்ணன், தன் அப்பாவிடம் சீனுவைக் காட்டிக் கூறினான். மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்ட பரமசிவம் சீனுவை உற்றுப் பார்த்தார்.

''உன் பேர் என்ன?''

''சீனு!''

''உனக்கு அப்பா அம்மா இருக்காங்களா?

''இல்லீங்க, நான் ஒரு அநாதை. இப்ப நான் ஒரு ஓட்டலிலே சர்வர் வேலை செய்யுறேனுங்க. உங்க மகன் கண்ணன்கூட ஒன்பதாவது வரையிலும் படிச்சேங்க. அதுக்கு மேல வவுத்தைக் கழுவ இந்த வேலைக்கு வந்துட்டேனுங்க. ஐயா, மனசு வைச்சீங்கன்னா...''

''சரி, நீ போ. இன்னும் பத்து நாட்களிலேஎங்க ஆபீசுக்குஒருபியூன் போடலாம்னு இருக்கோம். அப்போ உன்னை நான் சிபாரிசு பண்றேன்.''

சீனு வணக்கம் செலுத்திவிட்டுப் போய்விட்டான்.

''ஏண்டா கண்ணா, இந்தப் பையனை சிபாரிசு பண்றியே, இவன் நேர்மையான பையனா?''

''என்னப்பா, இப்படிக் கேட்கறீங்க? ரொம்ப நல்ல பையனப்பா!''

''சரி, வருகிற ஞாயிற்றுக்கிழமை என்னை இவன் வேலை செய்கிற ஓட்டலுக்கு அழைச்சுக்கிட்டுப் போ...''

''சரியப்பா!''

ஞாயிற்றுக்கிழமை. மாலை ஐந்தரை மணி.

சீனுஓட்டலில்பம்பரமாகச்சுழன்று வேலை செய்து கொண்டிருந்தான்.

பரமசிவமும், கண்ணனும் நாற்காலிகளில் உட்கார்ந்தனர்.

''ஐயா, என்ன சாப்பிடுறீங்க?''

சீனு மிகவும் பணிவாகக் கேட்டான்.

"பஜ்ஜி, மசாலா தோசை, அப்புறமா காப்பி," சுருக்கமாகச் சொன்னார், பரமசிவம்.

சாப்பிடும்போது சீனு வேலை செய்யும் விதத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அவனது சுறுசுறுப்பு அவரைக் கவர்ந்தது. இந்த மாதிரி சுறுசுறுப்பான பையன்தான் பியூன் வேலைக்கு லாயக்கு. அவர் கண்களில் திருப்தி ஊஞ்சலாடியது.

அப்பாவின் முகபாவம் கண்ணனுக்குத் திருப்தி அளித்தது. தன் கூடப் படித்த நண்பனுக்கு ஏதோ இந்த அளவுக்காவது உதவி செய்ய முடிந்ததே என்ற மனநிறைவு அவனுக்கு.

"சீனு, வருகிற புதன்கிழமை நீ வீட்டுக்கு வா. எந்தத் தேதியிலே நீ வேலையிலே சேரணும் என்பதை என் ஆபீஸில் கேட்டுச் சொல்றேன்."

"ரொம்ப நன்றிங்க ஐயா. உங்க உதவியை நான் என்னைக்குமே மறக்க மாட்டேன்."

"பரவாயில்லே," என்று கூறியபடியே சீனு கொடுத்த பில்லை வாங்கி அதற்குப் பணம் கொடுக்க ஓட்டல் முதலாளியிடம் நகர்ந்தார் பரமசிவம்.

ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு, சினிமா பார்த்துவிட்டு, பரமசிவமும் கண்ணனும் வீடு திரும்பும்போது இரவு மணி பத்தாகிவிட்டது.

"கண்ணா, சீனுவை நீ மறுபடியும் பார்த்தால், புதன்கிழமை இங்கு வர வேண்டாம் என்று சொல்லிவிடு. நான் பியூன் வேலைக்கு வேறு யாரை யாவது போட்டுக் கொள்கிறேன். இந்தச் சீனு நேர்மையான பையன் இல்லே!"

"அப்பா! என்னப்பா இப்படிச் சொல்றீங்க?" கண்ணனுக்குத் தலையில் இடி இறங்கியது போல் இருந்தது.

"பின்ன என்ன, நாம இரண்டு பேரும் பஜ்ஜி, மசாலா தோசை, காப்பி எல்லாம் சாப்பிட்டோம். ஆனால், இந்தப் பையன் என்னைத் திருப்திப் படுத்த இரண்டு காப்பிக்கு மாத்திரம் பில் போட்டுத் தந்திருக்கிறான். பில் பணத்தைக் கொடுத்து வெளியே வந்த உடனே இதை உங்கிட்டே சொல்லி இருப்பேன். அப்புறம், உன்னாலே மகிழ்ச்சியாக சினிமா பார்த்திருக்க முடியாது. அதனாலேதான் இப்போ சொல்றேன்."

சீனுவிடம் நேர்மை இல்லாததால் அவன் ஒரு நல்ல வேலையை இழந்து விட்டான் என்ற உண்மை கண்ணனுக்கு இப்போதுதான் புரிய ஆரம்பித்தது!



பால் இனிப்பாயிருக்கிறது.
தேன் இனிப்பாயிருக்கிறது.
பழம் இனிப்பாயிருக்கிறது.

எல்லாம் இனிப்புத்தான். ஆனாலும், ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான இனிப்புச் சுவை கொண்டுள்ளது. இந்த வேறுபாட்டைக் கூறத் தக்க சொற்கள் இல்லை.

பழங்களில்தான் எத்தனை வகைப் பழங்கள்! வாழைப் பழம் ஒருவகை இனிப்பு; மாம்பழம் வேறு வகை; பலாப் பழம் மற்றொரு வகை.

மாம்பழத்தில்தான் எத்தனை ரகங்கள்! ஒவ்வொரு ரகமும் வெவ்வேறு சுவையுடையது.

வேறுபட்ட இச்சுவைகள் அனைத்தையும் நாம் இனிப்பு என்கிறோம்.

ஏன்? வேறு சொல் இல்லை!

இது தமிழ் மொழியில் உள்ள குறைபாடா? இல்லை. எல்லா மொழிகளிலும் உள்ள நிலை இதுதான்!

Sweet — ஆங்கிலம்
மதுரம் — சமஸ்கிருதம்.

— மா. சண்முக சுப்பிரமணியம் எழுதிய 'ஞானச் சுடர்' நூலிலிருந்து.

ஊர்ச் சிரிப்புகள்

எப்படி அடிபட்டது?

"வீடு கட்டும்போது அந்தக் கொத்தனுக்கு அடிபட்டு, ஆஸ்பத்திரிக்குப் போயிட்டார்."

"அவர் எந்த ஊரு? எப்படி அடிபட்டுச்சாம்?"

"செங்கல் பட்டு!"



பெயர் என்ன?



"இவனோட அப்பா பேரு மருதாசலம். இவன் பேரு துரை. அப்படியானால் இவனோட ஊரு?"


"இவனோட பேரை இனிஷியலோட சேர்த்துச் சொன்னால் வந்துடுமே!"

ரகசியம்

"அதோ இருக்கிறாரே, அவர் எந்த விஷயத்தையும் ரொம்ப ரகசியமாக வைத்துக் கொள்வார்!"

"அப்படியா! அவருடைய பெயர்?"

"சிதம்பரம்!"



கட்பாடி



"இந்தக் கட்பாடி நல்லா இருக்கே! எந்த ஊரிலே வாங்கினே?"

"காட்பாடியிலே!"

— அன்பிற்கினியவன்

பிருந்தாவனம்



என்று தணியும்

என்று தணியும் இந்த
சில்லறை தாகம்?

— இப்படி ஆலங்குடியில் ஒரு தேனீர் விடுதியில் எழுதப்பட்டிருந்தது; 'பாரதியார் இப்படிப் பாடவில்லையே!' என்றுகேட்டதற்கு,பாரதியார் தற்சமயம் உயிருடன் இருந்தால், சில்லறைத் தட்டுப்பாட்டின் சிரமத்தை உணர்ந்து இப்படித்தான் பாடுவார்' என்ற பதில் கிடைத்தது.

— அ. சாகிர் (5450), மழையூர்.

பஞ்ச தந்திரம்



பஞ்ச தந்திரக் கதைகளை நாம் படித்திருக்கிறோம். இதில் ஐந்து பாகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாகமும் ஒரு முக்கிய நீதியை எடுத்துக் கூறுகிறது. சமஸ்கிருதத்தில் உள்ள அந்த ஐந்து தந்திரங்களும் என்ன என்ன என்று தெரியுமா?

1. மித்திர பேதம் (நண்பரைப் பிரித்தல்),
2. மித்திரப் பிராப்தி (நண்பரை அடைதல்),
3. சந்தி விக்கிரகம் (அடுத்துக் கெடுத்தல்),
4. லப்தப் பிரஞ்சம் (பெரிய அழிவு),
5. அவிம்ருச்ய காரித்வம் (ஆராயாமல் செய்தல்).

— கே. நரசிம்மன் (7378), ஒசூர்.

ஆண்டாள் சூடிய மாலை

ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த ஸ்ரீ ஆண்டாள், சிறுமியாக இருந்த போது தான் சூடிய மாலையைப் பெருமாளுக்கு அணிவித்து, 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' யானாள். இப்போதும் தினமும் ஆண்டாள் சூடிய மாலையை, மறுநாள் காலை மேளதாளத்துடன் பக்கத்துக் கோவிலில் உள்ள பெருமாளுக்கு(வடபத்ர சயனர்)எடுத்துச் சென்று அணிவிக்கிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் சித்திரா பௌர்ணமியன்று, மதுரைக்கு ஆண்



டாள் 'சூடியமாலை' எடுத்துச்செல்லப் பட்டு, கள்ளழகருக்கு அணிவிக்கப் படுகிறது. அதேபோல், திருப்பதி வேங்கடேசப் பெருமாளுக்கு ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் நடைபெறும் 5 ஆம் திருநாளில் ஆண்டாள் சூடிய மாலை எடுத்துச் செல்லப் பட்டு அணிவிக்கப்படுகிறது. பூமாலையை ரயிலிலோ அல்லது தனி வாகனத்திலோ திருப்பதிக்குக் கொண்டு செல்கின்றனர்.

— க. ராஜா (8532), ஸ்ரீவில்லிபுத்தூர்.

அஸ்கா சர்க்கரை




சர்க்கரையை 'அஸ்கா' என்கிறோம். ஒரிஸ்ஸா மாநிலத்தில் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள அஸ்கா என்ற ஊரில்தான், இந்தியாவிலேயே முதன் முதலாகச் சர்க்கரை தயாரிக்கப்பட்டது. எனவே, அந்த ஊரின் பெயரே சர்க்கரைக்கு வைக்கப்பட்டது.

— ஜெ. மன்சூரா பேகம் (11531), மானாமதுரை.

வெடிக்கும் நேரம்

மேற்கு ஜெர்மனியில் அந்தக் காலத்தில் நேரத்தை எப்படி அறிந்தார்கள் தெரியுமா? சிறிய பீரங்கியொன்றில் வெடிமருந்தைத் திணித்து, அதன் மீது சாய்ந்த நிலையில் பூதக் கண்ணாடியைப் பொருத்தி வைத்தார்கள். சூரியன் வான உச்சிக்கு வரும்போது, பூதக்



கண்ணாடி வழியாக சூரிய ஒளி பாய்ந்து, வெடி மருந்து வெடிக்கும். அப்படி வெடிக்கும் நேரம் உச்சி நேரம் — 12 மணி என அறிந்து கொண்டார்கள்.


— பி. கதிர்வேலன் (9154), வேலூர் — 6.

அதிர்ஷ்ட எண் – 5

ஒருவன் ஒரு லாட்டரிச்சீட்டு வாங்கினான். அந்தச் சீட்டின் எண் 555555. அதில் அவனுக்கு 5 ஆயிரம் ரூபாய் விழுந்தது. உடனே அந்தப் பணத்துடன் அவன் ஊட்டிக்குச் சென்றான். அவன் வாங்கிய ரயில் டிக்கெட் எண் 5555. ஊட்டியில் ஒரு விடுதியில் தங்கினான். அவன் தங்கிய அறையின் எண் 5.

'அடடா! நமக்கு 5 மிகவும் அதிர்ஷ்ட எண்ணாக இருக்கிறது. இதை விடக்கூடாது' என்று நினைத்துக்கொண்டே, குதிரைப் பந்தயத்திற்குச் சென்றான். 5 ஆம் நம்பர் குதிரையின் மீது 5 ஆயிரத்தையும் கட்டினான். அந்தோ பரிதாபம். அந்தக் குதிரை 5 வதாக வந்து சேர்ந்தது!

— ஏ. அந்தோணி ராஜன் (8060), கோவை — 9.





நீளம் என்ன?

கோமதி இரண்டு ரிப்பன்கள் வைத்திருந்தாள். அந்த இரண்டில் ஒன்று மற்றதைக் காட்டிலும் இரண்டு மடங்கு நீளம். கோமதி ஒவ்வொரு ரிப்பனிலும் 6 அங்குலம் வெட்டி எடுத்தாள். இப்போது, ஒன்று மற்றதைப் போல் மூன்று மடங்கு நீளம் இருக்கிறது. அப்படியானால், கோமதி முன்பு வைத்திருந்த ரிப்பன் ஒவ்வொன்றின் நீளம் என்ன?


விடை: 24 அங்குலம்; 12 அங்குலம்.

— வி. குமரகுரு (7162), திருச்சி-1

முருக பக்தி

என் பள்ளி ஓவிய ஆசிரியர் முருகன் மேல் மிகுந்த பக்தி உடையவர். இவர் வீட்டிலுள்ள ஒவ்வொரு அறைக்கும் ஒரு பெயர் வைத்திருக்கிறார். ஓர் அறைக்கு 'திருச்செந்தூர்' என்றும், மற்றொரு அறைக்கு 'பழமுதிர் சோலை' என்றும் பெயர் வைத்திருக்கிறார். இதேபோல் மற்ற அறைகளுக்கும் பழனி, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, திருத்தணி என்று பெயர் சூட்டியிருக்கிறார்.

— எஸ். சிவராஜ் (22) மன்னார்குடி.



மாறிய சொற்கள்

1. காக்கைக்கும் தின்ன பொன் குஞ்சு
2. கரும்பு தன் குஞ்சு விழுந்தது போல
3. காக்கை உட்காரப் பனம்பழம் கூலியா?




என்னவென்று புரிகிறதா? பழமொழிகள். ஆனால், ஒவ்வொரு பழமொழியிலும் உள்ள சொற்கள் இடம் மாறி இருக்கின்றன. சொற்களை வரிசைப்படுத்தி, பழமொழிகளைக் கண்டு பிடியுங்கள்:

1. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
2. கரும்பு தின்னக் கூலியா?
3. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது.

— பெ. வெங்கடலட்சுமிகாந்தன் (13367), கடம்பூர்.

பழுது பார்த்தவள்

ஒரு தடவை பெரிய தபால் அலுவலகம் ஒன்றில் இருந்த ஒரு டெலிகிராப் இயந்திரம் பழுதடைந்து விட்



டது. அதை இயக்குபவர் அது இனி மேல் பயன்படாது என்று கூறிவிட்டார். அப்போது ஒரு சிறுவன் (வயது 16 இருக்கும்). அங்கு வந்திருந்தான். அவன் முன்னரே அவ்வியந்திரத்தைப் பற்றி அறிந்திருந்தான். ஆகையால், அதைத் தான் பழுது பார்த்துத் தருவதாக வேண்டினான். அவரோ அவனை ஏளனமாகப் பார்த்துவிட்டு அரை மனத்துடன் சம்மதித்தார். அவனும் அந்த இயந்திரத்தைப் பழுது பார்த்து, அது நன்றாக இயங்கும்படி செய்தான். அவன்தான் பிற்காலத்தில் பெரும்புகழ்பெற்ற விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன்!

— ச. சந்திரசேகர் (7615), நெய்வேலி.

அம்பலம்




"செல்வர் பொன்னம்பலம் வீட்டில் ஏன் இவ்வளவு கூட்டம்?"

"அதுவா? அவர் பதுக்கி வைத்திருந்த பொன் அம்பலம் ஆகிவிட்டது."

— வி. மோகன்தாஸ் (10,083), மண்ணச்சநல்லூர்.

யார்? யார்?

1. காட்டுக்குள்ளே கறுப்பன் கவசம் ஏந்தி நிற்கிறான். அவன் யார்?
2. உருவத்தில் சிறியவன்; உழைப்பதில் வல்லவன். அவன் யார்?



3. கண்ணுக்குப் பெரியவன் சின்னக் கண்ணன். அவன் யார்?
4. ஒற்றைக் காலாலே, நான்கு கீற்றாலே பந்தல் போட்டாளே. அவள் யார்?

விடை: 1. பனைமரம், 2. உளி, 3. யானை, 4. அரைக்கீரை.

— ஒகூர் ராஜகணேஷ் (12,504), ஒகூர்.


என்ன காரணம்?

ஒரு பையன்: (தன் வலது கையைக் காட்டி) எங்களுடைய அப்பா இந்தக் கையால் கையெழுத்துப் போட மாட்டார்.

மற்றொருவன்: அப்படியா? அப்படியானால், அவர் இடது கையால்தான் போடுவாரா?


முதல் பையன்: இது என் கை. அவர் எப்படி இந்தக் கையால் போடுவார்?

— டி. கோபாலகிருஷ்ணன் (13,051), நங்கைநல்லூர்.



நல்ல புத்தி

நெல்லை வடிவு



"டீ... காப்பி..." என்று தியாகுவின் குரல் கேட்டால் காலை மணி ஆறு என்று அர்த்தம். சரியாக ஆறு மணிக்கு டீ, காப்பி தட்டுடன் அந்த விடுதிக்குள் நுழைவான். காலை ஆறு மணியில் இருந்து எட்டரை மணிக்குள் முப்பது தடவையாவது அந்த விடுதியைச் சுற்றி வந்துவிடுவான்.

'முருகன் மான்ஷன்' நூறு அறைகளைக் கொண்ட பெரிய விடுதி. அறைக்கு ஐந்து நபர்கள் வீதம் ஐந்நூறு பேர்கள் அந்த விடுதியில் மாத வாடகையில் இருக்கிறார்கள். எல்லோரும் அரசாங்க அலுவலகங்களில் வேலை பார்க்கும் வாலிபர்கள்.

விடுதிக்கு எதிர்ப்புறம் இருக்கும் ஹோட்டலில் வேலை பார்ப்பவனே தியாகு. பதினைந்து வயது இருக்கலாம். காலை, மாலை அந்த விடுதியில் இருப்பவர்களுக்கு டீ, காப்பி, டிபன் கொடுப்பதே தியாகுவின் வேலை. அந்த விடுதியில் தங்கியிருக்கும் அனைவரும் அந்த ஹோட்டலில் கணக்கு வைத்திருப்பவர்களே. அத்தனை பேருடைய கணக்கின் நம்பரும், பெயரும் அவனுக்கு அத்துப்படி. 'அதிகமாக எழுதிட்டான்; குறைச்சு எழுதிட்டான்' — இப்படிப் புகாரே அவன் மீது வந்தது கிடையாது! வேலையிலும் சிட்டுக்குருவியைப் போன்ற சுறுசுறுப்பு! 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற பழமொழிக்கு இலக்கணமானவன். இத்தனைக்கும் அவன் எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தவன். குடிப்பதை தினமும் வேலையாகக் கொண்டவர் ரிக்ஷா ஓட்டும் அவன் அப்பா. அவனுடைய அப்பாவை நினைத்து நினைத்து நொந்து நோயாளியானார் அம்மா. இவர்களுக்கு ஒரே மகனை தியாகு. குடும்பச் சூழ்நிலையால் பிளஸ்—2 வை அடைய முடியவில்லை.

மாதம் நூறு ரூபாய்; மூன்று வேளை சாப்பாடு. இதுவே அவனுடைய வருமானம். சம்பளப் பணத்தில் அம்மாவுக்காகக் கொடுத்தது போக மீதிப் பணத்தை டைப், ஷார்ட் ஹாண்டு படிப்பதற்குப் பயன்படுத்துவான். இரவு எட்டு மணிக்கு வேலையை முடிப்பான்; டைப் இன்ஸ்டிடியூட் போய் விட்டு வீட்டுக்கு அவன் படுக்கப் போகும் போது மணி பத்தரைக்குக் குறையாது.

நான் அந்த விடுதிக்கு வந்த நாள் முதல் அவன்மேல் எனக்கு இனம் புரியாத பாசம் ஏற்பட்டுவிட்டது. அவனை 'தம்பி' என்று கூப்பிடுவதில் தனித் திருப்தி உண்டாயிற்று.

"டேய்," "வாடா," "போடா" "தடியா," "பொடியா" என்ற

அழைப்பு ஒலிகள் மூலம்தான் அவனை அனைவரும் அழைப்பது வழக்கம். அதுவும், என் நண்பர் முத்து பற்றிச் சொல்லவே வேண்டாம். எட்டு மணிக்கு எழுந்திருப்பார். "ஏண்டா எந்திரிச்சதும் காப்பி கொண்டு வரலை" என்பார். காரணமில்லாமல் 'முதுகுத் தோலை உறிச்சுடுவேன்!' 'பல்லை உடைச்சுடுவேன்!' என்பார்.

அன்று எட்டரை மணிக்கு எழுந்த முத்து, "இன்னும் இந்தக் காப்பிக் காரப் பொடியனைக் காணோம். எங்கே தொலஞ்சான்?" என்றார்.

"அவனுக்கு எட்டரைக்கெல்லாம் வேலை முடிஞ்சுடும்; அனேகமா வீட்டுக்குப் போயிருப்பான்; நீங்க வெளியிலே போய்த்தான் சாப்பிடணும். ஆமா, என்ன இன்னைக்கு லீவா? இவ்வளவு நேரம் தூங்கிட்டீங்க?" என்றேன்.

"ஆமா, லீவு போட்டிருக்கேன்."

"என்ன விஷயம்?"

"சும்மாதான்" — சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீங்க?"

"பனியனெல்லாம் கிழிஞ்சு போச்சு."

"பனியன் கிழிஞ்சா, நேத்தே வாங்கிட வேண்டியதுதானே!"

"காசு கொடுத்து யார் வாங்குவா? அதான் லீவு போட்டிருக்கேன்."

"ஒண்ணும் புரியலையே."

"அதாவது நான் எப்பவும் பனியன் ஜட்டிகளெல்லாம் வாங்கறதில்லே. ஒரு நாள் லீவு போட்டு நம்ம லாட்ஜை ஒரு சுத்து சுத்துவேன். எல்லாரும் தொவச்சு வெளியிலேதான் காயப் போடுறாங்க. அளவு பாத்து எடுத்துக்கிடுவேன். அதைத்தான் அஞ்சு வருஷமா செஞ்சுக்கிட்டு இருக்கேன். ஒரு பய இதுவரைக்கும் கண்டுபிடிக்கலே" — வெற்றிப் பெருமிதத்துடன் கண்ணைச் சிமிட்டினார்.

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவர் சட்டையைப் போட்டுக்கொண்டு காப்பி சாப்பிடக் கிளம்பிவிட்டார். நானும் சிறிது நேரத்தில் அறையைப் பூட்டிவிட்டு ஆபீஸ் கிளம்பினேன்.

டவுன் பஸ்ஸில் ஏறி டிக்கெட் வாங்க பர்ஸை எடுக்கும் போது மனசு பகீரென்றது. பர்ஸை பேண்ட் பாக்கெட்டில் காணவில்லை. அறையில் சூட்கேஸில் இருந்து எடுத்து வைத்தது நன்றாக நினைவு இருக்கிறது. பஸ்ஸில் ஏறி மூன்று நிமிடம் கூட ஆகவில்லை. அதற்குள்... ஒரே குழப்பமாக இருந்தது. அடுத்த ஸ்டாப்பில் இறங்கி விடுதிக்குத் திரும்பினேன். விடுதிக்குள் நுழைந்ததும் எதிர்ப்பட்டவன் 'தம்பி தியாகு.

"ஸார், உங்க பர்ஸு இந்தாங்க. வீட்டுக்குக் கிளம்பும்போது, உங்க ரூம் மெட்டுக்குக் காப்பி தரலேங்கிறது ஞாபகம் வந்திச்சு. காப்பி எடுத்துக்கிட்டு உங்க ரூமுக்குப் போனேன். ரூம் சாத்தியிருந்திச்சு. வாசலுக்குக் கீழே பர்ஸ் கிடந்திச்சு. உங்க போட்டோ பர்ஸில் இருந்ததாலே உங்களுடையதுதான்னு தெரிஞ்சுக்கிட்டேன்."

உடனே நான் என் பர்ஸைப் பெற்றுக் கொண்டு, அவனை நன்றியுடன் முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டினேன். அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்த ஐந்து ரூபாய் நோட்டை நான் எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் வாங்க மறுத்துவிட்டான்!

பாங்கில் கைநிறையச் சம்பளம் பெறுபவர் முத்து. பனியன் கிழிந்து விட்டால்வாங்கமாட்டாராம். அடுத்தவர்களின் பனியன்களைத் திருடி வைத்துக் கொள்வேன் என்று கூசாமல் சொல்கிறார். கேவலமான செயலைத் தைரியமாகச் செய்கிறார். காப்பிக் கடையில் நூறு ரூபாய் சம்பளத்தில் வேலை பார்க்கும் சிறுவனுக்கு, எடுத்த பர்ஸை உரியவரிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற உயர் எண்ணம்! இரண்டு பேரையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.


பெரிய வேலை — சின்ன புத்தி
சின்ன வேலை — நல்ல புத்தி

"எத்தனை பெரிய மனிதருக்கு எத்தனை சிறிய மனமிருக்கு" என்று எங்கோ வானொலியில் திரைப்பாடல் ஒலித்தது சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருந்தது!

உங்களுக்குத் தெரியுமா?

கேலாகோஸ் தீவுகளில் வாழும் கடற்பல்லிகள் ஒன்றுக்கு நேர் நின்றும், தலையின் மேட்டையும் ஒன்றை ஒன்று தாக்கி மேலே தள்ளி தனது வலிமையைக் காட்டும்.






கந்தக கடல் பாசி என்பது ஒரு உயிரினம். கடலிலுள்ள சங்கு, சிப்பிகளைக் கரைய வைத்து, மீண்டும் மலப் - பொருளான கால்சியமாக மாற்றும் ஆற்றல் படைத்ததாம்.

விமல்



ஹெர்மிட் நண்டு என்ற நண்டுடன் சிப்பியோடும், கடற்பஞ்சு ஒன்றியும், ஓட்டின் உள் கடற்புழுவும் வாழும். அப்புழு ஓட்டினை துப்புரவு செய்யும் வேலையைச் செய்யுமாம்.

ஜெர்மனி நாட்டு பிளாக் ஃபாரஸ்டில் என்ற பாறைகள் மீது பூகோளப் படங்கள் வரைந்தது போன்ற பாசி இனத்தை — பூகோளப் பாசிகள் என்பார்களாம்.






காலிங் ஹேயர் என்ற முயல் ஆட்டினைப் போல் கத்தும். வயிற்றிலிருந்து வரும் ஒலி பலதிசைகளிலிருந்து வருவது போலத் தோன்றுமாம்.



பாலூட்டி மிருகங்களில் மிக அதிக குட்டிகளைப் பெறும் ஒரே இனமான டென்ரிக்காடி, ஒவ்வொருமுறையும் 32 குட்டிகள் வரை போடுமாம்.

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras—600 032.
(Phone: 431543)
Editor: K. Rajendran.



நாவலர்

சோம சுந்தர பாரதியார்

தோற்றம் : 27-7-1879 மறைவு : 14-12-1959

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka